கருநாடக அரசு

# சமூக அறிவியல்

# SOCIAL SCIENCE

## Textbook

## பாகம் – 2

# 8

## எட்டாம் வகுப்பு

## 8th Standard

NOT TO BE REPUBLISHED
@KTBS

ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ.)
6ನೇ ಅಡ್ಡ ರಸ್ತೆ, ಮಲ್ಲೇಶ್ವರಂ,
ಬೆಂಗಳೂರು – 560 003.

# பொருளடக்கம்

S6V5A5


| வ. எண். | பொருள் | ப.எண் |
|---|---|---|
| | வரலாறு | |
| 16. | மௌரியர்கள் மற்றும் குஷாணர்கள் | 1 |
| 17. | குப்தர்கள் மற்றும் வர்த்னர்கள் | 8 |
| 18. | தென்னிந்திய வம்சங்கள், சாதவாகனர், கடம்பர், கங்கர் | 17 |
| 19. | பாதாமியின் சாளுக்கியர்கள் மற்றும் காஞ்சிப் பல்லவர்கள் | 28 |
| 20. | மான்யகேதாவின் ராஷ்ட்ர கூடர்கள் மற்றும் கல்யாணா சாளுக்கியர்கள் | 38 |
| 21. | சோழர்களும், துவாரசமுத்திராவின் ஒய்சாளர்களும் | 48 |
| | அரசாங்கம் | |
| 22. | மக்களாட்சி (குடியரசு) | 57 |
| 23. | உள்ளாட்சிகள் அரசங்கங்கள் | 68 |
| | சமுகவியல் | |
| 24. | அன்றாட வாழக்கையில் சமுகவியல் | 88 |
| 25. | சமுகத்தின் வகைகள் | 92 |
| | புவியியல் | |
| 26. | நீர்க் கோளம் | 97 |
| 27. | உயிர்க் கோளம் | 109 |
| | பொருளியில் | |
| 28. | பொருளியலின் அடிப்படைக்கருத்து | 119 |
| | வணிகவியல் | |
| 29. | பல்வேறு வணிக நிறுவணங்களின் தோற்றம் | 131 |
| 30. | பேரளவு தொழில் வணிக நிறுவனங்கள் | 141 |


@KTBS NOT TO BE REPUBLISHED

M8K7X5

பாடம் 16

# மௌரியர்கள் மற்றும் குஷாணர்கள்

**இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன:**

- *இந்தியாவின் முதல் பேரரசு மௌரியப் பேரரசு என அறிதல்*
- *மௌரியப் பேரரசின் புகழ் பெற்ற பேரரசனான அசோகனின் சாதனை, நிர்வாகம், கலை மற்றும் கட்டிடக்கலைக்கான பங்களிப்புகள் பற்றி அறிதல்.*
- *குஷாணர்களின் வரலாறு, கனிஷ்கரின் நிர்வாகம் மற்றும் பங்களிப்புகள் பற்றி அறிதல்.*
- *இந்தியாவில் அசோகருடைய பேரரசின் பகுதியைக் கண்டறிதல் (வரைபடத்தில் குறித்தல்)*

@KTBS NOT TO BE REPUBLISHED

## மௌரியப் பேரரசு :

மௌரியப் பேரரசுதான் முதல் இந்தியப் பேரரசு. அவர்கள் மகதத்திலிருந்து ஆட்சி செய்தனர் சந்திரகுப்த மௌரியர், பிந்து சாரர் மற்றும் அசோகர் ஆகியோர் இந்த வம்சத்தின் முக்கிய மன்னர்கள். இந்த வம்சம் சந்திரகுப்த மௌரியரால் நிருவப்பட்டது கிரேக்கத் தூதுவர் மெகஸ்தனிஸ் சந்திரகுப்தரின் புகழை 'இண்டிகா' வில் பதிவு செய்து, அவற்றை அழியாதவையாக்கினர். இந்த பதிவுகள் தொலைந்து போனதால் 'இண்டிகா' வின் உள்ளடக்கம் நமக்கு கிடைக்கவில்லை, ஆனால் சில கிரேக்க எழுத்தாளர்களின் படைப்புகளில் சில விளக்கமான பகுதிகள் காணப்படுகின்றன. சந்திரகுப்தனின் அமைச்சராக இருந்தவர் விஷ்ணுகுப்தர். இவரை கௌடில்யர், சாணக்கியர் என்றும் பரவலாக அழைக்கப்பட்டார். அவரது கருத்துக்கள் 'அர்த்தசாஸ்திரம்' என்ற படைப்பில் விவரிக்கப்பட்டுள்ளன.

**அர்த்த சாஸ்திரம்**

*1902*-ல் மைசூரின் ஓரியண்டல் நூலகத்தில் ஆர், சாமாசாஸ்திரி அவர்கள் கௌடில்யன் எழுதிய அர்த்த சாஸ்திரத்தின் கையெழுத்துப் பிரதியை கண்டு பிடித்தார். இது மேற்கத்திய உலகம் கண்டு கொண்ட அர்த்தசாஸ்திரத்தை விட வேறுபட்டு இருந்தது. கௌடில்யனின் அர்த்த சாஸ்திரத்தில் நாட்டை ஆட்சி செய்யும் முறைகள் அரசன், பிரதமர் மற்றவர்களின் பொறுப்புகள் வெளிநாட்டு உறவுகள் நிதி நிர்வாகம் பற்றி கலந்துரையாடப் பெற்றுள்ளன. ஒற்றறிதல் துறை (உளவு) படை அமைப்புமுறை பற்றி சிறப்பான அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கௌடல்யரின் அர்த்தசாஸ்திரம் அதன் தனித்தன்மையால் அறிஞர்களை ஈர்த்து வருகிறது.

**அசோக சக்கரவர்த்தி :**

அசோகர் இந்த வம்சத்தின் புகழ் பெற்ற அரசர் இந்த காலக்கட்டத்தில் ஐந்து முக்கிய நகர மையங்களை அடையாளம் காணலாம். அவை மௌரியர்களின் தலைநகரமான பாடலி புத்திரம், தக்ஷசீலம், உஜ்ஜியினி, கலிங்கம் மற்றும் சுவர்ணகிரி ஆகும். இவை முக்கிய இணைப்பு வழிகளாகவும் இருந்தன, வடமேற்கு இந்தியாவின் நுழைவாயியாக தக்ஷசீலம் இருந்தது உஜ்ஜயினி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வர்த்தகம் செய்வதற்கான பாதையாக இருந்தது. கங்கை நதியின் வழியாக கடலுக்குச் செல்லும் நுழைவாயில் கலிங்கம், சுவர்ணகிரி டெக்கான் பகுதியில் அதாவது நவீன கர்நாடகாவில் இருந்தது, இந்தப் பகுதிகள் அனைத்தும் வர்த்தகப் பாதைகளாகவும். ஒன்றொடொன்று தொடர்பில் இருதவையாகவும் இருந்தன.

**கலிங்கப் போர்**

முடி சூடப்பட்ட 8 ஆண்டுகளுக்குப் பிறகு, அசோகர் கலிங்கத்தை வென்றார். இந்தப் போரில் சுமார் 15,000 வீரர்கள் கைபற்றப்பட்டனர். போரின் போது சுமார் 1,00,000 போர் இறந்தனர். போரினால் ஏற்பட்ட மரணத்தையும் துன்பத்தையும் கண்டு, பேரரசர் அசோகர் மனம் நெகிழ்ந்தார். சக மனிதர்களுடன் பரிபூரண இணக்கமாக இருந்து, எளிமையான, நல்லொழுக்கமான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த எண்ணற்ற, அப்பாவி மக்கள் இறந்து விட்டார்கள் அல்லது காயப்பட்டு தங்கள் அன்புக்குரியவர்களை விட்டுப் பிரிந்திருப்பதை உணர்ந்து அவர் வருத்தப்பட்டார். கலிங்கத்தை வென்ற பிறகு, அசோகர் வருத்தமடைந்து வருந்தி ‘‘தர்ம’’த்தால் ஈர்க்கப்பட்டு அமைதியை நிலைநாட்டினார்.

©KTBS NOT TO BE REPUBLISHED




அசோகர் தனது பரந்த பேரரசை பல்வேறு மகாணங்களாகப் பிரித்து ஆட்சி செய்தார். அவரது அரசியல் கெள்கைகள் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவைதான் நமக்கு கிடைத்த பழமையான கல்வெட்டுகள், இவற்றில் அசோகரின் 'தேவனம்பரியா' மற்றும் 'பிரியதர்ஷி' என்ற பட்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனை. கலிங்கப் போருக்கு பிறகு ஏற்பட்ட பெரும் உயிரிழப்புகளைப் பார்த்து அசோகர் மனமாறினார். புத்தர் போதித்த 'கருணை' அசோகரைக் கவர்ந்தது. புத்திரின் போதனைகளை நாடு முழுவதும் பரப்பினார். இதற்காக தர்ம மகாமாத்ராக்களை நியமித்தார். தேர்மத்தைப் பற்றிய அவரது கருத்துக்கள் அவரது ஆணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவை அசோகரின் தர்மம் என்று நன்கு அறியப்பட்டவை.

NOT TO BE REPUBLISHED @KTBS

இக்காலத்தில் வார்த்தகம் மற்றும் விவசாயத்தில் பரந்த முன்னேற்றங்களை நாம் காண்கிறோம். விவசாயத்தை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து வந்தது இதற்காக சிறப்பு வரிச்சலுகைகள் வழங்கப்பட்டன. பரந்த பேரரசின் நிர்வாகத்தை பார்த்துக்கொள்ள பல அதிகாரிகள் இருந்தனர். ஒரு நிரந்தர இராணுவ படைத் தேவைப்பட்டது.



நான்கு சிங்கங்கள், பீடத்தில் வசீகரமான தர்ம சக்கரம்

இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் செயல்படுத்த வரி தேவை. நிலவரி அரசருக்கு முக்கிய வருமான ஆதாரமாக இருந்தது. மற்றும் பல்வேறு அதிகாரிகள் வரி வசூலிப்பதில் பணியாற்றினர். ஒற்றர்கள் அரசருக்குத் தகவல் கொடுத்தனர். அவர்கள் கடல் மற்றும் தரை வழிகள் மூலம் வியாபாரம் மற்றும் வர்த்தகத்தின் மீது கட்டுப்பாட்டை நிறுவினர். இதற்காக பல்வேறு வரிகள் விதிக்கப்பட்டன.

அசோகர் பிறபித்த அரசாணைகள் பல பிராகிருத மொழியில் உள்ளன. அவை, பிராமி எழுத்தில் உள்ளன. கர்நாடகாவில் சித்ரதுர்கா மாவட்டத்தில் உள்ள பிரம்ம கிரியில் அசோகனின் பாறைக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அசோகரின் சாரநாத் தூணின் சின்னத்தை இந்தியாவின் தேசிய சின்னமாக பயன்படுத்துகிறோம்.

## குஷாணர்கள்

கிரேக்கர்களுக்குப் பிறகு இந்திய வரலாற்றில் மேலும் கலாச் சாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியவர்கள் குஷாணர்கள் ஆவர். பௌத்த சமயத்திற்கு சிறப்பான ஊக்குவித்தனர். மஹாயானம் இவர்களுடைய ஆதாரவில் அதிக முன்னுரிமைப் பெற்றது. காந்தார சிற்பகலை அவர்களால் வளர்ச்சியடைந்தது.

மௌரியர்களுக்குப் பிறகு காணப்படும் முக்கிய அரச வம்சம் குஷாணர்களுடையதாகும். மத்திய ஆசியாவிலிருந்து

©KTBS NOT TO BE REPUBLISHED

இந்தியாவிற்க்கு குடிபெயர்ந்து வந்த நாடோடி இனத்தின் மூலம் வந்தவர்களே குஷாணர்கள். இவர்கள் யூச்சி வழிவந்தவர்கள். இதே காலத்தில் சாகர்கள் மற்றும் பார்த்தியர்கள் வடமேற்க்கு பகுதியில் நிலைத்திருந்தனர். இவர்கள் அயல் நாட்டு சமூகங்களாக இருந்தனர். குஷாணர்கள் சாகர்கள் மற்றும் பார்த்தியர்களை தோற்கடித்து காந்தாரப் பிரதேசத்தில் நிலைத்திருந்தனர்.



காந்தார பாணியில் புத்தர்

குஜலகட்பீஸஸ் இவ்வம்சத்தை ஸ்தாபித்தவர் விமக்கிட் பீஸஸ் மற்றும் கனிஷ்கர் இவ்வம்சத்தின் முக்கிய அரசர்கள் - யூச்சிகள் முதன்மையான பழங்குடிகளை சேர்ந்தவர்கள் - இவர்கள் இந்துகுஷ் மலைகளைக் கடந்து காபூல் மற்றும் காஷ்மீரத்திலிருந்து வந்து குடியேறினர் - விமக்கிட் பீஸஸ் காலத்தில் தங்க நாணயங்களை வெளியிட்டனர் அன்றிலிருந்து குஷாணர்கள் தங்கம் மற்றும் செம்பு நாணயங்களை அச்சிட்டனர்.

NOT TO BE REPUBLISHED @KTBS

விமக்கட்பீஸ்ஸிற்குப் பிறகு கனிஷ்கர் ஆட்சிக்கு வந்தார். இவரது ஆட்சிக் காலத்தில் குஷான் வம்சம் சிறப்பாக வளர்ந்தது. அவர் தனது ஆட்சியை 78C.E இல் நிறுவினார் மற்றும் ஒரு புதிய சகாப்தத்தை அறிவித்தார் - இந்த சகாப்தம் 'சகா' சகாப்தம் என்று அழைக்கப்படுகிறது.

கனிஷ்கரின் ஆட்சி தெற்கில் சாஞ்சி மற்றும் கிழக்கில் பனாரஸ் வரை பரவியிருந்தது மத்திய ஆசியாவையும் உள்ளடக்கிய அவரது அரசு ஒரு பரந்த பேரரசாக இருந்தது. புருஷபுரா

அவரது தலைநகரமாகும். மதுரா அவரது காலத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க நகரமாகும்.

கணிஷ்கர் அளித்த அனுசரணையின் காரணமாக புத்த சமயம் முன்பை விட அதிகமாக செழிக்க முடிந்தது. நாகார்ஜுனா, அஸ்வகோஷா, வசுமித்ரா சங்கரக்ஷா போன்ற பல பௌத்த அறிஞர்களை இந்த காலத்தில் நாம் பார்க்கிறோம். நான்காவது பௌத்த மாநாடு காஷ்மீரில் கனிஷ்கரின் தலைமையில் நடைபெற்றது. அசோகரைப் போலவே, கனிஷ்கரும் கூட மத்திய ஆசியாவிற்கும் சீனாவிற்கும் பௌத்த சமயத்தை பரப்புவதற்காக சமய போதகர்களை அனுப்பினார் அவரது ஆட்சியில் கலை மற்றும் கட்டிடக் கலை ஊக்கம் பெற்றது.

| பௌத்த மாநாடுகள் | | | |
|---|---|---|---|
| மாநாடுகள் | ஆதரவு | இடம் | தலைமை |
| முதல் மாநாடு | அஜாதசத்ரு | ராஜகிரிஹா | மஹகஷ்யப் |
| இரண்டாம் மாநாடு | காலாஷோகா | வைஷாலி | சபாகாமி |
| மூன்றாம் மாறாடு | அசோகர் | பாடலிபுத்ரா | மொக்கலிப்புத்த திஸ்ஸா |
| நான்காம் மாநாடு | கனிஷ்கர் | குண்டல்வன் | வசுமித்ரா |

NOT TO BE REPUBLISHED ©KTBS

## பயிற்சிகள்

**I. பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி பின்வரும் வாக்கியங்களை முடிக்கவும்.**

1. சாணக்கியர் ____________ என்று அழைக்கப்பட்டார்.
2. மௌரியர்களின் அரசை நிறுவியவர் ____________ .
3. குஷானர்களின் அரசை நிறுவியவர் ____________ .
4. கனிஷ்ர்கரின் ஆட்சியின் புதிய சகாப்தத்தை ____________ என்று அழைப்பர்.

**II. சுருக்கமாக பதிலளிக்கவும்:**

5. அசோகர் காலத்தின் முக்கிய நகரங்களை குறிப்பிடவும்.
6. அசோகரின் நிர்வாகத்தை விவரிக்கவும்.
7. குஷாணர்கள் எந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள்.
8. கனிஷ்கரின் ஆட்சி விரிவு எவ்வெவ்விடங்ககளுக்கு பரவியது.

**III. செயல்பாடு :**

1. காந்தாரக் கலையைப் பற்றி அதிகமான செய்திகளை சேகரிக்கவும்.
2. கனிஷ்கர் காலத்தில் நடந்த பௌத்த மாநாடு பற்றி உங்கள் ஆசிரியரிடமிருந்து அதிக விவரங்களை பெற்றுக் கொள்க.

@KTBS
NOT TO BE REPUBLISHED

| பாடம் 17 | குப்தர்கள் மற்றும் வர்த்தனர்கள் |
|---|---|

B2B6F9

**இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன:**

- *குப்த பேரரசின் புகழ்பெற்ற அரசர்கள், பேரரசின் விரிவாக்கம் மற்றும் வளர்ச்சி குறித்து அறிதல்.*
- *குப்த பேரரசர்கள் இலக்கியம் மற்றும் அறிவியலுக்கு ஆற்றிய தொண்டுகள் குறித்து அளிதல்.*
- *வர்த்தமானர்களின் வளர்ச்சியும் அவர்கள் கலைக்கும் கல்விக்கும் ஆற்றிய அருந் தொண்டுகள் அறிதல்.*
- *இந்திய வரைபடத்தில் குப்த பேரரசின் விரிந்த எல்லைகளை குறிப்பிடுதல்.*

பல நூற்றாண்டுகளாக அரசியல் நிச்சயமற்ற நிலையில் குப்தர் பேரரசு C.E 4ஆம் நூற்றாண்டில் எழுந்தது. சமஸ்கிருத மொழியில் அதன் மதத்தான இலக்கியங்களும் இந்தக் காலக் கட்டத்தின் கண்ணாடி ஆகும். குப்தர்கள் மகதத்திலிருந்து வந்திருக்கலாம். முதலாம் சந்திரகுப்தன் லிச்ச ாவி இளவரிசியை மணந்து தனது அரசை பலப்படுத்தினான். 320 C.E இல் குப்தர் சகாப்தம் தொடங்கியதாக நம்பப்படுகிறது. அவர் மகாராஜாதி ராஜா என்று அழைக்கப்பட்டார்.

@KTBS NOT TO BE REPUBLISHED



அவருக்குப் பிறகு அவருடைய மகன் சமுத்திரகுப்தன் அரசனான். பார்க்கிறோம். ஹரிசேனா எழுதிய பிராயக பிரஷ்ஸ்தியில் அவரது சாதனைகள் நினைவு கூறப் பட்டுள்ளன. இது சமஸ்கிருத மொழியில் உள்ளது மற்றும் அசோகரின் துணில் பொறிக்கப் பட்டுள்ளது. சமுத்திரகுப்தன் காலத்தில் இந்தியாவின் பெரும்பகுதி குப்தர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது அவரது அஸ்வமேதயாகம் வேத சடங்குகள் மற்றும் மரபுகளை நினைவு படுத்துகிறது, சமுத்திரகுப்தர் ஒரு வெற்றியாளர் மட்டுமல்லாமல், ஒரு சிறந்த கவிஞரும் இசைபிரியர் ஆவார் - அவர் விணைவாசிப்பதைப் போன்ற உருவம் பொறிக்கப்பட்ட தங்கக் காசுகளில் அவரது இசை ஆர்வத்தைக் காணலாம்.



மெஹ்ராலி இரும்பு தூண்

@KTBS NOT TO BE REPUBLISHED

**நீங்கள் அறிந்துக்கொள்ளுங்கள் :**

டெல்லியில் குதுப்மினார் அருகே உள்ள மெஹ்ராலியில் உள்ள இரும்புத்தூண் முக்கியமானது. இது 23 அடி 8 அங்குல உயரமும் 6000 கிலோ எடையும் கொண்டது அக்கால தொழில் நுட்பத் திறனிற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளில் இதுவும் ஒன்றாகும். இது வரை இத்துண் துருப்பிடிக்கவில்லை பாஸ்பரஸ் இரும்புடன் கலந்ததால் அரிப்புத் தன்மை குறைவாக உள்ளது. இது அக்காலத்தில் இந்தியர்களுக்கு உலோகவியல் பற்றிய நல்லறிவு இருப்பதைக் காட்டுகிறது.

**நீங்கள் அறிந்துக்கொள்ளுங்கள் :**

**மேகதூதம்**

காளிதாசன் இயற்றிய கவிதை இது. இது அவரது புகழ்பெற்ற படைப்புகளில் ஒன்றாகும். குபேர மன்னன் அவரது மகன் யக்ஷனை கடமை தவறியதற்காக ஓராண்டுக்கு நாடு கடத்துகிறான். இந்தச் சந்தர்ப்பத்தில் கைலாசமலைப் பகுதியை கடந்து செல்லும் ஒரு மேகத்தை நிறுத்தி தன் மனைவிக்கு அன்பின் செய்தியை வழங்கும் பணியை ஒப்படைக்கிறான். அவர் தனது மனைவியின் இடத்திற்கு செல்லும் வழியில் உள்ள இயற்கைக் காட்சிகளை மேகதூதத்தில் விவரித்துள்ளார். இன்றும் இந்தக் கவிதை உலகம் முழுவது பிரபலமானது. இது அனைத்து இந்திய மொழிகளிலும் உலகின் முக்கிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேகதூதம் நாடகத்தை மக்கள் இன்றுவரை ரசித்து வருகின்றனர்.

இரண்டாம் சந்திரகுப்தர், சமுத்திரகுப்தரின் அரசை விரிவுபடுத்தி நிரந்தரத் தன்மையைக் கொண்டுவந்தார். அவர் சாகாக்களை தோற்கடித்து மேற்கு இந்தியாவை குப்த பேரரசின் ஒரு பகுதியாக மாற்றினார். அவர் திருமணத்தின் மூலம் பல இந்திய அரச குடும்பங்களுடன் உறவுகளை வளர்த்துக் கொண்டு மிகவும் செல்வாக்கு பெற்றார். விக்ரமாதித்யன் என்ற பட்டத்தையும் பெற்றார். இவரது காலத்தில் போர்களை விட இலக்கியம் மற்றும் கலைக்கு இவர் அளித்த பங்களிப்பு மறக்கமுடியாததாகும் காளிதாசர் நன்கு அறியப்பட்ட சமஸ்கிருத கவிஞர் மற்றும் நாடக ஆசிரியர் ஆவார். இவர் இதே காலக்கட்டத்தைச் சேர்ந்தவர். இவர் 'ரகுவம்சம்' மற்றும் 'குமாரசம்பவம்' மற்றும் 'ரித்துசம்ஹாரா' ஆகிய காவியங்களை எழுதினார். அவை 'மேகதுதம்' மற்றும் புராணங்களின் கல்வெட்டுகளாகும் அவரது சிறந்த நாடகங்களில் ஒன்றான 'அபிஞான சகுந்தலா', சூத்ரகாவின் 'ம்ருச்சகடிகா' மற்றும் விசாகப்பட்டரின் 'முத்ராக்ஷாசா' ஆகியவை இக்கால படைப்பாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

## அபிஞான சகுந்தலா

இது காளிதாசனின் சிறந்த நாடகமாகக் கருதப் படுகிறது. சகுந்தலாவின் கதை மகாபாரதத்தில் உள்ளது. கதையில் துஷ்யந்த மன்னன் காட்டில் வேட்டையாடும் போது கன்வ முனிவரின் ஆசிரமத்திற்கு வருகிறார். அங்கே சகுந்தளாவைக் கண்டு அவளைக் காதலித்து இருவரும் கந்தர்வ பாணியில் திருமணம் செய்துகொள்கிறார்கள். இதெல்லாம் கன்வ முனிவர் இல்லாத நேரத்தில் நடைபெறுகிறது. சிறிது நேரம் கழித்து துஷ்யந்தன் சகுந்தலாவை ஆசிரமத்தில் விட்டுவிட்டு தனது தலைநகருக்குக் திரும்புகிறான். இந்த பிரிவினையின் போது துர்வாச முனிவர் கன்வரின் ஆசிரமத்திற்கு வருகிறார். துஷ்யந்தனின் எண்ணங்களில் சகுந்தலா தொலைந்து போனதைக் கண்டு, அவரைக் கண்டுக் கொள்ள யாரும் இல்லாததைக் கண்டு ஆத்திரமடைந்த துர்வாச முனிவர் பொறுமை இழந்து எவருடைய நினைவில் இருக்கிறாயோ அவர் உன்னை மறந்து விடட்டும் என்று சாபமிட்டார். அவர் தனது கடினத்தன்மையை உணர்ந்தபோது துர்வாச முனிவர் சாபத்திலிருந்து விடுபட ஒரு வழியைக் கூறினார் அவளுக்கு கொடுக்கப்பட்ட ஒரு பொருள் தொலைந்து போய் திரும்ப கிடைக்கும்போது இறுதியில் அவளைப் பற்றிய அவனது நினைவுகளைத் திரும்பக் கொண்டுவரும் என்று அவர் கூறினார். அந்த பொருள் துஷ்யந்தன் சகுந்தலாவிற்கு கொடுத்த மோதிரம். துர்வாச முனிவர் கூறியது போல். துஷ்யந்தன் சகுந்தலாயை மறந்து விடுகிறான். சிறிது காலத்திற்குப் பிறகு, கன்வ முனிவரின் சீடர்கள் சகுந்தலாவை துஷ்யந்தனிடம் ஒன்று சேர்க்க துஷ்யந்தனின் அவைக்கு அழைத்துச் சென்றனர். அப்போது அவள் கர்ப்பமாக இருந்தாள், வழியில் சகுந்தலா துஷ்யந்தனின் நினைவை வரவழைக்கும் மோதிரத்தை இழந்தாள். இதனால் துஷ்யந்தனால் அவளை காண முடியவில்லை, சகுந்தலா அவமானத்துடன் அரண்மனையை விட்டு வெளியேறுகிறாள். சில நாட்களுக்குப் பிறகு, ஒரு மீனின் வயிற்றில் மோதிரம் கிடைக்கிறது அதைப் பார்த்ததும் துஷ்யந்தன் எல்லாவற்றையும் நினைவு கூர்ந்தான் சிறிது நேரம் கழித்து, அவர் ஒரு பயணத்திலிருந்து திரும்பும் போது, அவர் மரிச்சா முனிவரின் ஆசிரமத்திற்கு வருக்கை தருகிறார். அங்கு ஒரு சிறுவன் சிங்கக் குட்டிகளுடன் விளையாடுவதைப் பார்த்து, அவனது பின்னணியை தெரிந்தபோது அந்தச் சிறுவன் தனது சொந்த மகன் சர்வதாமன் என்பது தெரிய வருகிறது. இந்த வழியில், துஷ்யந்தன் தனது மனைவி சகுந்தலா மற்றும் மகனுடன் சேர்கிறான். அபிஞான சகுந்தலா உலகின் தலைசிறந்த நாடகங்களில் ஒன்று, இது உலகம் முழுவதும் பெரும் வரவேற்பை பெற்றது.

© KTBS NOT TO BE REPUBLISHED

குப்தப் பேரரசு ஹுனர்களின் தொடர்ச்சியான தாக்குதலுக்கு உள்ளானது இதனால் விரைவில் வீழ்ச்சியடைந்தது, குப்தர்களிடம் முழுமையாக ஆயுதம் ஏந்திய பெரிய படை இல்லை, போர்க்காலத்தில் அரசர்களின் தேவைகளை (அரசருக்கு இணையானவர்கள்) சாமந்தர்கள் செய்தார்கள், எனவே சாமந்தர்கள் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக மாறினர். பல்வேறு பதவிகளை சாமந்தர்கள் கொண்டிருந்தனர். அவர்கள் பல்வேறு பதவிகளை வகித்திருந்தனர். நிர்வாகம் பரவலாக்கப் பட்டது, புரோகிதர்கள் பல உதவிகளைப் பெற்றனர், அவர்களுக்கு பல கிராமங்கள் வழங்கப்பட்டது, இதனால் பல கோவில்கள் வளர்ச்சி அடைந்தன, இத்தகைய பகுதிகள் நிதி மற்றும் நிர்வாக சலுகைகளை அனுபவித்தது மட்டுமல்லாமல் வணிகத்தின் சு தந்திரமான பகுதியாக மாறியது. இருப்பினும், காலப் போக்கில் உள்ளூர் மக்கள், விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் நிலப்பிரபுக்களால் கட்டுப்படுத்த தொடங்கினர் இந்த வழியில், சமூகம் மேலும் மேலும் சிக்கலானது.

இந்தக் காலக்கட்டத்தில் குப்தர்கள் மேற்கத்தியர்களுடன் கொண்டிருந்த வர்த்தகம் சரிந்தது. இதன் விளைவாக அவர்களின் பொருளாதார அமைப்பு பாதிக்கப்பட்டது. அவர்களின் அரசின் மீது விதிக்கப்பட்ட கட்டுபாடுகள் அவர்களின் உள்நாட்டு வர்த்தகத்தையும் தடை செய்தன. வணிகம் கிராமங்களுக்கு உட்படுத்தப்பட்டது வர்த்தகத்தில் சரிவு வர்த்தக மையங்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது, பாடலி புத்திரம் ஒரு கிராமத்தின் அளவிற்கு குறைந்து விட்டது.

பக்தி உணர்வின் அடிப்படையில், இந்த காலக்கட்டத்தில் புராணங்கள் மற்றும் தர்மசாஸ்திரங்கள் போன்ற பல்வேறு சமய நூல்கள் உருவாக்கப்பட்டன, வராஹமிஹிரர் பாஸ்கரா -1, ஆர்யபட்டா, சரக்கா மற்றும் சுஷ்ருதா ஆகியோர் ஜோதிடம் வாணியல் மற்றும் கணிதம் பற்றிய ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினர், சரக்கா, 'சரக்கா சம்ஹிதையை' எழுதினார் சுஷ்ருதா, 'சுஷ்ருத சம்ஹிதையை' எழுதினார் - இது அறுவை சிகைச்சையைக் குறித்ததாகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

## குப்தர் காலத்து விஞ்ஞானிகள்

1. ***தன்வந்திரி :*** மருத்துவத் துறையில் புகழ்பெற்ற அறிஞர், அவர் ஆயுர்வேதத்தில் நிபுணராக இருந்தார். இந்திய மருத்துவத்தின் தந்தை இவர். மருத்துவத் துறையில் இவரது முக்கிய பங்களிப்பு ஆயுர்வேத அகராதி ஆகும்.

2. ***சரக்கா :*** இவர் ஒரு மருத்துவ விஞ்ஞானி ஆவார். மருத்துவத் துறையில் அவரது முக்கிய பங்களிப்பு சரக்காசம்ஷிதை ஆகும்.

3. ***சுஷ்ருதா :*** இவர் ஒரு அறுவை சிகிச்சை நிபுணர். அறுவை சிகிச்சை முறையை விளக்கிய முதல் இந்தியர் இவரே. அந்த காலத்தில் இராணுவ வீரர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கென தனி பிரிவு இருந்ததாக பதிவு செய்துள்ளார். நவீன அறுவை சிகிச்சை நிபுணர்களைப் போலவே சுஷ்ருதாவும் முன்பிருந்த ஆண்டுகளில் நன்கு அறியப்பட்ட அறுவை சிகிச்சை துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினார்.

4. ***ஆரியபட்டா :*** இவர் ஒரு புகழ்பெற்ற வானியல் மற்றும் கணிதவியலாளர் ஆவார். வராஹிமிஹிரருக்குப் பிறகு வந்த முக்கியமான விஞ்ஞானி ஆவார். வானியல் மற்றும் கணிதத்தில் அவரது பங்களிப்பு மிகவும் குறிப்பிட்டத்தக்கது. இந்திய அரசால் சிறந்த விஞ்ஞானிகளுக்கு ஆர்யபட்டா விருது வழங்கப்படுவதற்கு இதுவே காரணம். இந்தியாவின் முதல் செயற்கை கோளுக்கு ஆர்யபட்டா பெயரிடப்பட்டது. இவர் பூஜ்ஜியத்தை கண்டுபிடித்ததாக நம்பப்படுகிறது. இயற்கணிதத்தில் தேர்ச்சி பெற்ற முதல் இந்தியர் இவரே சூரியன் மற்றும் சந்திர கிரகணங்கள் ராகுவால் ஏற்படுவதில்லை என்றும் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் இருக்கும்போது சூரிய கிரகணம் ஏற்படுகிறது என்றும் அவர் வலியுறுத்தினார். சந்திர கிரகணம் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி இருக்கும் போது ஏற்படுகிறது என்றும் மீண்டும் வலியுறுத்தினார்.

5. ***வராஹமிஹிரர் :*** இவர் ஒரு புகழ் பெற்ற வானியலாளராவார். இவர் ''பஞ்சசித்தாந்திகா'' என்ற நூலினை எழுதினார் இது தவிர இவர் 'ப்ருகத் சம்ஹித்தா' 'லகுசடக்கா' ப்ருகத் சடக்கா என்ற பல நூல்களையும் எழுதினார். வானியல் ஜோதிடவியல், புவியல், அளவியல் போன்ற பல்வேறு துறைகளில் அறிஞராக இருந்தார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

## வர்த்தமானர்கள்

இரண்டு நூற்றாண்டுகளாக செழித்தோங்கியிருந்த குப்த பேரரசு 6 ஆம் நூற்றாண்டில் சிதைந்தது, இந்த நேரத்தில் பல சிறிய அரசுகள் தோன்றின, வர்த்ததமானர்களின் அரசும் அவற்றில் ஒன்றாகும். அவர்கள் 6ஆம் நூற்றாண்டில் தானேஸ்வரில் இருந்து ஆட்சி செய்தனர் சில செப்பேட்டுகள், பாணாவின் ஹர்ஷசரிதம் மற்றும் சீனப் பயணி யுவான் சுவாங்கின் எழுத்துக்களும் இந்தக் காலக்கட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இந்த வம்சத்தை நிறுவியவர் புஷ்யபூதி என்பவரேயாவர், பிரபாக வர்த்தனா மற்றும் ஹர்ஷவர்த்தனா போன்ற இருவரும் புகழ் பெற்ற மன்னர்கள் ஆவர். ஹர்ஷவர்த்தனாவின் தந்தையான பிரபாகவர்த்தனாவும் அவரது சகோதரரான ராஜவர்த்தனாவும் இறந்த பின்பு ஹர்ஷ்வர்த்தனா தானேஸ்வரத்தின் அரசரானார், இவருடைய சகோதரி ராஜஸ்ரீயை கனோஜ் மன்னர் கிருஹவர்மனுக்கு மணம் செய்து வைத்தார். வங்காள மன்னர் ஷஷாங்காவால் கனோஜ் மன்னர் கொல்லப்பட்ட பின்பு ஹர்ஷா ஷஷாங்காவை தோற்கடித்து கனோஜையும் கைப்பற்றி வங்காள நாட்டை எதிர்த்தார். வங்காளமும் மகதமும் இவரது ஆட்சிக்கே உட்பட்டிருந்தது. ஆனால் நர்மதாவுக்கும் மேலே தெற்கு பக்கம் இவரால் செல்ல முடியவில்லை. சாளுக்கியர்களின் கன்னட அரசர் இரண்டாம் புலிகேசி ஹர்ஷாவின் முன்னேற்றத்தைத் தடுத்து பின்னடையச் செய்தார். இரண்டாம் புலிகேசியின் அரசவைப் புலவரான இரவிகீர்த்தி ஐஹோலே கல்வெட்டில் இரண்டாம் புலிகேசியின் சாதனைகளை குறிப்பிட்டுள்ளார். புலிகேசிக்கு எதிரான தோல்வியில் ஹர்ஷாவின் மகிழ்ச்சியின்மையை இது குறிக்கிறது என்று இரவிகீர்த்தி மிகவும் வேடிக்கையாக வெளிபடுத்தியுள்ளர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

மன்னரின் ஆட்சிக்கு அமைச்சர்கள் குழுக்கள் பேருதவி புரிந்தன. ஆட்சிக் குழுவில் (ஆளும் வகுப்பு) மகாசந்திவிக்ரஹா (இணைப்பாளர்கள்) மகாபாலதிக்ருத்தா (தளபதி) போகபதி (வரிவிதிக்கும் அலுவலர்கள்) மற்றும் தூதர்கள் போன்றோர் அடங்குவர். இவ்வரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. நிலவரிவிதிப்பே அரசாட்சிக்குத் தலையாய வருவாயாக இருந்தது. துணை மன்னர்கள் இம் மன்னருக்குக் கப்பமாகப் பணம் செலுத்தினர். அவர்களுக்கு மன்னரும் நிலக் கொடை அளித்துப் பதிலாகப் படைகளைத் துணையாக்கிக் கொண்டான், அரசன்,

தன் ஆட்சியில் வலிமை குறைந்த நிலையை அடைந்ததும் அனைத்து துணை மன்னர்களும் சுதந்தரம் பெற்றனர்.

மற்ற சமுகத் தினருக்கும், சமயத் தவருக்கும் நிலங்கள் கொடையாக வழங்கப்பட்டன. ஹர்ஷ மன்னன் பௌத்த சமயத்திற்கு முன்னுரிமை வழங்கினார், யுவான் சுவாங் பௌத்த சமயத்தை தம்குறிப்புகளில் பாராட்டி எழுதியுள்ளதைக் காணும்போது ஹர்ஷ மன்னரின் காலத்தில் பௌத்த சமயத்தில் இருந்த பெருமைகளை அறிய முடிகிறது, பௌத்த சமயத்தவரின் நளாந்தாப் பல்கலைக் கழகத்தின் நிறைவும், முழுமையுமான செயல் பாடுகளும் ஹர்ஷர் காலத்தில் செய்ததாகக் குறிப்புகள் உள்ளன. அரசின் முழுமையான ஆதரவு நளந்தாப் பல்கலைக்கழகத்திற்கு இருந்தது.

### நளந்தா பல்கலைக்கழகம்



நளந்தா உலகபல்கலைக்கழகம்

இது பழங்காலப் பல்கலைக் கழகமாகப் புகழ் பெற்றது. புத்தர் நளந்தாவிற்கு வருகை தந்திருந்தார். 25 மீட்டர் உயரமுள்ள புத்தரின் வெண்கலச் சிலையை ஹர்ஷவர்த்தனா நளந்தாவிற்கு பரிசளித்தாக நம்பப்படுகிறது. குமார குப்தர் நுண்கலை பள்ளிக்கு நன்கொடையாய் வழங்கியதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. நாகார்ஜுனா மற்றும் தின்னக்கா தர்ம்பாலா என்ற இரு அறிஞ பெருமக்கள் புகழ் பெற்று விளங்கினர். சினப் பயணி யூவான்சுவாங் இப்பல்கலைக் கழக்கத்திற்கு வருகைதந்து சில காலம் தங்கியிருந்ததாகவும் வரலாறு கூறுகிறது. இந்த இடத்தைப் பற்றிய விரிவான விளக்கத்தை இவர் அளித்துள்ளார். ஸ்துபிகள், சைத்தியங்கள், விகாரங்கள், ஓய்வு இல்லங்கள், அங்கும் இங்கும் அமர்ந்து சிறிது நேரம் ஓய்வெடுக்க அறைகள், தியான அறைகள், விரிவுரை அறைகள் மற்றும் பல கட்டமைப்புகள் இந்த இடத்தின் பெருமையை வெளிப்படுத்துகின்றன. குப்த மன்னர்களும் ஹர்ஷவர்தனும் இந்த இடத்தின் புகழ் பெற்ற புரவலர்களாக இருந்துள்ளனர். திடீரென ஏற்பட்ட தீயினால் பல்வேறு நூல்கள் எரிந்து போயினவாம்.

NOT TO BE REPUBLISHED

## பயிற்சிகள்

**I. ஏற்புடைய சொற்களைக் கொண்டு கீழ்க்காணும் வாக்கியங்களை நிரப்புக:**

1. குப்தர்கள் தங்கள் ஆட்சியை ________ என்ற இடத்திலிருந்து தொடங்கினர்.
2. முதலாம் சந்திரகுப்தன் ________ என்று அழைக்கப் பட்டார்.
3. காளிதாசரின் மிகப் பெரும் நாடகங்களில் ஒன்று இது ________ ஆகும்.
4. விசாகதத்தரின் மிகச் சிறந்த இலக்கிய நூல் ________ ஆகும்.
5. சுதர்க்கா என்பவர் எழுதிய இலக்கியப்படைப்பு ________.
6. வர்த்தனர் பரம்பரையினை தோற்று வித்தவர் ________.

**II. வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளை எழுதுக:**

7. இரண்டாம் சந்திரகுப்ரைப் பற்றிய குறிப்புகளை எழுதுக.
8. குப்தர் பேரரசு வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் யாவை?
9. குப்தர்கள் காலத்திய அறிவியல் அறிஞர்களின் பெயர்களை எழுதுக.
10. வர்த்தனர்களின் ஆட்சியின் நிர்வாகம் எவ்வாறு அமைந்திருந்தது?
11. நளந்தா பல்கலைக் கழகம் பற்றி எழுதுங்கள்.

**III. செயல்பாடு :**

1. காளிதாசரின் அனைத்து படைப்புகள் பற்றிய செய்திகளை விவரமாகத் தெரிந்துக் கொள்ளவும்.
2. குப்தர்கள் காலத்திய அறிவியல் அறிஞர்களைப் பற்றிய செய்திகளையும் புகைப் படங்களையும் சேகரிக்கவும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

| பாடம் 18 | தென்னிந்திய வம்சங்கள், சாதவாகனர், கடம்பர், கங்கர் (பொ.ச.மு 3 ஆம் நூற்றாண்டு முதல் பொ.ச.மு 13 ஆம் நூற்றாண்டு வரை) |
|---|---|

E6P2K6

**இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன:**

- *தென்னிந்தியாவில் சாதவாகனர்களின் முன்னேற்றமும், சாதனைளும், நிர்வாகமும், கலைகளும் கட்டிடக்கலையின் சிறப்புகளும் பற்றி அறிதல்.*
- *சதகர்னியின் சாதனைகள் பற்றி அறிதல்.*
- *கருநாடகத்தில் கடம்பர்கள் முதன் முதலாக ஏற்படுத்திய பேரரசு பற்றி அறிதல்.*
- *கங்கப் பேரரசு நிறவியது பற்றியும் அவர்கள் கலைக்கும், கட்டிடக்கலைக்கும், இலக்கியத்திற்கும் ஆற்றிய அரும் பெரும் தொண்டுகள் பற்றி அறிதல்.*
- *சாதவாகனர்கள், கடம்பர்கள், கங்கர்கள் போன்றோரின் ஆட்சிப் பகுதிகளை இந்திய வரைபடத்தில் குறித்தல்.*

@KTBS NOT TO BE REPUBLISHED

விந்திய மலைகளே இந்தியாவை வடக்கு, தெற்கு என்று பிரிக்கிறது விந்திய மலையிலிருந்து கன்னியாக் குமரிவரையிலும் உள்ள இடைப்பட்ட பகுதியே தென்னிந்திய அல்லது தக்காணப் பகுதி என்று அழைக்கப்படுகிறது. இப்பகுதியை ஆட்சி செய்தவர்களாக சாதவாகனர்கள், கடம்பர்கள், கங்கர்கள் சாளுக்கியர்கள் இராட்டிர கூடர்கள் மற்றும் பல்லவர்கள் என்ற குறிப்பிட்ட பரம்பரையினரே ஆவர்.

## சாதவாகனர்கள்

## (பொ.ச.மு 230-லிருந்து பொ.ச.மு 220 வரை)

தக்காணப் பகுதியில் சாதவாகனர்களே முதன் முதலாக ஆட்சியமைக்க முயன்றனர். சந்திர குப்தரின் காலத்தில் இச் சாதவாகனர்கள் துணை மன்னர்களாகக் கப்பம் கட்டிக்

கோதாவரியிலிருந்து கிருஷ்ணா ஆறு வரையிலான நிலப்பகுதியை ஆட்சியில் தக்க வைத்துக் கொண்டனர். பொ.ச.மு. 220-ல் சிம்முக என்பவர் சுதந்தரமாக ஸ்ரீகாகுளத்தை தலை நகராக்கிக் கொண்டான்.

**கௌதமிபுத்ரா ஷதகர்னி :** இவர் இந்த அரச வம்சத்தின் முக்கிய அரசர் ஆவார். இவர் இந்தியாவின் எல்லைகளுக்கு அப்பால் கொடிய பகைவர்களான சாகாக்கர்களை ஒழித்துவிட்டார். எனவே ‘சாலிவாகன சகா’ வருடம் என்ற காலக் கணக்கு முறை இம்மன்னனால் தொடங்கப்பட்டது.

இவன் தன் ஆட்சி எல்லையைக் கொங்கன், பிரார், சௌராஷ்டிரா மற்றும் மாளவா மட்டுமன்றி, பல புதிய பகுதிகளையும் உள்ளடக்கி விரிவுபடுத்தினான், திரிசமுத்ரா தோயபிதவாகனா, மற்றும் ஷதாவாகனா குலயாஷா பிறதிஷ்டாபனாகரா போன்ற பட்டப் பெயர்களை பெற்றிருந்தான்.

இந்த வம்சத்தின் கடைசி அரசர் யக்ஞஸ்ரீஷாதகர்ணி ஆவார், இவரது காலத்தில் சாக்காளர்களின் தொடர்ச்சியான தாக்குதல்களின் காரணமாக பேரரசு வீழ்ச்சியடைந்தது.

சாதவாகனர்களின் ஆட்சியின் போது அரசனே முதன்மையான ஆட்சியாளனாக இருந்தான். நிர்வாகத்தின் அமைப்பிற்காக இராஜ்ஜியத்தை ஜனபதா எனப்படும் மகாணங்களாகப் பிரிக்கப்பட்டது மற்றும் அவற்றைக் கவனிக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். நகரங்களும் கிராமங்களும் தன்னாட்சி நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டன.


கார்லேவிலுள்ள சைத்தியாலயம்

சமுதாயத்தில் நிறவேறு பாடுகளின்றி வாழ்க்கை நடத்தப் பட்டது. பெண்களும் உயர் பதவிகளை வகித்து சமுதாயத்தில் தன்மானம் த்துடன் வாழ்ந்தனர். மக்கள் இயல்பான வாழ்வில் பல்வேறு

@KTBS NOT TO BE REPUBLISHED

தொழில் செய்பவர்களாக உழவர்கள், வணிகர்கள், பொற்கொல்லர்கள், மீனவர்கள், தச்சர்கள், நெசவாளர்கள், மருத்துவர்கள் போன்ற நிலைகளில் வாழ்ந்தனர். தொழில் சங்கங்கள் இருந்தன பின்னர் இந்தசங்கங்கள் வணிகம் மற்றும் வர்த்தக அமைப்புகளாக உருவெடுத்தன வெளிநாட்டு வர்த்தகத்திற்கு கூட ஊக்கம் அளிக்கப்பட்டது. இதன் வழி நாசிக், கல்யாண், புரோச், பட்கல் போன்ற வாணிக (வர்த்தக) மையங்களாக விளங்கின.

சாதவாகனர்கள் வேதமரபைப் பின் பற்றி வாழ்ந்தனர் இருந்தும் பிற சமயங்களான சமணம், பௌத்த சமயம் போன்றனவும் ஒத்திசைவுடன் சிறப்புடன் விளங்கின.

அவர்கள் கலை, இலக்கியம் கல்வி போன்ற வற்றிற்கு உயர்வு கொடுத்துப் போற்றினர். பிராகிருத மொழியிலேயே இலக்கியங்கள் இயற்றப்பட்டன; இரு மொழிப் பேரறிஞர்களும் பொதுமக்களும் 'கதாசப்தஷதி' என்ற நூலினை ஹாலா என்பவர் எழுதியதே இதற்கான அருமையான சான்றாகும்.

அஜந்தா மற்றும் அமராவதி ஓவியங்கள் சாதவாகனர்கள் காலத்தைச் சேர்ந்தவை. கோயில்கள், விகாரங்கள் மற்றும் சைத்தியாலங்களும் கட்டப்பட்டன பனவாசி வணிகர் பூதப்பாலா என்பவர் கார்லே என்னும் இடத்தில் ஒரு ''சைத்ய கிரகா'' வைக் கட்டினார்.

சாதவாகனர்களின் ஆட்சிக் காலத்தில் கன்னட நாட்டு நிலப்பகுதி மிகவும் வளமுடனும் கன்னடர்கள் வெற்றி பெரு மிதத்துடனும் திறமையான நிர்வாகச் செயல்பாடுகளுடனும் விளங்கியது. அவர்களது காலம் இந்திய பண்பாடுகள் செழித்து வளர்ந்து ஓங்கிடுமாறு செய்ததே இவர்களின் பங்களிப்பாகும்.

## கடம்பர்கள் (பொ.ச 325-லிருந்து பொ.ச 540 வரை)

கருநாடகத்தில் நிறுவப்பட்ட முதல் அரசவம்சமாகும் அர்களின் தலைநகரம் தற்போதைய வடகனரா மாவட்டத்தில் உள்ள பானவாசி ஆகும். மயூரவர்மா இந்த வம்சத்தினை

@KTBS NOT TO BE REPUBLISHED

நிறுவினார் மேலும் இவ்வம்சத்தின் பேரரசர் ஆவார். இவர் பல்லவ மன்னன் சிவஸ்கந்தவர்மாவால் அவமானப் படுத்தபட்ட போது அவர் க்ஷத்திரிய வாழ்க்கை முறையை ஏற்றுக்கொண்டு மயூரவர்மா ஆனார். பல்லவர்களை போரில் தோர்கடித்து கடம்ப பேரரசை நிறவினார். இவர் கன்னடர்கள் அனைவருக்கும் பெருமையானவர் ஆவர்.

கடம்பர்கள் கருநாடகத்திற்கும், இந்திய பண்பாட்டிற்கும் குறிப்பிடத் தகுந்த தொண்டினையும், பங்களிப்பையும் செய்துள்ளார்கள், கடம்பர்கள் ஆட்சிக் காலத்தில் ஏறக்குறைய முன்னுறு ஆண்டுகள் அரசியல் ஒற்றுமையுடன் ஆட்சி நடத்தியுள்ளனர். அரசு மதக்குருக்கள், அமைச்சர்கள் மற்றும் படைத்தனபதிகள் போன்றோர் நிரூவாகத்தில் சிறப்புச் செயல்களால் நாட்டைச் செம்மைப் படுத்தினர். நிர்வாகத்தில் எளிமை ஏற்படுத்திட மாநில அலுவலர்களை நியமித்து மாநிலங்களை நன்கு கவனித்துக் கொண்டனர்.

அரசின் வருவாய்க்கு முதன்மையானதாய் விளங்கியது நிலவரியே தொழில் அளவில் தச்சுத் தொழில், பொற்கொல்லர், இரும்புக் கொல்லர், நெசவு, எண்ணெய் வடித்தல் மண்பாண்டம் செய்தல் குறிப்பிடத் தகுந்தவையாக இருந்தன. வேளாண்மைக்கும் வாணிகத்திற்கும் பெருமளவு ஊக்கம் கொடுத்துப் போற்றப்பட்டன. பெரும்பாலான மக்கள் வர்ணாஷ்ரம் முறையைப் பின்பற்றினர். ஆணாதிக்கத்திற்கும் கூட்டுக் குடும் பத்திற்கு அதிக முக்கியத்துவம், கொடுக்கப்பட்டது.

அவர்கள் வேதப் பண்பாடுகளைப் பின்பற்றுபவர்களாகக் கடம்பர்கள் இருந்தாலும் சமணத்திற்கும் பௌத்த சமயத்திற்கும் ஊக்கமளித்தனர். அவர்கள் ஹங்கல், புலிகெரே மற்றும் பிற இடங்களில் உள்ள சமண (ஜெயின்) கோவில்களுக்கும், அறிஞர்களுக்கும் தொண்டு செய்து. ஜெயின் பண்பாடு பரவுவதை ஊக்குவித்தனர்.

சித்ரதுர்காவில் உள்ள சந்திரவல்லி கல்வெட்டின் படி மயூரவர்மா சந்திர வதி ஏரியின் சுவரின் உயரத்தை அதிகரித்ததாகக் கூறப்படுகிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED





மதுகேசுவரா கோயில் பானவாசி

பௌத்த சமயம் மிகவும் மேன்மையுற்று விளங்கியது என்று உணர அஜந்தா பானவாசியைப் பார்த்து அறியலாம் - கோயில்களே திருவிழாக்களுக்கும் கண்காட்சிகளுக்கும் மையங்களாக விளங்கின பிராகிருதமும், சமஸ்கிருதமும் சிறந்த முறையிலான பேருக்கம் அளிக்கப்பட்டன.

©KTBS NOT TO BE REPUBLISHED

முதலில் பிராகிருதமும் அடுத்து சமஸ்கிருதமும் நாட்டு மொழிகளாயின. கன்னட மொழி மக்களின் மொழியாய்ச் சிறப்புற்றது. பழமை வாய்ந்த ஹல்மிதி கல்வெட்டுக்கள் கன்னட மொழி துலங்கியிருந்ததையும் 5 ஆம் நூற்றாண்டில் பயன்பாட்டில் வழங்கியதையும் காணலாம். கன்னட மொழிக்கு இதுவே வரலாற்றளவில் முதலில் காணப்படும் கல்வெட்டாகும்.

மாளவல்லி கல்வெட்டு பிராகிருத மொழியில் உள்ளது தலகுண்டா கல்வெட்டு கருநாடகாவில் கண்டு பிடிக்கப்பட்ட முதல் சமஸ்கிருத கல்வெட்டாகும்.

கடம்பர்களே கருநாடகாவில் சிற்பக்கலை தோற்றத்திற்கு அடித்தளம் அமைத்தவர்கள். அவர்களே பாணவாசியில் பலகோயில்களையும் ''பசதி'' களையும் கட்டினார்கள். இக் காலத்தில் தொடக்கல்வியும் உயர்நிலைக்கல்வியும் சிறப்பு ஊக்கம் அளிக்கப்பட்டன மற்றும் அக்ரஹாரங்கள் மற்றும் குருகுலங்கள் போன்றனவும் தங்கும் இடவசதி கொண்ட பள்ளிகளாக இருந்தன.

## கங்கர்கள் (பொ.ச 350 லிருந்து பொ.ச 1004 வரை)

கருநாடகத்தின் முற்காலத்திய வரலாற்றில் கங்கராஜா மரபினரின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் மிகவும் முக்கியமான ஒன்றாய் விளங்குகிறது. கங்கர்களின் ஆட்சி மரபைத் தோற்றுவித்தவர்கள் இக்ஷுவாகு மரபினத்தவர்கள்தான் என்று கருதப்படுகிறது. அவர்கள் குவலாலா, தலக்காடு, மற்றும் மாணியபுரா (இன்றைய மன்னே) நெலமங்களா மற்றும் பெங்களூர் புறநகர் மாவட்டம் போன்ற இடங்களில் இருந்து ஆட்சி செய்தார்கள்.

கங்காவாடி மன்னர் ஆட்சி, தாடிகாவின் ஆட்சியிலிருந்து தொடங்கி, 27 மன்னர்களால் ஆட்சி நடத்தப்பட்டது. இம்மரபில் துருவினிதா என்ற மன்னரே புகழ் வாய்ந்தவராவார். இவர் நீண்டகாலம் ஆட்சி செய்தார் தனது ஆட்சியை வலுபடுத்துவதற்காக புன்னடாவின் கட்டுப்பாட்டைப் பெற்றார்கள். நல்லாலா என்ற செப்புத் தகட்டில் அவர் பல ஏரிகளை ஏற்படுத்தி வேளாண்மைக்கான நீர்பாசனத்திற்கு வழிவகுத்தார் என்று எழுதப்பட்டுள்ளது. இலக்கியத்தின்

NOT TO BE REPUBLISHED @KTBS

மீது பெரிதும் ஈடுபாடுகாட்டி புதுநூல்களை சமஸ்கிருதத்திலும் கன்னடத்திலும் எழுதினர். அதுமட்டுமல்லாமல் பிராகிருத மொழியிலிருந்து குணாத்யாவின் ''வட்டகாத''வை சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தார்.

## கங்கர்களின் பங்களிப்பு :

மன்னரின் ஆட்சிக்கு உதவிக்காக அமைச்சர்கள் குழு இருந்தது. அவ்வமைச்சர்கள் பல்வேறு துறைகளில் மேற்பார்வைகளைச் செய்து நிர்வாகத்தை செம்மைப் படுத்தினர். நிலவரி, பிறவரி நீதித்துறையமைப்பு, சுகாதரம், பாதுகாப்புத்துறை போன்றவற்றைக் கிராம சபைகள் கவனித்து கொண்டன. வேளாண்மை மிக முக்கியமான தொழிலாய் விளங்கியது. பிற தொழில்களான நெசவும், கொல்லன் போன்ற கைத்தொழில்கள் இருந்தன. பிற நாடுகளுடனும் வணிக உறவுகளை கொண்டிருந்தனர்.

கங்கர்களின் காலத்தில் சமுதாயம் பல்வேறு பிரிவுகளாகவும், இனங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தாலும் அவை அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து இருந்தன. தந்தையே குடும்பத் தலைவராகவும் கூட்டுக்குடும்ப முறையும் பொதுவழக்கமாக விளங்கின. நேர்மை, விசுவாசம், வீரம் மற்றும் பொறுமை ஆகிய சமூகப் பெருமைப் பண்புகள் செல்வாக்கு செலுத்தின.

NOT TO BE REPUBLISHED ©KTBS

கணிதம், கடிகா ஸ்தானம், பிறம்மபுரி, சைத்தாலங்கள் அக்ரஹாரங்கள் போன்றவை கல்வி மையங்களாய் விளங்கின. தலக்காடு, சிரவணபெளகொளா, பங்கபுரா, மற்றும் பேருர் போன்ற இடங்கள் கல்வியில் சிறந்த இடங்களாக அக்காலத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

கங்கர்கள் சமண சமயத்தவராதலால் சமண சமயம் மிகச்சி றந்த முறையில் பரவியிருந்தது. இச்சமயத்தைப் புகழ்மிகு சமயமாக மாற்றிடத் துணை புரிந்தவர்கள் பூஜ்யபாதா, வஜ்ரநந்தி, அஜீத்சேனா, போன்றோர் ஆவர். மேலும் அவர்கள் 58 அடி உயரமான ஒரே கல்லினால் ஆன கோமட்டேஸ்வரர் சிலையை சிரவாண பெளகொளாவில் நிறுவி மிகப் புகழ்வாய்ந்த மையமாக உலகம் போற்றும் வண்ணம் செய்தனர். 12 ஆண்டுகளுக்கு

ஒரு முறை அங்கு ‘மகாஸ்த்தகாபிஷேகா’ கோமட்டேஸ்வரருக்கு நடைபெறுவதை நீங்கள் கண்டு ரசித்திருப்பீர்கள் அல்லவா?

### பாகுபலி - கோமட்டேஸ்வரா



கோமட்டேஸ்வரா

சிரவணபெளகோளாவில் உள்ள கோமட்டேஸ்வரர் (பாகுபலி) துறவுக்கான சிறந்த குறியீடாகும். இச்சிலையை (சாவுண்டராயா) நான்காம் இராஜ மல்லா என்ற அமைச்சர்தான் உருவாக்கினார். 100 சகோதரர்களுள் பரதா என்பர்தான் மூத்தவர். பாகுபலி என்பவர்தான் இளையவர். பரதன் முடிசூடி மன்னரானதும் சக்கரரத்னா (ஒரு சிறப்புச் சக்கரம்) பெற்று சுற்றிலும் இருந்த பல நாடுகளை வென்று பேரரசன் ஆனார். இவ்வெற்றிகளுக்கு முன்பே பாகுபலி என்ற தம்பியைத் தவிர்த்து பிற சகோதர்கள் அனைவரும் அப்பேரரசனான அண்ணனையும் பேரரசன் என்ற பட்டத்தையும் ஏற்றுக் கொண்டனர். ஆனால் பாகுபலி என்ற கடைசித் தம்பி மட்டும் அப்பேரரசன் என்ற சிறப்பினை ஏற்கவில்லை. இருவரும் எதிர்த்துப் போரிட்டனர். பரதா நோக்குயுத்தத்தில் (த்ருஷ்டியுத்தா) தோற்றான். நீர்யுத்தத்திலும் மல்யுத்தத்திலும் தோற்றான். மற்போரின் இறுதியில் பாகுபலி பரதனாகிய பேரரசனை தூக்கிக் காற்றில் சக்கரம் போல் சுழற்றித் தொலைவில் வீசி எறிய எத்தனிக்கும் போது உலகத்தின் அனைத்துப் பற்றுக்களையும் நீக்கிட வேண்டும் என்ற எண்ணம் அவனுள் உதித்தெழுந்தது. அதனால் அண்ணனைத் தரையில் இறக்கிவிட்டு அண்ணனையும் வணங்கிவிட்டுத் தொலைவில் சென்று ‘நிர்வாணா’ என்னும் துறவினை மனதுள் மேற்கொண்டு நின்றவறே தொழுகையில் ஈடுபட்டார். இன்னும் வீடுபேறு அடையாததால் கணியர்கள் கூடி பாகுபலியிடம் ‘‘நீங்கள் உங்கள் அண்ணனின் ஆளுகையில் கீழ் இருந்து தவம் மேற்கொண்டிருப்பதால்தான் மோட்சமும் நிர்வாணமும் பெறவில்லை’’ என்றனர் பின்னர் பரதனே பாகுபலியான தம்பியிடம் வந்து ‘‘இம் மாபெரு நாடும் ஆட்சியும் உன்னுடையாதே! நான்தான் உனக்காக உன் கட்டளையை ஏற்று ஆளுகின்றேன்’’ என்றார், பின்னர்தான் பாகுபலி நிர்வாணாவை வென்றதாகக் கூறப் படுகிறது.

©KTBS
NOT TO BE REPUBLISHED

கங்க அரசர்கள் சிற்ப கலையையும், கட்டிடக் கலையையும் போற்றி வளர்த்தனர். சிறப்பும் அழகும் மிகுந்த கோயில்களையும் பசாதிகளையும் கட்டினர். மன்னேயில் உள்ள கபிலேஷ்வரர் கோயில், தலக்காட்டில் உள்ள பாத்தலேஸ்வரர் மற்றும் மருளேஷ்வர் கோலாரில் கோலாரம்மா கோயில், பேகூரில் நாகேஷ்வர், சிரவணபெளகோளாவில் கோமட்டேஷ்வரர் போன்ற கோயில்கள் அனைத்தும் கங்கர்களின் கட்டிடக்கலைக்கு மிகச் சிறந்த சான்றுகளாகும். மிக உயர்ந்த தூண்களான மகாஸ்தம்பாஸ் மற்றும் பிரம்மஸ்தம்பாஸ் போன்றவைகள் கங்கர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும்.



தலக்காடு பாத்தலேஸ்வரர் கோயில்

இலக்கிய ஆர்வலர்களான கங்கராஜக்கள் சமஸ்கிருதம், பிராகிருதம் மற்றும் கன்னட மொழிகளுக்கு ஊக்கமளித்ததன் காரணமாக இந்த மொழிகளில் பல படைப்புகள் எழுதப்பட்டன. இரண்டாம் மாதவா 'தாட்டக சூத்திரத்திற்கு' விளக்கம் எழுதினார். துர்வினிதா என்பவர் சமஸ்கிருதத்தில் 'ஷப்தாவட்டார' எழுதியும் குணாத்யாவின் 'வட்டகதே' என்னும் நூலை சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தார். ஸ்ரீ புருஷா என்பவர் ''கஜாஷாஸ்த்ரா'' வை எழுதினார். இரண்டாம் ஷிவமாரா என்பவர் 'கஜாஷ்தகா' என்ற கன்னடபடைப்பை எழுதினார். கவிஞர் ஹேமசேனா

என்பவர் ‘இராகவ பாண்டவியா’, வாதிபசிம்மா என்பவர் ‘‘கத்ய சிந்தாமணி’’ மற்றும் ‘‘ஷத்ர சூடாமணி’’ யையும் எழுதினார். அதேபோல் நேமிசந்திரா என்பவர் ‘திராவியசாரா சங்கிரஹா’ என்ற நூலையும் சாவுண்டராயா என்பவர் சாவுண்ட புராணம் என்ற நூலையும் எழுதிப் புகழ் பெற்றனர்.

## பயிற்சிகள்

**I. வாக்கியங்களை நிறைவு செய்க:**

1. சிமுகா மன்னர் தன் தலைநகரமாக ____________ என்ற இடத்தை அமைத்துக் கொண்டார்.
2. ____________ என்ற நூலை ஹாலா என்பவர் எழுதினார்.
3. கன்னடத்தில் எழுதப்பட்ட முதல் கல்வெட்டு ____________ ஆகும்.
4. கடம்பர்களின் தலைநகரான ‘‘பானவாசி’’ இன்றைய ____________ மாவட்டத்தில் உள்ளது.
5. கங்கர்களின் மிகப் புகழ் வாயந்த மன்னர் ____________.
6. சாவுண்டராயா என்பவர் எழுதிய நூலின் பெயர் ____________ .

**II. சுருக்கமான விடை தருக:**

7. சாதவாகனர்களின் கடைசி அரசன் யார்? அவர்கள் பரம்பரை எவ்வாறு நலிவடைந்தது?
8. சாதவாகனர்களின் கலைகள் பற்றிய குறிப்புகளை எழுதுக.
9. கங்கர்களின் மரபினர் பெரிதும் போற்றும் சமூகப் பெருமைப் பண்புகள் யாவை என்பன பற்றி எழுதுக.
10. கங்கர்களின் காலத்திய நூல்களுள் நான்கினைக் குறிப்பிடுக.

© KTBS NOT TO BE REPUBLISHED

## III. செயல்பாடு :

1. கல்வெட்டுகளை படிக்கும் வழி முறைகளைப் பற்றி உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.

2. உங்கள் பள்ளிக்கு அருகிலுள்ள வரலாற்று சிறப்புமிக்க கோயில்களுக்குச் சென்று அதன் செய்திகளைத் தொகுத்து உங்கள் வகுப்புத் தோழர்களுடன் செய்திகளை பகிர்ந்து கொள்க.

## IV. செயல்திட்டம் :

1. கல்வெட்டுக்களைப் பகுத்தறிவதைப் பழகிக் கொள்ளவும்.

2. ஏதாவது ஒரு கல்வெட்டினைப் படித்தறிந்து அதுகுறித்த திட்டவரையறையைத் தயார் செய்க.

3. கங்கர்களின் தலைநகரங்களைக் கண்டு அவற்றை பற்றின செய்திகளை சேகரிக்கவும்.

©KTBS
NOT TO BE REPUBLISHED

| பாடம் 19 | பாதாமியின் சாளுக்கியர்கள் மற்றும் காஞ்சிப் பல்லவர்கள் |
|---|---|

H5U9R5

**இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன:**

- *பாதாமி சாளுக்கியர்களின் ஆரம்பம், புகழ்பெற்ற ஆட்சியாளர் இரண்டாம் புலிகேசியின் ஆட்சியின் போது பேரரசின் விரிவாக்கம் பற்றி அறிதல்.*
- *சமயம், சமுதாயம், இராணுவம் மற்றும் நிதித்துறை அமைப்புகள் பற்றி அறிதல்.*
- *வரைபடத்தில் பாதாமி சாளுக்கியரின் நாட்டு எல்லையை குறித்தல்.*
- *காஞ்சி பல்லவர்கள் இலக்கியம், மதம், கலை, கட்டக்கலை, கல்வி போன்ற துறைகளுக்கு ஆற்றிய பெருந்தொண்டுகள் பற்றி அறிதல்.*

@TNTBS NOT TO BE REPUBLISHED

## பாதாமி சாளுக்கியர்கள் (பொ.ச. 540 - லிருந்து பொ.ச. 753 வரை)

பொ.ச. 6ஆம் நூற்றாண்டில் பல சக்திவாய்ந்த மன்னர்கள் கர்நாடகாவை ஆட்சி செய்தனர். அவர்கள் பாதாமியின் சாளுக்கியர்கள் ஆவர். அவர்கள் தொடர்ந்து இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக கருநாடகாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வந்தனர். இந்தியாவின் மிகப் பெரும் வல்லரசுகளில் ஒன்றாகவும் தென்னிந்திய வரலாற்றின் ஒரு முக்கியமான இடத்தை நிறைவு செய்வதில் சிறப்பானவர்களாகவும் இச்சசாளுக்கியப் பரம்ரையினர் விளங்கினர்.

சாளுக்கியர்களின் ஆட்சி 6 ஆம் நூற்றாண்டில் தொடங்கி 8 ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் முடிவுக்கு வந்துள்ளது. இந்த வம்சத்தை உருவாக்கியவர் ராஜா ஜெயசிம்மன். இந்த வம்சத்தின் மிகவும் சக்திவாய்ந்த மற்றும் குறிப்பிடத்தக்க பேரரசர் இரணாடம் புலிகேசி ஆவார் கங்கர்கள், கடம்பர்கள்

மற்றும் அலுபாஸ் ஆகியோரை வீழ்த்தி தனது பேரரசை விரிவுபடுத்தினார்.

தென்னகத்தில் புகழ் உச்சியில் பல்லவர் வல்லவர்களாக ஆட்சியில் இருந்த காலத்தில் மகேந்திரவர்மன் இரண்டாம் புலிகேசியின் இறையாண்மையை மன்னன் மகேந்திரவர்மன் ஏற்காததால் புலிகேசி அவனை தோற்கடித்தான். வட இந்தியாவில் ஆட்சி செய்துக் கொண்டிருந்த ஹர்ஷவர்தனன் நர்மதை நதிக்கரை வரை முன்னேறியபோது, அவனைத் தடுத்து நிறுத்திய புலிகேசி, அவனது துணிச்சலான செயலுக்காக ''தட்சிண பாதேஸ்வரா'' என்ற பட்டப பெயரையும் ''தீபகற்பத்தின் இறைவன்'' என்ற பட்டத்தையும் பெற்றார்.



பாதாமி சாளுக்கியப் பேரரசு

இரண்டாம் புலிகேசி தன் ஆட்சி எல்லை முழுவதையும் ஒருமையத்திலிருந்து ஆட்சி செய்ய இயலாது என்று உணர்ந்தார். அதனால் அவர் தன் இளைய சகோதரன் குப்ஜா விஷ்ணு வர்த்தனாவை வேங்கியின் தலைவராகவும் ஜெயசிம்மாவை குஜராத் மாகாணத்தின் தலைவராகவும் நியமித்தார். வேங்கிச் சாளுக்கியர் என்ற பெயரில் கிட்டத்தட்ட ஐந்து நூற்றாண்டுகள் இவர்கள் ஆட்சி செய்தார்கள்.

யுவான் சுவாங் (சீனப்பயணி) சாளுக்கியத் தலைநகர் வந்து பார்த்துப் பெருமைக் கொண்டு இரண்டாம் புலிகேசியைப் பற்றிப் பரவலாகவும் பெருமையாகவும் விளக்கிப் புகழ்ந்துள்ளார். இம் மன்னர் நேர்மையும், அறப்பண்பும் நிறைந்தவர், அன்புடையோர் என்றும் ஒழுங்கு பட்ட படை முறையும் படைவீரர்கள் இறப்பைக் கண்டு துளியும் அஞ்சாத துணிவும்

@KTBS NOT TO BE REPUBLISHED

உடையராய் விளங்குகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார். குடிமக்கள் உண்மையை நேசிப்பவர்களாய் வாழ்ந்தும் நிறைவுறு மனத்துடனும், சுயமரியாதையும் வளமையை எதிர் நோக்கும் நேர்மைப் பண்பையும் மன்னரின் நம்பிக்கைக் குரிய வராகவும் விளங்கினர். அதேபோல் மன்னரும் குடிமக்களிடம் பேரன்பு கொண்டு போற்றினார் என்று மொழிந்துள்ளார்.

இரண்டாம் புலிகேசி ஒரு நம்பிக்கையுள்ள பேரரசர். அவர் வெளிநாட்டு மன்னர்களுடனும் நட்புறவு கொண்டிருந்தார். அவர் பாரசீக மன்னர் இரண்டாம் குஸ்ருவுடன் இராஜ தந்திர உறவுகளைக் கொண்டிருந்ததாக அரபு வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

சில ஆண்டுகள் கழித்து. பல்லவமன்னன் முதலாம் நரசிம்மவர்மன் சாளுக்கியரைப் பழி தீர்த்துக் கொண்டான் (தன் தந்தை மகேந்திரவர்மனைத் தோற்கடித்த முந்தைய வரலாற்றினால்). அவன் சாளுக்கிய அரசின் தலைநகரான வாதாபியைக் கைபற்றினான். சாளுக்கிய வம்சத்தின் கடைசி அரசனான கீர்த்திவர்மனின் ஆட்சிக்காலத்தில் இராட்டிரக்கூடர்கள் சாளுக்கியத்தை கைப்பற்றிக் கொண்டனர்.

**சாளுக்கியரின் பங்களிப்பு :**

சாளுக்கியர்கள் கன்னட நாட்டை, மொழியை, பண்பாட்டைப் போற்றி வளர்த்ததோடு அதன் சமய தர்மங்கள் இலக்கியங்கள், கலை, கட்டிடக் கலை போன்ற அனைத்தையும் வளர்த்தனர். அவர்களுடைய படை கர்நாடபல்லா எனறு அழைக்கப்பட்டது. பாதாமி சாளுக்கியர்களின் ஆட்சி கர்நாடக வரலாற்றில் ஒரு சிறந்த மற்றும் புகழ்பெற்ற காலக்கட்டமாகும் இந்த காலக்கட்டம் இராணுவத்தில் மட்டுமல்ல கலை மற்றும் இலக்கியத்திலும் சமமாக குறிப்பிடத்தக்கது.

ஏறக்குறைய 200 ஆண்டுகள் ஆட்சி செய்தனர், அரசர் நிர்வாகத்தில் தீவிரமாக ஈடுபட்டார், மன்னராட்சியில் மாநிலங்கள் மாவட்டங்களாக 'விஷயா' என்றும் 'விஷயாதிபதி'

@KTBS NOT TO BE REPUBLISHED

என்பவரே அம்மாவட்டத்தைப் பார்த்துக் கொள்பவராகவும் விளங்கினார். கிராமமே நிர்வாக ஆட்சியில் சிறிய பகுதியாகும். கிராமத்தலைவர்களே கிராமக் கணக்குகளையும் நிர்வாகத்தையும் பார்த்துக் கொண்டனர்.

சாளுக்கியர்கள் எல்லாவகையான சமயங்களுக்கும் (சைவம், வைணவம், பௌத்தம், சமணம்) ஊக்கமும் ஆக்கமும் கொடுத்துப் போற்றினர். பௌத்த சமய விகாரங்களும், சமணக் கோயில்களும் கட்டிட ஊக்குவித்தனர்.

பாதாமியின் சாளுக்கியர்கள் இலக்கியத்தை ஊக்குவித்தனர். கன்னடம் அவர்கள் மொழியாகும். இக்காலத்தில் ‘‘திரிபதி’’ என்ற கவிதை நடை வளர்ந்தது. கன்னடத்தில் நூல்கள் என்று தனியே வரவில்லை என்றாலும் பாறைகளில் கல்வெட்டுக்கள் கன்னடத்தில் விளங்கின. ஒரு செய்யுள் பாதாமியின் கப்பே அரபட்டா திரிபதி வடிவில் எழுதப் பட்டுள்ளது.

கப்பே அரபெட்டாவிலுள்ள
ஒரு கவிதைக் கல்வெட்டு



ಸಾಧುಂಗೆ ಸಾಧು
ಮಾಧುರ್ಯಂಗೆ ಮಾಧುರ್ಯಂ
ಬಾಧಿಪ್ಪ ಕಲಿಗೆ
ಕಲಿಯುಗ ವಿಪರೀತನ್
ಮಾಧವನೀತನ್ ಪೆರನಲ್ಲ ॥

ಒಳ್ಳೆಯವರಿಗೆ ಒಳ್ಳೆಯವನು. ಮಧುರಗುಣ ಉಳ್ಳವರಿಗೆ ಮಧುರವಾಗಿ ವರ್ತಿಸುವವನು. ತೊಂದರೆಪಡಿಸುವ ದುಷ್ಟರಿಗೆ ದುಷ್ಟರಂತೆ ಕಾಣಿಸುವವನು. ಈತನು ಅಸಾಮಾನ್ಯನಾದ ಮಾಧವನೇ ಆಗಿರುವನು.

இக்காலத்தில் சமஸ்கிருத பெரும்புலவர்கள் ரவிகீர்த்தி, விஜ்ஜிகா மற்றும் அகாலங்கா போன்றோர் ஆவர். இரண்டாம் புலிகேசியின் மருமகளும், புலவியுமான விஜ்ஜிகா, அவர்களின் ‘கௌமுடி மஹோத்சவ்’ மற்றும் சிவபக்தராக்கா அவர்கள் இயற்றிய ‘ஹர பர்வதியா முக்கியமான சமஸ்கிருத நாடகங்களாகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED



விருபாக்ஷா கோயில், பட்டதக்கல்லு

பாதாமிச் சாளுக்கியர்கள் மாபெரும் கட்டடக்கலை வல்லுநர்கள். அவ்வாறே கலை, இலக்கியங்களிலும் கட்டுக்கடங்கா ஆர்வலர்கள். பாதாமியில் கண்கவர் கவிநுட்பமான அழகிய கோயிலைக் கட்டியுள்ளனர். அவை ஐஹோலே பட்டதக்கல்லு என்பனவகும். அவர்கள் தனிச்சிறப்புடைய சிலை வடிப்பு முறையைத் தங்களுக்கே உரிய முறையில் ''சாளுக்கிய நடை'' என்றதோர் ''இந்தியக் கட்டிடக்கலை''யின் ஓர் பரிமாணத்தையே உருவாக்கினர், பாதாமியில் உள்ள கற்பாறைகளில் குகைக் கோயில்களைக் குடைந்தெடுத்தனர். அவர்கள் கலைஞர்களையும் சிற்பிகளையும் ஊக்கம் கொடுத்துப் போற்றினர்.

அவர்களின் மிகச் சிறந்த ''சாளுக்கிய நடை'' முறைக்கு உரிய அழகிய கோயில்கள் என்றால் அவை ஐஹோலே, பட்டதக்கல்லு என்ற இடங்களில் இருப்பவைதான் எனலாம். கோயில் கட்டடக்கலைக்கு ஒரு தொட்டில் என்றால் அது ஐஹோலே கோயில்தான் கோயிலின் படிப்படியான வளர்ச்சிக்கு, கட்டக் கலையின் பரிணாமவளர்ச்சிக்கு இவ்விடத்தில் தான் தொடக்க ஆய்வு செய்தனர் என்றும் கூறலாம். இப்படித்தான் இந்த மாப்புகழ் வாய்ந்த லோக்கேஷ்வரா (விரு பாக்ஷா) மற்றும் திரிலோக்ஷ்வரா (மல்லி கார்ஜுனா) கோயில்களைக் காணவேண்டும். பாதாமிக் குகைகளில் காணப்படும் உன்னதமான

NOT TO BE REPUBLISHED @KTBS

தெய்வச்சிலைகளான விஷ்ணு, வரரகா, ஹரிகரா மற்றும் அர்த்த நாரீஸ்வரா போன்றன கலையின் முழுமையும் அடங்கிய ஒன்றாக கலையின் இறுதி நிலையே இதுவோ என்று கூறுமாறு சாளுக்கிய கலை நுட்பவளர்ச்சியாய்க் காணலாம். வண்ண ஓவியங்களில் கூட ஆர்வம் செலுத்தி வளர்த்தனர். இதற்கான சான்றாய் அஜந்தா ஓவியங்கள் உலக புகழ் பெற்ற ஒன்றாய் விளங்குகிறது.

## காஞ்சியின் பல்லவர்கள் (பொ.ச. 350 முதல் பொ.ச. 895 வரை)

பல்லவர்கள் தமிழ்நாட்டின் முதல் அரசர்கள் ஆவர். தென்னிந்தியாவில் மன்னரின் வழி மரபுகளில் பல்லவர்களே குறிப்பிடத்தகுந்த செல்வாக்குடன் ஆட்சியில் திளைத்திருந்தனர். அவர்கள் பொ.ச. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து C.E 9 ஆம் நூற்றாண்டு வரை ஆண்டிருந்தனர். தொடக்க காலத்தில் அப்பல்லவர் சாதவாகனர்களுக்கு உதவும் அலுவலர்களாய் இருந்தனர். இச் சாதவாகனர்கள் ஆட்சித்திறனில் குறைந்தபோது, பல்லவர்கள் தாங்களாகவே அவ்வாட்சி எல்லைக்கு மன்னர்கள் என்று உறுதிபடுத்திக் கொண்டனர்.

©KTBS NOT TO BE REPUBLISHED

இம் மன்னர் பரம்பரையின் முதல் மன்னன் சிவாஸ்கந்தவர்மன் ஆவான் இப்பல்லவர்களும் கடம்பர்களும் நிலையான உட்பகையை ஒருவருக்கொருவர் மேல் வேறுபுகளிடனமின்றிப் போரிட்டவாறு இருந்தனர். சாளுக்கியப் பரம்பரையின் இரண்டாம் புலிகேசி பல்லவப் பரம்பரையின் மகேந்திரவர்மனைத் தோற்கடித்தான். முதலாம் நரசிம்ம வர்மப் பல்லவன் ஆட்சிக்கு வந்து மிகப் புகழ் வாய்ந்த மன்னன் என்ற பெயர் பெற்றார். அவனே சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியைப் பழவாங்கி வாதாபியை கைப்பற்றினான். இந்தப் பெருந் துணிச்சலான வீரச் செயலால் ''மாமல்லன்'' என்றும் 'வாதாபிகொண்டான்' என்றும் வீரப்பட்டப் பெயர்களைச் கொண்டிருத்தான். ''யுவான்சுவாங்' என்ற சீனப் பயணி இம் மன்னன் ஆட்சிக்காலத்தில் காஞ்சியைக் கண்டு போற்றிச் சென்றார் நரசிம்மவர்மப் பல்லவன் காஞ்சி க்கு அண்மையில் ஒரு கடற்கரைநகரம் ஒன்றை அமைத்தான், அதற்கு மகாபலிபுரம் என்று பெயரிட்டார். தனிக்கற்களால்

ஆன கோயில்கள் பல அமைத்தான் அபராஜித் பல்லவன் ஆட்சிக் காலத்தில் சோழர் பரம்பரையின் ஆதித்யன் பல்லவர் ஆட்சிக்கு முடிவுகட்டினான்.

**பல்லவரின் பங்களிப்புகள் :**

தமிழ் நாட்டில் முறைப்படியான நிர்வாகத் திறனை 4-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு அறிமுகப் படுத்தியவர் இவர்களேயாவர். அவர்கள். இலக்கியம், மதம், கலை, கட்டடக்கலை மற்றும் கல்வி போன்றவற்றிற்கு பெருநன்மைகளை செய்து உலகம் போற்றும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர்.

சாளுக்கியர்கள் வாதாபியையும் பல்லவர்கள் காஞ்சியையும் ஆட்சிபுரிந்த அந்தக் காலம். தென்னகத்தின் வீரம் விளைந்த பேராண்மைக் காலமாகக் கருதப்பட்டது. அப்பல்லவர் ஆட்சிக்காலம் மிகவும் உறுதியாயும் முறைப்படுத்தப் பெற்ற நிர்வாகத்தையும் கொண்டு விளங்கியது. அங்கே அமைச்சர்களும் மாநில அலுவலர்களும் இருந்தனர். அவ்வரசாட்சி மண்டலங்களாக, நாடுகளாக, கிராமங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. கிராமங்களின் சிக்கல்கள், பிரச்சனைகளைக் கிராமசபைகள் தீர்த்து வைத்தன. கிராம போஜகா என்பவர் கிராமங்களின் நிர்வாகத்தைப் பார்த்துக் கொண்டார்.

பல்லவர்கள் தமிழையும், சமஸ்கிருதத்தையும் போற்றி வழங்கினர். காஞ்சி, சமஸ்கிருத இலக்கியத்தின் மையமாய் இருந்து வந்தது, பாரவி (கிருதார்ஜுனியா) மற்றும் தண்டி (தக்ஷகுமாரசரித்தா) போன்ற கவிஞர் பெருமக்கள் பல்லவப் பரம்பரையில் குறிப்பிடத்தகுந்தவர்கள். மகேந்திரவர்மன் என்ற அரசனே சமூக நாடகங்களையும் ‘மத்த விலாச பிரகாசனா’ மற்றும் ‘பாகவதுஜுகா’ என்ற நூலையும் படைத்துள்ளார். பல்லவர்கள் அனைத்து மதங்களையும் போற்றினர்.

முற்காலப் பல்லவர்கள் பௌத்த சமயத்தை தழுவி வந்தனர். நளந்தா பல்கலைக் கழகத்தின் மிகப் புகழ் வாய்ந்த தர்மபாலா என்பவர் காஞ்சியில் பிறந்துள்ளார். சமண சமயத்தை மகேந்திர வர்மன் தழுவியதால் அவ்வாட்சியில் பல சமணர்கள் இருந்தனர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

சைவமும் வைணவமும் பொ.சா 7 ஆம் நூற்றாண்டில் மிகவும் ஓங்கிச் சிறந்து விளங்கின. பெரும் புகழ் வாய்ந்த சமயத்துறவிகளான 63 நாயன்மார்கள் சைவசமயத்தைப் பரப்பினர். பெரும் புகழ் வைணவத் துறவிகளான 12 ஆழ்வார்கள் வைணவ சமயத்தை பரப்பினர்.

இக்காலக் கட்டம், பக்தி இயக்கம் செழித்தோங்கி வளர்வதற்கு பெருந்துணை புரிந்தது. அதே நேரத்தில் வேதம் சார்ந்த சமயங்கள் மறு மலர்ச்சி பெற்றிடவும் அருந்துணையாற்றியது. 'ஸ்லோகங்கள்' தமிழில் தோன்றின. பக்தி மொழியாய்த் தமிழ் தன்னை உயர்த்திக் கொண்ட காலமாகும்.


மகாபலிபுரம் - ஐந்துதேர்கள்

@KTBS NOT TO BE REPUBLISHED

பல்லவர்கள் கலையிலும் கட்டிடக்கலையிலும் விருப்ப முள்ளவர்கள். அவர்கள் தங்கள் அரசாட்சியில் பல கோயில்களை கட்டினர் அவை அவர்களின் கலைத்திறனுக்காக குறிப்பிடத் தக்கவை. பல்லவ கட்டிக் கலையை கல்லால் செதுக்கப்பட்ட கோயில்கள் என்றும் கட்டிடமைப்பு கொண்ட கோயில்கள் என்று வகைபடுத்தலாம்.

பாறைகளில் குடைந்த பல கோயில்களை மகாபலிபுரத்தில் காணலாம். இக்கோயில்களில் அற்புதமான ஒற்றைக்கல் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளை. மகாபாரதம், பகவத்கீதைக் கதைகளையும் கல் சிற்பக்கவிதையாய்க் கூறும். உலகம் போற்றும் பஞ்சரதங்கள் (ஐந்து தேர்கள்) ஒவ்வொரு தனித்தனிக் கற்கோயில்கள் என்ற பெருமையை உய்த்துணர்ந்து நோக்கிடச் செய்யும். 'அர்ச்சுனன் தவம்' என்ற சிலை வடிவம் சிறந்ததோர் கலைப் பெருமைக்குரிய படைப்பாகும்.

காஞ்சியில் உள்ள கைலாச நாதர் கோயில், ஏகாம்பரநாதர் கோயில், வைகுண்ட பெருமாள் கோயில் போன்றனவும்

கடற்கரைத் துறைமுகநகரான மகாபலிபுத்தில் உள்ளன. இவை அனைத்தும் இந்தியக் கட்டக்கலைக்கும் கோயில் முறைகளுக்கும் சிறந்த தோர் சான்றுகளாக திகழ்வன்.

கோயில்களே சமயங்களின் செயல்களுக்கும் கலைத் துறைச் செயல்களுக்கு மையங்களாய்ச் செயல்பட்டன. மாலை வேளைகளில் கிராமப்புற மக்கள் கோயில் முற்றங்களில் ஒன்று கூடித் தங்களின் பல்வேறு செய்திகளை பேசி, விவாதித்துக் கொண்டிருந்தார்கள். அம் மக்கள் மேலும் தங்கள் ஓய்வு நேரங்களில் இங்கு வந்தமர்ந்து புராணக் கதைகளைக் கேட்டும் பக்தி பாடல்களை பாடியும் கேட்டும் மகிழ்வர். இதனால் இவ்வகை கோயில்கள் சமுதாயத்திற்கும் கல்வித்துறைக்கும் மையங்களாய் விளங்கின.

பல்லவர்கள் மிகச்சிறந்த கடற் படைகளை நடந்தினர். கடல் வாணிகம் செய்வோர் தெற்கு ஆசிய நாடுகளான மலாயா, இந்தோனேஷியா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர் கொண்டிருந்தனர். இந்திய மொழியும் நம்பிக்கைகளும், மரபுகளும் பண்பாடுகளும் இன்றைக்கும் அந்த நாடுகளில் வாழ்ந்து வருவதைக் காணலாம்.

©KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக:**

1. இரண்டாம் புலிகேசியால் தேர்ந்க்கடிக்கப்பட்டப் பல்லவ மன்னன் ____________ ஆவார்.
2. கருநாடகா என்ற பெயரை அளித்த அரசபரம்பரை ____________
3. ‘ஹரபர்வதிக்கா’ என்ற சமஸ்கிருத நாடகத்தை எழுதியவர் ____________.
4. வாதாபி கொண்டான் என்ற புகழ்ப் பெயரை அடைந்த பல்லவ மன்னன் ____________
5. ‘அருச்சுனன் தவம்’ சிலை வடிவம் இருக்கும் இடம் ____________ உள்ளது.

**II. கீழ்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக:**

6. இரண்டாம் புலிகேசி தன் நாட்டை எவ்வாறு விரிவுப் படுத்தினான்?
7. பாதாமி சாளுக்கியர்களின் நிர்வாக முறைகளை விவரி.
8. பாதாமி சாளுக்கியர்கள் இலக்கியங்களின் மீது பேரார்வம் காட்டினர் என்பதை சான்றுகளுடன் விளக்குக.
9. சமஸ்கிருதத்தையும் தமிழையும் பல்லவர்கள் எவ்வாறு ஊக்குவித்தார்கள்?
10. கலை மற்றும் கட்டிடக்கலைக்கு பல்லவர்களின் பங்களிப்புகளை விவரிக்கவும்.

**III. செயல்பாடு :**

1. பாதாமி சாளுக்கியர்கள் கன்னட மொழியின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புகள் பற்றிய கருத்துகளை மாணவர்களை குழுக்களாக அமர்ந்து கலந்துரையாட செய்க.
2. உங்கள் கன்னட ஆசிரியரிடம் கேட்டும் கன்னட புத்தங்களை படித்தும் திரிபதி பற்றிக் கற்றுக் கொள்வீர்.
3. காஞ்சிக்கும், மகாபலிபுரத்திற்கும் வரலாற்று சுற்றுலா செல்லதற்கான கல்வி பயணத்திற்கு ஏற்பாடு செய்யவும்.

**IV. செயல்திட்டம் :**

1. ஏதேனும் உள்ளூர் வரலாற்றுச் சிறப்புடைய இடங்களுக்குச் சென்று செய்திகளைத் சேகரிக்கவும்.
2. பாதாமி, ஐபோலே மற்றும் பட்டதக்கல்லில் உள்ள முக்கியமான கோயில்களின் படம் வரையவும் மேலும் படங்களை சேகரித்து ஒரு படத் தொகுப்பினை தயாரிக்கவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

| பாடம் 20 | மான்யகேதாவின் ராஷ்ட்ரகூடர்கள் மற்றும் கல்யாணா சாளுக்கியர்கள் |
|---|---|

U2G4G1

**இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன:**

- *ராஷ்டிர கூடர்கள் வம்சத்தை ஏற்படுத்தியவர் நந்தி துர்கா ஆவார். அமோகவர்ஷா மிகவும் புகழ்வாய்ந்த அரசராவார்.*
- *நிர்வாகம், இலக்கியம் மற்றும் கட்டிடக்கலை ஆகியவற்றில் ராஷ்டிர கூடர்களின் பங்களிப்பு.*
- *நிர்வாகம், இலக்கியம் மற்றும் கட்டிடக்கலை ஆகியவற்றில் கல்யாண சாளுக்கியர்களின் பங்களிப்பு.*
- *இந்திய வரைபடத்தில் ராஷ்டிரக் கூடர்களின் ஆட்சிப் பகுதிகளை குறித்தல்.*

©KTBS NOT TO BE REPUBLISHED

## ராஷ்டிர கூடர்கள் (பொ.ச. 753 - பொ.ச. 973)

ராஷ்டிரகூடர்கள் கன்னடியர்கள் ஆவர்-அவர்கள் துவக்கத்தில் சாளுக்கியர்களுக்கு கப்பங்கட்டும் அரசர்களாக இருந்தனர். பிறகு தென்னிந்தியாவில் பரந்த பேரரசை நிருவியப்பிறகு அவர்கள் புகழுடன் விளங்கினர். கருநாடக வரலாற்றில் ராஷ்டிரகூடர்களின் காலம் ஒரு முக்கிய காலமாக இருந்தது. கருநாடகப் புகழை உச்சிக்கு எடுத்து சென்ற பெருமை அவர்களையேச் சாரும் அவர்களின் அரசு வடக்கில் நர்மதையாற்றிலிருந்து தெற்கில் காவேரியாறுவரை பரவி இருந்தது. எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோயிலும் முதல் கன்னட இலக்கியமான கவிராஜ மார்க்கமும் ராஷ்டிர கூடர்களின் ஆட்சிக்கு அழியாப் புகழைத்தந்தது.

நந்திதுர்கா அரசரால் துவங்கப்பட்ட அவர்களுடைய ஆட்சி கிருஷ்ணா, இரண்டாம் கோவிந்தர், துருவா, மூன்றாம் கோவிந்தர்.

அமோகவர்ஷர் மற்றும் பிறரால் தொடரப் பட்டு புகழின் உச்சியை அடைந்தது. அமோகவர்ஷரின் ஆரம்பகால ஆட்சியில் பல குறுக்கீடுகளை அவர் சந்தித்தார். ஆனால் அவர் பகையை பாராட்டாது அமைதியை நாடினார். இதனால் கங்கர்கள் மற்றும் பல்லவர்களுடன் பகைமையை புறந்தள்ளி திருமண உறவை மேற்கொண்டார். அவர் அமைதியை விரும்பிய வராதலால் வடக்கில் ஒரு சிலப்பகுதிகளை விட்டுக் கொடுக்க வேண்டியவரானார். மேற்கு கடற்கரையில் உள்ள துறைமுகங்கள் ஓயாது சுறுசுறுப்புடன் இயங்கும் வாணிகமையங்களாக விளங்கின. பாரசீகம் மற்றும் அரபு நாடுகளுடன் மேற்கொண்ட வாணிகத்தால் அளவுக்கு அதிகமான செல்வ செழிப்பை பெற்றுத்திகழ்ந்தது. இக்காலக் கட்டத்தில் பல பயணிகளும் வணிகர்களும் ராஷ்டிர கூடர்களின் அரசுக்கு வருகைத்தந்தனர். அவர்களில் முக்கியமானவர் அரேபிய பயணி சுலைமான். அமோகவர்ஷன் உலகில் சக்திவாய்ந்த நான்கு பேரரசர்களில் ஒருவர் என்று புகழ்ந்துள்ளார்.

அமோகவர்ஷர் ஒரு வீரமிக்கவராகவும், அமைதியை பேணுபவராகவும் அனைத்து சமயத்தவர்களையும் ஊக்குவிப்பவராகவும் விளங்கினார். அவருக்குப் பின் இரண்டாம் கிருஷ்ணர், மூன்றாம் இந்திரர் மற்றும் மூன்றாம் கிருஷ்ணர் ஆகியோர் ஆட்சிக்கு வந்தனர். இரண்டாம் கர்கா காலத்தில் கல்யாண சாளுக்கிய மன்னர் இரண்டாம் தைலப்பாவால் ராஷ்டிர கூடர்களின் ஆட்சி முடிவுக்குவந்தது.

NOT TO BE REPUBLISHED @KTBS

**ராஷ்டிரகூடர்களின் பங்களிப்புகள்:**

அரசு உரிமை ராஷ்டிர கூடர்களிடையே மன்னர் பதவி பரம்பரைக்கு உரிமையானது. அரசருக்கு உதவ அமைச் சர்கள் அடங்கிய குழு இருந்தது. அயல்நாட்டு துறையை கண்கானிக்க அமைச்சரவையிலுள்ள சிறப்பு வாய்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் மகாசந்திவிக்ரகி என்ற வெளியுறவு அமைச்சர் ஆவார். நிர்வாக திறைமைக்காகவும் வசதிக்காவும்

அரசு ராஷ்டிரா (மண்டலம்) விஷ்யா, நாடு மற்றும் கிராமம் போன்ற பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன.



ராஷ்டிர கூடர்களின் பேரரசு

கிராமத் தலைவர் கிராமபதி அல்லது பிரபுகவுண்டர் என அழைக்கப்பட்டார். அவர் கிராமத்தின் படைத்தலைவராகவும் விளங்கினார். அவருக்கு கிராம கணக்காய்வாளர் உதவினார். அங்கு கிராம சபையும் இருந்தது. நாடுபகுதியை நாடுகவுண்டர் கண்காணித்தார். அதைப் போலவே விஷயா மற்றும் ராஷ்டிராப்பகுதிகளிலும் அதிகாரிகள் இருந்தனர். விஷயபதி விஷயாவின் (மாவட்டம்) அதிகாரியாவார் - ராஷ்டிரப்பதி ராஷ்டிராவின் அதிகாரியாக விளங்கினார்.

நிலவரி, பொருள்வரி, வீட்டுவரி, கடைகள் வரி மற்றும் தொழில்வரி போன்றவை முக்கியமான வருவாயாகும், அயல் நாட்டு வாணிகம் அரசுக்கு அதிகமான வருவாயைத்தந்தது.

ராஷ்டிரகூடர்கள் கன்னடம் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளையும் ஆதரித்தனர். சமஸ்கிருதத்தில் வெகு மதிப்பான படைப்புகள் எழுதப்பட்டன. திரிவிக்ரமா என்பவர் நலச்சம்பு என்ற நூலை எழுதினார். ஹாலாயுதா என்பவர் கவிராசியா என்ற நூலை எழுதினர். ஜினசேனா, கணிதமேதை, மகாவீர ஆச்சாரியா அமோகவர்ஷரின் அவைக்கள மேதைகளாவர். முதல்

@KTBS NOT TO BE REPUBLISHED


நடோஜா பம்பா

கவியான பம்பா ஆதிபுராணா என்ற நூலை கன்னடத்தில் எழுதினார். இது விக்ரமார்ஜுனாவின் வெற்றியைப் பற்றி குறிப்பிடுகிறது. கவிச்சக்கரவர்த்தி பொன்னா, சாந்தி புராணம் என்னும் நூலை எழுதினார். அமோகவர்ஷரின் அவையிலிருந்து ஸ்ரீவிஜயா ‘கவிராஜ மார்க்கம்’ என்ற நூலை எழுதினார். இது கன்னடத்தில் மிகச்சிறப்பான காவியமாகும். இவைகளெல்லாம், பழங்காலத்திலிருந்தே எவ்வாறு கன்னட இலக்கியங்கள் பெருகியிருந்தன என்பதை தெளிவுப் படுத்துகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஹம்பியில் உள்ள கன்னடப் பல்கலைக் கழகம் முதல் கவிஞ்ரான பம்பாவின் நினைவாக கர்நாடகாவில் உள்ள சாதனையாளர்களுக்கு நாடோஜா விருதை வழங்கி சிறப்பிக்கிறது.

ராஷ்டிரகூடர்களின் ஆட்சிகாலத்தில் எழுதப்பட்ட சிறப்புக்குரிய உரைநடை படைப்பு வட்டாராதனே ஆகும். இதன் ஆசிரியர் சிவகோட்டாச்சாரியா ஆவார். இது சமண சமய கதைகளின் தொகுப்பு ஆகும். வட்டார கன்னட மொழிவழக்கில் எழுதப்பட்டது. இதனுடைய தனிச்சிறப்பாகும். அதிலுள்ள இடங்களின் அமைப்பு, பாத்திரப்படைப்புகளின் தன்மை மற்றும் உரையாடல்கள் மிகச்சி றப்பாக உள்ளன. இது பம்பா காலத்திற்கும் முற்பட்ட மிகப்பெரிய உரைநடை படைப்பாகும், கன்னட இலக்கிய வரலாற்றில் இது அழியாப் புகழை பெற்று விளங்குகிறது.

அக்காலத்தில் அக்ரகாரங்களும், மடங்களும் மிகச்சிறந்த கல்வி மையங்களாக விளங்கின. அங்கு சமஸ்கிருதம், வேதங்கள், சோதிடம் தர்க்கசாஸ்திரம் மற்றும் புராணங்கள் போன்ற பாடங்கள் நடத்தப்பட்டன. பிஜாப்பூர் மாவட்டத்தின் விஜயபுர தாலுக்காவில் உள்ள சாலோட்டக்கி முக்கியமான கல்வி மையங்களில் ஒன்றாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

ராஷ்டிரகூட மன்னர்கள் சிவன் மற்றும் விஷ்ணுவை வழிபட்டனர். சமணசமயம் அரச சமயமாக உருவெடுத்து எல்லா இடங்களிலும் பரவியது இருந்தாலும் பிற மதங்களும் ஆதரிக்கப்பட்டன. பல சிவன் மற்றும் விஷ்ணு கோவில்களைக் கட்டினர்.



கைலாசநாதர் கோயில், எல்லோரா

ராஷ்டிர கூட அரசர்கள் கலையின் புரவலர்கள் இருந்தனர். இந்திய கலைக்கு அவர்கள் வழங்கிய பங்களிப்புகளை கல்லில் செதுக்கப்பட்ட எல்லோரா மற்றும் எலிபெண்டா கோவில்களில் காணலாம். எல்லோராவில் முதலாம் கிருஷ்ணர் ஒரே கல்லில் கட்டிய கைலாச நாதர் கோயில் மிகவும் வியக்கத்க்க ஒன்றாகும். இக்கோயில் 100 அடி உயரமும் 276 அடி நீளமும் 154 அடி அகலமும் கொண்ட ஒரே பாறையிலிருந்து செதுக்கப்பட்டதாகும். அதன் அருகில் புகழ்வாய்ந்த தச வட்டாரா குகை கோயிலும் உள்ளது. மும்பைக்கு அருகிலுள்ள எலிபெண்டா குகையில்

உள்ள சிற்பங்கள் ராஷ்டிரக்கூடர்களின் சிற்பகலையில் ஒரு மைல் கல்லாகும். அர்த்தநாரீஸ்வரர் மற்றும் திருமூர்த்தி சிலைகள் மிகவும் கலைநய நுணுக்கமிக்க ராஷ்டிரகூடர்களில் எழிலோடு செதுக்கப்பட்டுள்ளன. கோயில்கள் ராய்ச்சூர் மாவட்டத்திலுள்ள ஷிராவால் என்னுமிடத்தில் உள்ளன. பட்டதக்கல்லு என்ற இடத்தில் ஒரு அழகு வாய்ந்த சமண கோயிலும் உள்ளன.

**கல்யாண சாளுக்கியர்கள் (பொ.ச. 973 - பொ.ச. 1189)**

இந்திய வரலாற்றில் கல்யாண சாளுக்கியர்களின் ஆட்சி காலம் பெருமிதத்துக்குரிய காலக்கட்டமாகும். அவர்கள் கலை, இலக்கியம் மற்றும் கல்வி போன்றவற்றிற்கு சிறப்பான ஆதரவு அளித்தனர். அவர்கள் கன்னடம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வளர்ச்சிக்கு சிறப்பாக ஊக்கம் அளித்தனர். அவர்கள் புகழ்வாய்ந்த கன்னட கவிஞர்களான துர்கசிம்ஹா, ரன்னா, நாகச்சந்திரா இன்னும் பலரும் புலவர்களாக விளங்கினர். இக்காலக்கட்டத்தில் தான் வசன இலக்கியங்கள் தோன்றின.

ராஷ்டிரகூட அரசர் இரண்டாம் தைலப்பா ராஷ்டிர கூடர்களின் மன்னர் இரண்டாம் கார்காவை தோற்கடித்து மான்யகேதாவை கைபற்றி கல்யாண் சாளுக்கிய அரசை ஏற்படுத்தினார். இவர் ஏறத்தாழ 24 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவ்வம்சத்தின் முக்கியமான அரசர்களுள் முதலாம் சோமேஸ்வரர் மிகவும் முக்கியமானவர் ஆவார் கல்யாண் என்ற புதிய நகரத்தை உருவாக்கி அதை தலைநகராகக் கொண்டார். இதுவே பீதர் மாவட்டத்திலுள்ள இன்றைய பசவகல்யாண் ஆகும். முதலாம் சோமேஸ்வரர் பல போர்களில் ஈடுபட்டாலும் தன் ஆட்சிப்பகுதியின் எல்லை குறுகாமலிருக்க கவனமாக இருந்தார். அவர் சோழ மன்னரை குப்பம் என்ற இடத்தில் தோற்கடித்தார்.

(பொ.ச. 1076ல்) இவ்வம்சத்தின் மிகவும் புகழ்வாய்ந்த அரசர் முதலாம் சோமேஷ்வரரின் மகனான ஆறாம் விகரமாதித்தியர் ஆவார். அவர் ஒரு சிறந்த வீரத்துடன் கூடிய வீரர் மற்றும் சிறப்பான ஆட்சியாளர் ஆவார். அவர் பொ.ச. 1076ல் 'சாளுக்கிய விக்ரம சாகாவை' தோற்றுவித்தார். அவர் ஒய்சளமன்னர் விஷ்ணுவர்தனரின் புரட்சியை ஒடுக்கினார் அவர் இலங்கை மன்னர் விஜயபாகு உடன் நல்லுறவை கொண்டிருந்தார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

அவர் காலத்தில் இருந்த விக்னேஷ்வரால் (மித்தாக்ஷரத்தின் அதிபதி) கடந்த காலத்தில் கல்யாணத்தைப் போன்ற ஒரு பெரிய நகரம் இருந்ததில்லை என்றும் எதிர்காலத்தில் இருக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். விகர்மாதித்தியனைப் போன்ற மன்னனைப் பார்த்ததில்லை, கேள்விபட்டதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆறாம் விக்ரமாதித்தயன் மற்றும் மூன்றாம் சோமேஸ்வரருக்குப் பிறகு வந்த மன்னர்களின் காலத்தில் அரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது. நான்காம் சோமேஸ்வரர் காலத்தில் இது மிகவும் பலவீனமடைந்தது மற்றும் கலச்சூரி பிஜ்ஜாலா என்பவர் கல்யாணத்தை கைப்பற்றினார். இந்தச் சமயத்தில்தான் சமூகப் புரட்சியாளர் ஸ்ரீஜெகத்சோதி பசவண்ணர் தோன்றினா இந்தப் புரடசியின் காரணமாக பசுவதி சிவசரணின் விழுமியங்கள் மக்களைச் சென்றடைந்தன.

பசவண்ணர் மூன்று வடிவங்களில் போதித்தார் அவைமென்மையான அறிவுரை கடுமையான விமர்சனம், கண்டிப்பான எச்சரிக்கை. முழு பக்தியுடன் சிவனிடம் சரணடைவதே முக்திக்கான ஒரே வழி என்று போதித்தார். 'காயவே கைலாச' (உடல் இறைவனின் இருப்பிடம்) என்று அறிவித்தார். பொ.ச. 1161 இல் அனுபவ மண்டபத்தை நிறுவினார். அவர் தனது வசனங்களை பேச்சு வழக்கு கன்னடத்தில் எழுதி மக்கள் மனதில் இடம் பெற்றார்.


உலக பேராசான்
பசவண்ணர் பண்பாட்டின்
பெருந்தலைவர்

© KTBS
NOT TO BE REPUBLISHED

பண்பட்ட சமுதாயத்தை நிலைநிறுத்த இவர் ஆற்றிய தொண்டினைப் போற்றும் வகையில் கருநாடக அரசு 13.02.2024 அன்று உலக பேராசன் பசவண்ணர் அவர்களின் உருவப்படத்தை சட்டமன்றத்தில் திறந்து வைப்பதன் மூலம் இவர் ''கருநாடக பண்பாட்டின் பெருந்தலைவன்'' என்று உலகிற்கு அறிவித்துள்ளது.

## கல்யாண சாளுக்கியர்களின் பங்களிப்புகள் :



நாணயங்கள்

பாதாமியின் சாளுக்கியர்களைப் போலவே, கல்யாண சாளுக்கியர்களும் பல்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர். அரசாட்சி பரம்பரையாக இருந்தது. மாநிலம் மாகாணங்கள் (மண்டலங்கள்) மற்றும் துணை மாகாணங்கள் (நாடுகள்) எனப் பிரிக்கப்பட்டது இதுதவிர கிராமங்களின் நிர்வாகம் சீராக நடைபெறுவதற்கு கம்பனாக்கள் (தற்போதைய ஹொப்லி) இருந்தன.

நிலவரி அரசின் முக்கிய வருமானமாகும். விற்பனைவரி, சுங்கவரி மற்றும் தொழில்வரி ஆகியன பிறவருவாய்களாகும். நிலவருவாயை வசூலிக்க 'கடிதவேர்கடே' என்ற அதிகாரி நிகயமிக்கப்பட்டார். வணிகத்திலும் தொழிற் சாலைகளிலும் பலபிரிவுகள் இருந்தன.

சாளுக்கியர் ஆட்சிகாலத்தில் இலக்கியம் ஊக்குவிக்கப்பட்டது. கன்னட இலக்கியம் சமண அறிஞர்களின் உதவியுடன் வளர்ந்தது. ரன்னா எழுதிய 'கதாயுத்தா' (சாகச பீம விஜயா) துர்கசிம்மரின் 'பஞ்ச தந்திரம்' 'பில்ஹானாவின்' 'விக்ரமங்காதேவ சரிதம்' நயசேனரிம் 'தர்மமூர்தா' மற்றும் விக்னணேஷ்வராவின் 'மித்தக்ஷரா' என்ற சட்டநூல் போன்றவைகள் இவர்கள் காலத்தில் தோன்றிய புகழ்வாய்ந்த இலக்கியங்கள் ஆகும். மூன்றாம் சோமேஸ்வரர் எழுதிய 'மானசலோசா' என்ற காவியம் சமஸ்கிருத மொழியின் களஞ்சியமாக கருதப்படுகிறது. சாளுக்கியர்களின் தனித்தன்மை வாய்ந்த பங்களிப்பு யாதெனில் வசன இலக்கியங்கள் எழுந்ததாகும். பசவண்ணர், அக்காமகாதேவி, அல்லபிரபு, மச்சயா மற்றும் பலர் வசனகவிதைகளை இயற்றினர்.

> லக்குண்டி மற்றும் சூடி போன்ற இடங்களில் நாணயக் கூடங்கள் அமைகப்பட்டு அதில் கத்யானா, பாணா, தம்மா, பொன்னா மற்றும் சுவர்ணா போன்ற நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன.

NOT TO BE REPUBLISHED ©KTBS

சாளுக்கியர்கள் இலக்கியத்தை மட்டுமல்லாமல் கலையையும் ஆதரித்தனர். கலைத்துறையில் அவர்கள் ஆற்றிய பங்கு அளவிடற்கரியதாகும். லக்குண்டியிலுள்ள காசி விஸ்வேஷ்வரர் கோயில், இட்டகியிலுள்ள மகாதேவ கோயில் குருவாத்தியிலுள்ள மல்லிகர்ஜுனா கோயில் மற்றும் கதக்கிலுள்ள திரிகுட்டேஸ்வரர் கோயில் போன்றவைகள் அவர்களுடைய கலையை பறை சாற்றும் சிறப்புக்குரிய கோயில்களாகும். இவ்வம்சத்தின் அரசர்கள் எண்ணற்ற கோயில்களை கட்டியெழுப்பி கன்னட நாட்டை கலையின் இருப்பிடமாக மாற்றினர்.

இசையும் நடனமும் கூட இவர் காலத்தில் செழிப்புற்றது. இசைக்கலைஞர்களும் நடனமாடுபவர்களும் அரசபையில் வீற்றிருந்தனர். சந்திரலேகா அரசியார் பல இசை மேதைகளையும் நடனம் புரிவோர்களையும் ஆதரித்தார். ‘மனசோலசா’ மற்றும் இரண்டாம் ஜகதிகமல்லா எழுதிய ‘சங்கீத சூடாமணி’ போன்ற நுல்கள், இசை நடனம், கலை மற்றும் அணிகலன்கள் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகளை தருகிறது.



காசி விஸ்வேஷ்வரர் கோயில், லக்குண்டி

## பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ராஷ்டிரகூடர், வம்சத்தை நிறுவியவர் __________ ஆவர்.
2. ராஷ்டிர கூடர்களின் தோல்விக்கு காரணமாக இருந்த கல்யாண சாளுக்கிய மன்னர் __________ ஆவார்.

3. கவிராஜ மார்க்கம் (கவிரகசியா) என்ற நூலின் ஆசிரியர் ____________ ஆவார்.

4. பொன்னா எழுதிய புகழ்வாய்ந்த கவிதை ____________ ஆகும்.

5. கல்யாண சாளுக்கியர்களில் மிகவும் புகழ் வாயந்த அரசர் ____________ ஆகும்.

6. 'சமூக புரட்சியின் தொடக்ககாரர்' என்று கருதப்பட்டவர் ____________ ஆவார்.

## II. குறுகிய விடையளி:

7. ராஷ்டிரகூடர்களின் நிர்வாக அமைப்பு எப்படி இருந்தது?

8. ராஷ்டிர கூடர்களின் கல்விமுறை பற்றி எழுதவும்.

9. எல்லோராவின் கைலாச நாதர் கோயிலைப் பற்றி எழுதுக.

10. கல்யாண சாளுக்கியர்கள் எவ்வாறு இலக்கியத்திற்கு ஊக்கம் அளித்தார்காரி.

## III. செயல்முறை :

1. ராஷ்டிர கூடர்களின் கோயில்களுக்குச் சென்று அறிக்கை தயாரிக்கவும்.

2. கலை மற்றும் கட்டிடக்கலைக்கு கல்யாணி சாளுக்கியர்களின் பங்களிப்புகள் பற்றிய கூடுதல் தகவல்களை சேகரிக்கவும்.

## IV. செயல்திட்டம் :

1. மாணவர்களை நான்கு குழுக்களில் அமர்த்தி எல்லோராவின் கைலாசநாதர் கோயிலைப் பற்றி விவாதம் செய்து அறிக்கை ஒன்றை தயாரிக்கவும்.

2. மான்யகேதா வின் படங்களைச் சேகரிக்கவும்.

3. பசவண்ணரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி ஒரு கட்டுரை எழுதவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பாடம் 21

# சோழர்களும் துவாரசமுத்திராவின் ஒய்சளர்களும்

Y5Y7S1

**இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன:**

- *சோழபேரசின் விரிவாக்கம் மற்றும் அதற்கான பங்களிப்புகள் பற்றி அறிதல்.*
- *ஒய்சளரின் தோற்றம், சமயம், இலக்கியம், கலை மற்றும் கட்டிடக்கலை துறைகளில் பங்களிப்பு.*

## சோழர்கள் (பொ.ச. 850 - பொ.ச. 1279)

பல்லவர்களுக்குப் பிறகு, சோழர்கள் தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கருநாடகா போன்ற மாநிலப் பகுதிகளில் தங்கள் கட்டுபாட்டை நிறுவி 9 ஆம் நூற்றாண்டிலிருந்து 13 ஆம் நூற்றாண்டுவரை ஆட்சி செலுத்தினர். இந்தியப் பண்பாட்டை வெளிநாடுகளில் பரவச் செய்த பெருமை இவர்களையே சாரும். அற்புதமான கோயில்கள் இவர்களின் பங்களிப்பாகும். தஞ்சையிலுள்ள பிரகதீசுவரர் ஆலயம் அவர்களுடைய சிறப்புக்குரிய பங்களிப்பாகும். தமிழ் இலக்கியங்களை போற்றி ஆதரித்து வளர்த்ததால் பெரும்புகழ் அடைந்தனர்.

சிலகாலங்கள் சோழர்கள் பல்லவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து பிறகு விடுதலையடைந்தனர், சங்க இலக்கியப்படி சோழமரபை தோற்றுவித்தவர் கரிகால் சோழன் ஆவார். விஜயாலய சோழர் ஆட்சிப் பரப்பை விரிவாக்கி தஞ்சாவூரை தலை நகராக்கினார்.

சோழ மன்னர்களில் மிகவும் புகழ்வாய்ந்த முக்கியமான அரசர் முதலாம் ராஜராஜ சோழர் ஆவார். அவர் சிறந்த வீரமிக்க போர்வீரர் மட்டுமல்லாமல் திறமையான நிர்வாகியுமாவார்.

NOT TO BE REPUBLISHED ©KTBS



தஞ்சை பெரிய கோயில் (பிரகதீஸ்வரர் ஆலயம்)

சோழபேரரசின் நிறுவனரான அவர் சோழப் பேரரசின் அடித்தளத்தை வலிமைப்படுத்தி பேரரசன் எல்லையை விரிவுப்படுத்தினார். அவர் சேரர்கள், கங்கர்கள் மற்றும் பாண்டியர்கள் மீதும் வெற்றிக் கண்டார். வலிமையான கப்பற்படையை உருவாக்கி அவர் இலங்கையை கைப்பற்றினார். மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளில் தமிழர்களின் ஆதிகத்தை காணமுடிகிறது. அத்தகைய நாடுகளில் அரசியல் பொருளாதாரம் மற்றும் பண்பாடு துறைகளில் தமிழர்களின் தனிச்செல்வாக்கை காணமுடிகிறது. அத்தகைய நாடுகளில் அரசியல் பொருளாதாரம் மற்றும் பண்பாட்டு துறைகளில் தமிழர்களின் தனிச் செல்வாக்கை காணமுடிகிறது. இன்றும் வெற்றிகரமாக தொடரக் கூடிய கடல் கடந்த வாணிபமுறையை சோழர்களே தொடங்கினர். முதலாம் இராஜராஜ சோழனால் தஞ்சையில் கட்டப்பட்ட பிரகதீஸ்வரர் ஆலயம் உலகப்புகழ் பெற்றதாகும். மூன்றாம் இராஜேந்திர சோழர் காலத்தில் பேரரசு வீழ்ச்சியடைந்து பாண்டியர்கள் எழுச்சியடைந்தனர்.

NOT TO BE REPUBLISHED

**சோழர்களின் பங்களிப்புகள் :**

சோழர்கள் திறமையான நிர்வாக அமைப்பைக் கொண்டிருந்தனர். அவர்களுடைய அரசு மண்டலங்கள், கோட்வங்கி, நாடு, குறம், அல்லது கிராம சமூகம் மற்றும் தாரகுரம் போன்ற பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் ஊர் எனப்படும் குடிமக்கள் சமூகம் இருந்தது.

சோழர்களின் தனித்தன்மை வாய்ந்த தரமான நிர்வாகத்தின் சிறப்பு என்னவென்றால் கிராமங்களின் உள்ளாட்சி (அல்லது). கிராமங்களில் தன்னாட்சி முறையாகும். கிராம சபைதான் முதல் சபாவாக விளங்கியது. தாரகுரம் என்பது ஒரு கிராமம் ஆகும். ஒவ்வொரு குரமும் மாகசபை என்ற குழுவைப் பெற்றிருந்தது. அதன் உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டனர். வடமொழி (சமஸ்கிருதம்) பண்டிதர்கள் மற்றும் செல்வந்தர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்பட்டனர்.

நில வருவாயில் ஆறில் ஒரு பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது. நீர்ப்பாசன முறைக்கு சிறப்பான கவனம் செலுத்தப்பட்டது. சோழர்கள் பல ஏரிகளை அமைத்தனர். அவைகளுள் ஒன்று பெங்களூருக்கு அருகிலுள்ள பெலந்தூர் ஏரியாகும். அவர்கள் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு பெரிய ஏரியை கட்டினார்.

பல சிவாலயங்களை கட்டிய சைவர்கள் ஆவர். தஞ்சாவூரில் உள்ள பிரகதீஸ்வரர் ஆலயம் 500 அடி உயரத்தையும் 250 அடி அகலமான பிரகாரத்தினை உடையது, அதனுடைய கோபுரம் 200 அடி உயரமாகும். இராஜேந்திர சோழன் கங்கை கொண்டபுரத்தில் சோழ ஈஸ்வரர் கோயிலை கட்டினார்.

சென்னப்பட்டனா அருகில் உள்ள அப்ரமேய கோயில், பெங்களூருக்கருகில் உள்ள பேகூரில் உள்ள சோழஈஸ் வரர் கோயில் மற்றும் பின்மங்களா விற்கு அருகிலுள்ள மூகதேஷ்வரர் போன்ற கோயில்கள் கருநாடகத்தில் சோழர்களால் கட்டப்பட்டவைகளாகும். ஆலயங்கள் பொருளாதார

@KTBS NOT TO BE REPUBLISHED

மற்றும் பண்பாட்டு மையங்களாக விளங்கின.இக்காலத்தில் உருவாக்கப்பட்ட சிவன், கணபதி, விஷ்ணு துர்கா மற்றும் கார்த்திகேயன் சிலைகள் புகழ்வாய்ந்தவையாகும்.

கல்வியைப் பரப்ப சோழர்கள் பல அக்ரஹாரங்களை ஏற்படுத்தினர். உத்திர மேரூர் அக்ரஹாரம் அவைகளுள் மிகவும் புகழ்வாய்ந்ததாகும். ஆலயங்கள் கல்வியின் மையங்களாக விளங்கின, அவைகள் சமய விழாக்கள் நடத்தப்படும் மையங்களாகவும் இருந்தன. சோழர் ஆட்சிகாலத்தில் தான் தமிழ் இலக்கியங்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டன. கம்பர் இயற்றிய இராமாயணம், சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரிய புராணம் மற்றும் திருதக்கதேவர் எழுதிய சீவக சிந்தாமணி போன்றன குறிப்பிடத் தக்க இலக்கியங்கள் ஆகும்.

## துவார சமுத்திராவின் ஒய்சாளர்கள்

**(பொ.ச. 984 - பொ.ச. 1346)**



ஒய்சாளர்களின் ராஜ முத்திரை (அரச சின்னம்)

சாளுக்கியர்கள் வலிமையற்ற போது கருநாடகத்தில் ஒய்சாளர்கள் ஆற்றல் மிக்கவர்களாக விளங்கினர். சிக்கமகளூர் மாவட்டத்திலுள்ள மடிக்கேரி தாலுகாவின் சொசேவூர் (தற்போதைய அங்கரி) கிராமத்தின் சலா தான் ஒய்சாளவம்சத்தை தோற்று வித்தவராவர் சமண முனிவரின் ஆணைப்படி சீறிவந்த புலியுடன் போராடி தாக்கி கொன்றதால் அங்குள்ளோர் அனைவரும் ஆச்சரிய ஆரவாரத்துடன் ஒய்சளா என முழுங்கினார். இவ்வாறு இவ்வம்சம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வம்ச

@KTBS NOT TO BE REPUBLISHED



இராமனுஜசாரியர்

மன்னர்கள் இலக்கியம், கல்வி, கலை, கட்டிடக்கலை மற்றும் நீர்ப்பாசன முறைக்கு அளவிற்கதிகமான பங்காற்றியுள்ளனர்.

நிருபகாமா, ஈரேயங்கா மற்றும் பல்லாளர் ஆகியோருக்கு பின் வந்த விஷ்ணுவர்த்தனா, ஒய்சளாமன்னர்கள் மிகவும் முக்கியமானவர் ஆவார். இவ்வம்ச த்தின் ஆற்றல் வாய்ந்த அரசரான இவர், சோழர்களிடமிருந்து கங்கவாடியை கைப்பறினார். இதனால் அவர் தளக்காடு (தலக்காடு) கொண்டான் என்ற பட்டத்தைப் பெற்றார், இவ்வெற்றியின் நினைவாக அவர் தலக்காடு என்ற இடத்தில் கீர்த்தி நாராயண கோயிலையும் பேரூரில் சென்னகேசவா (விஜயநாராயணா) கோயிலையும் கட்டினர். அவர் ஆட்சிப்பரப்பை மேலும் விரிவாக்க முயற்சித்தாலும் சாளுக்கிய மன்னர் ஆறாம் விக்ரமாதித்தியரால் தோற்கடிக்கப் பட்டார்.

சோழப் பேரரசில் இராமானுஜர் தன்னுடைய விஷிஸ்டா அத்வைத கருத்துக்களை பரப்ப முடியாததால் அவர் பிட்டி தேவரின் (விஷ்ணுவர்த்தனர்) அரசவைக்கு வருகைப்புரிந்தார். அவரின் ஆதரவோடு கருநாடகம் முழுவதும்தன்னுடைய சமயக்கருத்துக்களை இராமனுஜர் பரப்பினர்.

மூன்றாம் பல்லாளர் காலத்தில் இவ்வரசு வீழ்ச்சியடைந்தது, அதே காலக்கட்டத்தில் தான் விஜயநகரப் பேரரசு ஆட்சிக்கு வந்தது.

**ஒய்சாளர்களின் பங்களிப்புகள் :**

ஒய்சாளர்கள் மாகாண நிர்வாகமுறையை நடைமுறைப் படுத்தினர். ஆட்சியின் அதிகாரம் அரசர், அரசியார் மற்றும் அரச குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டது. நாடு மற்றும் விஷயா போன்ற பகுதிகளின் நிர்வாகத்தை அதிகாரிகள் கவனித்து

@KTBS NOT TO BE REPUBLISHED

கொண்டனர். கவுடா, சேனாபாவா, தலவாரா மற்றும் இன்னுபிற அரச பிரதிநிதிகள் கிராமங்களில் இருந்தனர்.

விவசாயத்தை மேம்படுத்த ஒய்சளர்கள் சாந்திசாகர், பல்லாளராயா சமுத்திரா, விஷ்ணு சமுத்திரா போன்ற எண்ணற்ற ஏரிகளை அமைத்து நீர் பாசன முறையை வழங்குவதன் மூலம் ஒய்சாளர்கள் விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளித்தனர். நிலவரியே அரசுக்கு முக்கிய வருவாயாக அமைந்தது. ஒய்சாளர் மன்னர்களின் தனிச்சிறப்புயாதெனில் அவர்கள் கருடா என்ற சிறப்பு மெய் காவல் படையை பயன்படுத்தினர். அரசர் இறந்தபோது இப்படைவீரர்களும் தங்கள் உயிர்களை தியாகம் செய்தனர்.

ஒய்சாளர் ஆட்சிகாலத்தில் சமணம், பௌத்தம், சைவம், வைணவம், வீரசைவம் மற்றும் ஸ்ரீ வைணவம் போன்ற பல சமயப்பிரிவுகள் இருந்தன பின்வரும் பேளூர் கோவிலுள்ள பாடல் மதநல்லிணக்கத்தை வலியுறுத்துகிறது.

**பேளூர் கோயிலின் இன ஒற்றுமை மேம்படுத்தும் கவிதை**


ಯಂ ಶೈವಾಸ್ಸಮುಪಾಸತೇ ಶಿವ ಇತಿ ಬ್ರಹ್ಮೇತಿ ವೇದಾಂತಿನೋ
ಬೌದ್ಧಾ ಬುದ್ಧ ಇತಿ ಪ್ರಮಾಣಪಟವಃ ಕರ್ತೇತಿ ನೈಯಾಯಿಕಾಃ
ಅರ್ಹಶ್ಚೇತಿ ಹ ಜೈನಶಾಸನಮತಿಃ ಕರ್ಮೇತಿ ಮೀಮಾಂಸಕಾಃ
ಸೋಽಯಂ ವೋ ವಿದಧಾತು ವಾಂಛಿತಫಲಂ ಶ್ರೀ ಕೇಶವೇಶಸ್ಸದಾ ||

ಶೈವರು ಶಿವನೆಂದು, ವೇದಾಂತಿಗಳು ಬ್ರಹ್ಮವೆಂದು, ಬೌದ್ಧರು ಬುದ್ಧನೆಂದು, ಪ್ರಮಾಣದಲ್ಲಿ ಸಮರ್ಥರಾದ ನೈಯಾಯಿಕರು ಕರ್ತೃವೆಂದು, ಜೈನರು ಅರ್ಹನೆಂದು, ಮೀಮಾಂಸಕರು ಕರ್ಮವೆಂದು ಯಾವನನ್ನು ಉಪಾಸನೆ ಮಾಡುವರೋ ಅವನೇ ಆದ—ಈ ಶ್ರೀ ಕೇಶವನೆಂಬ ಈಶನು ನಿಮಗೆ ಇಷ್ಟಾರ್ಥವನ್ನು ಪಾಲಿಸಲಿ.

அக்ரஹாரங்கள், மடங்கள், கடிகாஸ்தாம், பிறம்மபுரி மற்றும் கோயில்கள் கல்வி மையங்களாக விளங்கின. மேலுக்கோட்டை,

சலகாமே, அரசிகெரே இன்னும் பிற இடங்களில் சிறப்பான கல்விமையங்கள் இருந்தன இங்கு வேதங்கள், வேத சாஸ்திரம், கன்னடம் மற்றும் சமஸ்கிருதம் போன்ற துறைகள் கற்பிக்கப்பட்டன.

கன்னட இலக்கியங்கள் அளவிடற்கரிய முறையில் செழித்தோங்கியது. ருத்ரபட்டரின், 'ஜகன்நாதா விஜயத்தையும்' என்ற சக்கரவர்த்தி ஜன்னாவின் 'யசோதரா சரிதை'யையும், ஹரிஹராவின் சம்புகவிதையையான ''கிரிஜா கல்யாண'' என்ற காவியத்தையும், ராகவங்காவின் ''அரிச்சந்திர காவியத்தையும்''மற்றும் கேசிராஜா ''சப்தமணி தர்பனா'' என்ற நூலையும் எழுதினர் சமஸ்கிருத மொழியிலும் சிறப்பான காவியங்கள் படைக்கப்பட்டன. அவைகள் இராமானுஜசாரியரின் ''ஸ்ரீ பாசியமும்'' பரசாரபட்ட்டாவின் ''ஸ்ரீகுணரத்தின கோசாவும்'' ஆகும்.

@KTBS
RE REPUBLISHED



சென்னகேசவ ஆலயம், பேளூர்

கட்டிடக் கலையில் ஓய்சாளர்கள் உலகப்புகழ் பெற்று விளங்கினர். ஓய்சாளர்கள் எண்ணற்ற கோயில்களை பளப்பகல் (சவர்காரக்கல்)லில் கட்டினர். அனைத்துக்

கோயில்களிலும் பின்வரும் ஐந்து சிறப்பியல்புகளை காணலாம். அவைகள் (1) நட்சத்திர வடிவுடைய கருவுரை (2) துணை பீடம் (ஜகட்டி) (3) அலங்கரிக்கப்பட்ட அரங்கம் (4) கவிகை மாடம் (5) துண்கள் ஆகும்.


சிலைப் பெண்

சென்னகேசவா கோயிலின் துண்களின் அடிபாகத்தில் அழகான நடன மங்கையரின் சிலைகள் உள்ளன. ஹளேபீடு என்ற இடத்தில் ஓய்சளா சுவரர் கோயிலை கேட்டமல்லா என்ற படைத்தளபதி கட்டினார். சோமநாதபுரத்தில் சோமதத்த நாயக்கா கட்டிய கேசவ கோயில் புகழ்வாய்ந்ததாகும். பல கோயில்களும், பசதிகளும் அரசிக்கரே, கோவிந்தன ஹள்ளி, தொட்டகட்டவள்ள மற்றும் பத்ராவதி போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இவைகள் எல்லாம் ஓய்சாளர்களின் மிக நுட்பமான அழகுவாய்ந்த சிற்பகலைக்கு சான்றாக விளங்குகின்றன. ஒய் சாளர்களின் கட்டிடக்கலை பிற எல்லா கட்டிடக்கலையிலும் செல்வாக்குப் பெற்றுள்ளன. தசோஜா, சவானா, ஜகனா மற்றும் டங்கனா போன்றோர் இக்காலக் கட்டத்தின் புகழ்வாய்ந்த சிற்பிகளாவர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. சோழர்களின் தலைநகரம் ____________ ஆகும்.
2. சோழர்கள் காலத்தில் ஒவ்வொரு கிராமத்தின் பிரதிநிதிகளின் கூட்டம் என்று ____________ அழைக்கப்பட்டது.
3. சோழர்களின் புகழ்வாய்ந்த கல்விமையம் (அல்லது) அக்ரஹாரம் ____________ ஆகும்.

4. பெங்களூருக்கு அருகிலுள்ள பேகூரில் உள்ள சோழர்கள் கட்டிய கோயில் ____________ ஆகும்.
5. ஒய்சாளர்கள் காலத்தில் இருந்த அரசரின் மெய்க்காவலர் படை ____________ ஆகும்.
6. ராகவங்கா இயற்றிய கவிதைப்பாடல் ____________ ஆகும்.

## II. குறுகிய விடையளி:

7. சோழப் பேரரசின் சிற்பி யார்?
8. சோழர் காலத்தில் கிராம தன்னாட்சி முறை எப்படி இருந்தது?
9. ஒய்சாளர்கள் இலக்கியத்தை எவ்வாறு ஊக்குவித்தார்கள்?

## III. செயல்முறை :

1. ஒய்சாளர்கள் காலத்தின் கோயில்களின் படங்களை சேகரித்து அறிக்கை தயாரிக்கவும்.
2. உன் ஆசிரியரிமிருந்து பேளூர் சிலே பாலிக்கா (கற்சிலை) குறித்து மேலும் சில குறிப்புகளை தெரிந்துக்கொள்ளவும்.

## IV. செயல்திட்டம் :

1. பேளூர் மற்றும் ஹளேபீடு போன்ற இடங்களை பார்வையிட்டு அதுப்பற்றிய தகவல்களை கட்டுரை வரைக.
2. ஒய்சாளர்களின் சிற்பக் கலைப்பற்றி விரிவாக படிக்கவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

# பாடம் 22 மக்களாட்சி (குடியரசு)

K3F6M8

**இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன:**

- மக்களாட்சியின் பொருளைப் புரிந்து கொள்ளுதல்.
- மக்களாட்சியின் வகைகளைக் குறிப்பிட்டு, அவற்றின் வேறுபாடுகளை அறிதல்.
- மக்களாட்சியின் பண்புகள், வெற்றி மற்றும் மக்களாட்சியின் நிறைகள் மற்றும் குறைகளைப் பற்றி அறிதல்.
- இந்தியாவில் நடைமுறையிலுள்ள தேர்தல் முறை பொது வயது வந்தோர் வாக்களிப்பு முறை, பற்றி அறிதல்.
- மக்களாட்சி அமைப்பில் அரசியல் கட்சிகளின் கடமை, மற்றும் பொறுப்புகளை அறிதல்.
- மக்களாட்சியில் சமூக ஊடகங்களின் பங்கினை பகுத்தாய்தல்.
- 2005ஆம் ஆண்டின் தகவல் அறியும் உரிமை சட்டம் பற்றி அறிதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

மக்களாட்சி என்பது மிகப்பழமையான அரசாங்கங்களில் ஒன்றாகும். பழங்கால இந்தியாவிலும் மக்களாட்சியின் பெருஞ்சுவடிகள் காணப்பட்டன.

எடுத்துக்காட்டாக வேதகாலத்தின் சபை மற்றும் குழு. மக்களாட்சி மாதிரி அரசாங்கம் நிறுவுவதற்காக பல போராட்டங்கள் கிளர்ச்சிகள் ஆகியவை வெவ்வேறு நாடுகளில் நடைபெற்றதற்கான ஆதாரங்கள் உள்ளன. 'டெமாக்ரஸி' என்ற சொல் 'டெமாஸ்' மற்றும் 'க்ராட்டியா' (Demakratia) என்ற கிரேக்க சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் 'மக்கள்

அதிகாரம்' என்பதாகும் எனவே மக்களாட்சி என்பது மக்களால் பயன் படுத்தபடும் அதிகாம். மக்களாட்சியின் அமைப்பில் தேர்தல்கள் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன. மக்கள் தங்களது செ றாந்த அரசாங்கத்தை அமைப்பதற்கு தேர்தல்கள் வாய்ப்பளிக்கின்றன. தேர்தல்கள் ஒரு குடிமகன் ஒரு வாக்கு என்ற தத்துவத்தினடிப்படையில் செயல்படுகிறது. அரசாங்கம் என்பது மக்களே மக்கள் தீர்மானிப்பவர்களால் உருவாக்கப்படுகிறது. மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி'' என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆபிரகாம்லிங்கன் மக்களாட்சிக்கு வரையறை கூறினார். மக்களாட்சியில் அதிகாரம் குடிமக்களிடம் உள்ளது.


ஆப்ரஹாம் லிங்கன்

**மக்களாட்சியின் வரையறைகள் :**

***1)*** **லார்ட் பிரேஸ் :** ''மக்களாட்சி என்பது அரசாங்கத்தின் ஒரு வடிவமாகும். இதில் மாநில அரசாங்கம் சட்டபூர்வமாக எந்த ஒரு வர்க்கம் அல்லது ஒரு சமூகத்தின் கைகளில் இல்லை. ஆனால் அது ஒட்டுமொத்த சமூகத்தின் உறுப்பினர்களிடம் உள்ளது''.

***2)*** **ஹெர்மன் ஃபினர் :** ''மக்களாட்சி என்பது ஒரு தத்துவம் மற்றும் அரசாங்கத்தின் வடிவம் மட்டுமல்ல, வாழ்க்கை முறையும் கூட''.

**மக்களாட்சியின் வகைகள்:** மக்களாட்சியில் நேரடி மற்றும் மறைமுக மக்களாட்சி என்ற இரண்டு வகைகள் உள்ளன.

நேரடி மக்களாட்சி (**Direct Democracy**) : இவ்வகை மக்களாட்சியில் மக்கள் தேர்தல் மூலமாக தங்களது அரச

©KTBS NOT TO BE REPUBLISHED

ராங்கத்தைத் தேர்ந்தெடுத்து, அதன் முன்னேற்றத்திற்குத் துணை புரியும் விதி, சட்டங்களை அமைப்பார்கள். மக்களாட்சியில் பொதுவாக நேரடி மக்களாட்சி அரசாங்கங்கள் மக்கட்தொகை மற்றும் பரப்பளவில் குறிப்பிட்ட எல்லையைப் பெற்றிருக்கும் நாடுகள் பின்பற்றுகின்றன. இவ்வகை மக்களாட்சி பண்டைய கிரேக்க மற்றும் தற்போதைய சுவிட்சர்லாந்து நாடுகளில் நடைமுறையில் உள்ளன. இம்மக்களாட்சி மக்களின் கருத்து மற்றும் தலைமையின் அடிப்படையில் பயனுள்ளதாக விளங்கலாம். இந்தியாவில் இவ்வகையான மக்களாட்சியை அதன் நிலப்பரப்பு மற்றும் மக்கட் தொகை வீதம் மூலம் அமைப்பது இயலாதது ஆகும்.

**மறைமுக மக்களாட்சி (Indirect Democracy) :** இவ்வகையான அரசாங்கம் இந்தியா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போன்ற நாடுகளுக்கு மிகவும் பொருத்தமானதாக உள்ளது. இந்த அமைப்பில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுத்து சட்ட மன்றங்களுக்கு அனுப்புகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த உறுப்பினர்கள் சட்டங்களை அல்லது சட்டங்கள் சார்ந்தவற்றை வடிவமைத்து ஆட்சி செய்கிறார்கள். இக்கண்ணோட்டத்தில், மக்களாட்சியை, குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை நடைபெறும் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் அரசாங்கம் என்று வரையறை செய்யலாம். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிதிநிதிகள் தங்களது தேசத் தலைவரை தேர்வு செய்கிறார்கள்.

©KTBS NOT TO BE REPUBLISHED

**மக்களாட்சியின் பண்புகள் :**

1. மக்களாட்சி மக்கள் ஒப்புதலின் அடிப்படையில் உள்ளது. இது மக்களின் ஆட்சியாகும்.
2. இது பிரதிநிதித்துவ அரசாங்கம். எனவே மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். பிரதிநிதிகள் மக்களின் சார்பாக சட்டங்களை இயற்றுகிறார்கள்.
3. இது பொதுவான வயதுவந்தோர் வாக்களிக்கும் உரிமை கொள்கை அடிப்படையில் அமைந்தது.

4. இங்கு ஒருசீரான இடைவெளியில் ஒரு சார்பற்ற மற்றும் வெளிப்படையான தேர்தல்கள் நடை பெறுகின்றன.

5. பொதுமக்கள் எந்தவித பாரபட்ச மின்றி (சார்புமில்லாமல்) சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் உரிமைகளை அனுபவிப்பார்கள். ஆகவே மக்களாட்சியில் தனிப்பட்ட வளர்ச்சிக்கு வாயப்புள்ளது.

6. மக்களாட்சி பொதுமக்களுடன் உறவாடுகிற அர சாங்கமாகும்.

7. அரசாங்கம் மக்களின் எல்லையற்ற கோரிக்கைகளுக்கு செவிகொடுப்பதால் இத்தகைய அரசாங்கத்தை அமைதியான மற்றும் அரசியலமைப்பு முறைகள் மூலம் மாற்றக் கூடிய உரிமையை மக்கள் பெறுகிறார்கள்.

8. அரசாங்கத்தில், அனைத்து குடிமக்களும் சட்டத் தின் முன்பு சமம் என்ற கட்ட அரசாட்சி கொள்கை பின்பற்றப்படுகிறது. அரசாங்கத்தின் அதிகாரங்கள் அரசியலமைப்பு விதிகளின் எல்லைக்குட்பட்டது.

9. அரசியல் கட்சிகளின் மக்களாட்சியின் மற்றொறு பண்பாகும், மக்கள் தங்களது கட்சிகளை உருவாக்குவதற்கு மக்களாட்சியில் வாயப்புள்ளது.

10. மக்களாட்சியில் ஒவ்வொரு நபரின் கண்ணியமும் உயர்ந்ததாக்க கருதப்படுகிறது.

11. சமத்துவம் மற்றும் சுதந்திரம் மக்களாட்சியின் முக்கிய கொள்கையாகும். சாதி, மதம், பாலினம், மற்றும் நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் மக்களை பாகுபடுத்தக் கூடாது.

12. மக்களாட்சியில் இறுதி அதிகாரம் மக்களிடம் உள்ளது. அரசாங்கம் மக்களிடமிருந்து அதிகாரத்தைப் பெறுகிறது. இந்நோக்கத்துடன் ஒரு சீரான

NOT TO BE REPUBLISHED @KTBS

இடைவெளிகளில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. இந்தியாவில் பொதுத் தேர்தல்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகின்றன.

13. மக்களாட்சி, மக்களின் அனைத்து வளர்ச்சியிலும் சிறப்பு கவனம் செலுத்தும் பொது நல அரசாகும்.

14. மக்களாட்சி ஆளுமை வழிபாட்டிற்கு எதிரானது.

### மக்களாட்சி வெற்றியடையத் தேவையான அம்சங்கள்

1. மக்களாட்சியை பாதுகாக்கும் மனப்பான்மை மக்களிடம் இருக்க வேண்டும்.
2. மக்கள் எப்பொழுதும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.
3. மக்களாட்சியின் வெற்றி பொறுமைத் தன்மையைச் சாந்திருக்கிறது. மக்கள் கொடுத்து வாங்கும் கொள்கையைப் பின்பற்றுபவராக இருக்க வேண்டும்.
4. மக்களாட்சியின் வெற்றி என்பது சிறந்த தலைமையைப் பொறுத்தமைகிறது. தலைவன், பொதுமக்களின் பிரச்சனைகளைப் புரிந்துகொள்ளுதல், அவற்றிற்கு தீர்வு அளித்தல், சேவை மனப்பான்மை, நாட்டுப்பற்று மற்றும் அர்ப்பணிப்பு ஆகிய பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும்.
5. ஒரு திறமையான எதிர்க்கட்சியானது ஆளுங்கட்சியின் செயல்பாடுகளை குறித்து எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் மற்றும் அவர்களின் சர்வாதிகார அணுகுமுறையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்.
6. அறிவாற்றல் / தகவல் அறிந்த வாக்காளர் மக்களாட்சியின் வெற்றிக்கு காரணமானவராகலாம்.
7. மக்களாட்சியின் வெற்றி பொதுமக்களைச் சார்ந்திருக்கிறது மக்கள் கட்டாயமாக வாக்களிக்க

NOT TO BE REPUBLISHED @KTBS

வேண்டும் மற்றும் ஊழல் மற்றும் தீய வழிகளைப் பிடைபற்றக்கூடாது மக்கள் தங்களது பிரச்சனைகளுக்கு பதிலளிக்கக்கூடிய ஒழுங்கான மற்றும் ஊழலில்லாத வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

8. சுதந்திரமான அச்சமற்ற, பாரபட்சமற்ற அனைத்து ஊடகமும் மக்களாட்சியின் வெற்றிக்கு காரணமாகிறது.

9. திறம்பட ஒழுங்கமைக்கப்பட்ட, திறமையான மற்றும் பொறுப்புள்ள உள்ளாட்சி அமைப்புகளும் மக்களாட்சியின் வெற்றிக்கு காரணமாகிறது.

**மக்களாட்சியின் நன்மைகள்:**

உலகின் பெரும்பாலான நாடுகள், மக்களாட்சி அரசாங்கம் நன்மை பயக்கிறதென்று அதனை ஏற்று செயல்முறைபடுத்திக் கொண்டிருக்கின்றன. மக்களாட்சியின் நன்மைகள் பின்வருமாறு.

1. சுதந்திரமான நீதித்துறையால் குடி மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை ஜனநாயகம் பாதுகாக்கிறது.
2. மக்களாட்சி சமத்துவக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.
3. மக்களாட்சியில் மக்கள் தாங்களாகவே முடி வெடுப்பதில் பங்கேற்கவும், தங்கள் சொந்த கருத்தை உருவாக்கவும் வாய்ப்புள்ளது.
4. மக்கள் தாமே தேர்வுசெய்த பிரதிநிதி மற்றும் அரசாங்கத்தை தேர்ந்தெடுக்கலாம்.
5. மக்களாட்சியில் தீர்ப்புகள், பொதுமக்களின் கருத்து மற்றும் விவாதங்களின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றன.

©KTBS NOT TO BE REPUBLISHED

6. மக்களாட்சி நாட்டில் எதிர்க்கட்சி ஆளுங்கட்சியின் தவறான அதிகார பயன்பட்டிற்கு எதிராக விவாதிக்கவும், உரையாடவும், விமரிசித்து எதிர்ப்பு தெரிவிக்கவும் வாய்ப்புள்ளது.

7. தனிப்பட்டவரின் ஆளுமை வளர்ச்சிக்கு அடிப்படை உரிமைகள் வாய்ப்பு அளிக்கிறது.

8. மக்ளாட்சியில் தேர்தல்கள் மூலம் அமைதியான முறையில் அரசாங்கங்களை அமைக்க வாய்ப்பிருப்பதன் மூலம் புரட்சிகளைத் தடுக்கிறது.

9. மக்களாட்சி, நாட்டுரிமை, நாட்டுப்பற்று, மக்களின் மரியாதை ஆகியவற்றை மேம்படுத்தி, வேற்றுமையில் ஒற்றுமையை வளர்க்கிறது.

### மக்களாட்சியின் தீமைகள்

மக்களாட்சி சில குறைபாடுகள் உள்ளன. அவை பின்வருமாறு :

1. மரியாதைக் குரிய கல்வித் தகுதி, மேலாண்மைத்திறன், சிறந்த தலைமைப் பண்புகள், சமூக, பொருளாதார, அரசியல் அறிவின் குறைபாடு அல்லது அறிவின்மை மற்றும் சுயநல மக்கள் பிரதிநிதிகளால் மக்களாட்சி வலுவிழக்கிறது.

2. அதிகாரத்திற்காக அரசியல் கட்சிகளின் இடையிலான போட்டி பாரபட்சம் மற்றும் ஊழலுக்கு வழி வகுக்கிறது.

3. நாட்டின் நலனை விட கட்சியின் நலனே மிக முக்கியமாகிறது.

4. கட்சிக்கு கட்சி மாறும் செயலால் அரசாங்கம் நிலையற்ற தன்மையடைகிறது.

5. மக்களாட்சி அமைப்பில் சாதி, மதக்கருத்துகள், பணம் மற்றும் தோள்வலிமைக் காட்சிகள் தேர்தல்களில் பெளிப்படையாக பயன்படுத்தப்படுவதால் அரசாங்கம் வலுவிழக்கிறது.

NOT TO BE REPUBLISHED @KTBS

6. மக்களாட்சியில் சட்டம் இயற்றுவது நீண்ட செயல்முறையாகும்.

7. தேர்தல்களை நடந்துவதற்கு அதிக செலவாகிறது. மேலும் தேர்தல் நடைபெறும் முறைக்கு நீண்டகாலம் தேவைப்படுகிறது.

8. பெரும்பாலான வாக்குகளைப் பெற்ற ஆளுங்கட்சி சர்வாதிகார அணுகு முறையால், எதிர்கட்சி அல்லது பிற சிறுபான்மை கட்சிகளின் கருத்துக்ளுக்கு முன்னுரிமை அளிப்பதில்லை.

9. கல்விகற்காத அல்லது எழுத்தறிவற்ற வறியவர்கள் அதிகாரவர்க்க உறுப்பினரால் அடக்கு முறைக்கு உள்ளாகிற சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

10. சமூகவிரோத கூட்டமைப்புகள் தங்களது பணம் மற்றும் செல்வாக்கால் அரசாங்கத்தில் செல்வாக்கு செலுத்துன்றன.

**பொது வயது வந்தோர் வாக்குரிமை முறை:** இந்தியா பிரதிநிதித்துவ மக்களாட்சி அமைப்பை கொண்டுள்ளது. ஆகவே தேர்தல்கள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. மக்கள் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுள்ளார்கள். இந்தியா, 18 வயதிற்குப் மேற்பட்ட அனைத்துக் குடிமக்களும் சாதி, மதம், கல்வித்தகுதி, இனம், மொழி, பாலின பாகு பாடில்லாமல் வாக்களிக்கும் உரிமையை வழங்கியுள்ளது.

@KTBS NOT TO BE REPUBLISHED

> இந்தியாவில் 1989ற்கு முன்னர் வாக்களிக்கும் உரிமைக்கான குறைந்தளவு வயது 21 ஆகயிருந்தது. 61 ஆம் அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 1989 ன் படி வாக்களிக்கும் வயது 21 லிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

சிறந்த அரசாங்கம் அமைவது அறிவாற்றலுடைய வாக்காளரைச் சார்ந்துள்ளது ஆகையினால். அத்தகைய வாக்காளர் சாதி, மதம், இனம், பணம் மற்றும் பிற ஆசைகளுக்கு அடிபணியாமல் தனது வேட்பாளரை தேர்ந்தெடுப்பதில் விழிப்புணர்வுடனிருக்க வேண்டும்.

வாக்காளர், சிறந்த பண்பு மற்றும் திறமைகளைப் பெற்றுள்ள வேட்பாளரைத் தேர்வு செய்ய வேண்டும். அவ்வாறு தேர்வு செய்யும் போது, கீழ்க்காணும் கூறுகளைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

1. வேட்பாளர் சமூகசேவை செய்யும் மனப்பான்மை மற்றும் ஆர்வமுடையவராக இருக்க வேண்டும்.
2. மக்களிடம் அக்கறை உள்ளவராகவும், மக்கள் அவரை எளிதாக அணுகக் கூடிய வகையிலும் இருக்க வேண்டும்.
3. வேட்பாளர் கல்வி கற்றவனாகவும், நம்பிக்கை, நேர்மை, சேவை மனப்பான்மை மற்றும் அர்ப்பணிப்புப் பண்புகளை உடையவராக இருக்க வேண்டும்.
4. வேட்பாளர் சுயநலவாதியாக இருத்தல் கூடாது. சேவையிலும் பண்பிலும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகவும் ஊழலற்றவறாக இருக்க வேண்டும்.
5. நீதிமன்றம் வேட்பாளரை குற்றவாளியாக அறிவித்திருக்க கூடாது. மேலும் குற்ற நடவடிக்கை களில் அவன்/அவள் ஈடுப்படிருக்கக் கூடாது.
6. வேட்பாளர் சமூக விரோத மற்றும் நாட்டிற்கு எதிரான செயல்பாடுகளில் பங்கேற்க்க கூடாது.

## தேர்தல்கள்

மக்களாட்சி அமைப்பில் தேர்தல்கள் மிகவும் முக்கியமானது. ஒரு சீரான கால இடைவெளிகளில் நடைபெற்று வருகின்றன. இந்தியாவில் பொதுத் தேர்தல்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகின்றன. வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு கால இடைவெளிகளில் நடைபெறுகின்றன. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தேர்தல்களைப் பொதுத் தேர்தல்கள் என்றும், காலியான இடங்களில் கால

@KTBS NOT TO BE REPUBLISHED

இடைவெளிக்கு முன்னரே நடைபெறும் தேர்தல்களை இடைத்தேர்தல்கள் என்றும் அழைப்பார்கள். இந்திய அரசால் அரசாங்கம் தேர்தல் ஆணையத்தை (ECI - Election Commission of India) அமைத்து தலைமை அலுவலகம் புதுதில்லியில் உள்ளது. இந்த ஆணையத்தில் தற்போது ஒரு தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் குடியரசுத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்ட இரண்டு தேர்தல் ஆணையர்களும் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பாராளுமன்றம் மக்கள் தேர்தல் ஆணையரைத் தீர்மானிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு தேர்தல் நடத்த மாநில அளவில் மாநில தேர்தல் ஆணையம் உள்ளது.

## பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களில் ஏற்ற சொற்களால் நிரப்புக:**

1. டெமாக்ரசி என்ற சொல் __________ மற்றும் __________ சொல்லிலிருந்து பெறப்பட்டது.
2. சட்டமன்றத்தில் பெரும்பாலான வாக்குகளைப் பெற்று ஆட்சி புரியும் கட்சி __________ கட்சி என்று அழைக்கப்படுகிறது.
3. இந்தியாவில் வாக்களிக்கும் உரிமைக்கான குறைந்தளவு வயது __________ ஆகும்.
4. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்கள் நடைபெற்றால் அத்தேர்தல்களை __________ என்கிறோம்.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:**

5. மக்களாட்சியின் நன்மைகள் யாவை?
6. நேர்முக மற்றும் முறைமுக மக்களாட்சியின் வேறுபாடுகள் குறிப்பிடவும்?

@KTBS NOT TO BE REPUBLISHED

7. பொது வயதுவந்தோர் வாக்குரிமை என்றால் என்ன?
8. மக்களாட்சியின் வெற்றிக்கு காரணமான காரணிகளைப் பட்டியலிடுக.
9. மக்களாட்சியில் திறமையான எதிர்க்கட்சியின் தேவையைப் பற்றி எழுதுக.
10. மக்களாட்சியின் பண்புகளை வரைக.
11. மக்களாட்சியில் குறிப்பிட்ட கால இடைவெளியில் தேர்தல்கள் ஏன் நடைபெறவேண்டும்?
12. மக்களாட்சியின் வெற்றி வாக்காளர்களைச் சார்ந்த திருக்கிறது. விவாதிக்கவும்.

**III. செயல்பாடுகள் :**

1. மக்களாட்சி என்பது அரசாங்கத்தின் சிறந்த வடிவம் விவாதிக்கவும்.
2. சிறந்த தலைமைபண்பு மக்களாட்சி வெற்றிக்கான பரிசாகலாம். இதைப் பற்றி ஒரு விரிவுரையை (கருத்தரங்கு) ஏற்படுத்தி விவாதிக்கவும்.

**IV. செயல் திட்டங்கள் :**

1. உங்கள் ஆசிரியரின் வழிகாட்டலுடன் சுவிட்சர் லாத்தில் நடைமுறையில் உள்ள நேரடி மக்களாட்சி யைப் பற்றி செயல்திட்டம் தயாரிக்கவும்.
2. ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் கர்நாடக லோக் ஆயுக்தாவின் பங்கு பற்றிய அறிக்கையை தயாரிக்கவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

| பாடம் 23 | உள்ளாட்சி அரசாங்கங்கள் |
|---|---|

G9H5F9

**இந்த அத்தியாயத்தைக் கற்றபின் நீங்கள் கீழ்க்காணும் அலகுகளைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்.**

- *உள்ளாட்சி அரசாங்கங்களின் அமைப்பின் பின்னணியை அறிதல்.*
- *உள்ளாட்சி அரசாங்கங்களின் நோக்கம் மற்றும் செயல்களைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.*
- *பல்வேறு உள்ளாட்சி குழுக்களின் அமைப்பு, நிர்வாகம் பொறுப்பு மற்றும் கடமைகளைப் பற்றி அறிதல்.*

© KTBS NOT TO BE REPUBLISHED

இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்கள் மிகவும் பழமையானது. பல பேரரசர்கள் உள்ளாட்சி அரசாங்க அமைப்பிற்கும் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளித்திருப்பதை வரலாறு மூலம் அறிந்து கொள்ளலாம். உள்ளாட்சி அரசாங்கங்கள், சமூக மற்றும் அரசாங்கங்களுக்கு இடையே தொடர்பை ஏற்படுத்துவதுடன் உள்ளூர் மக்கள் தங்களது பிரச்சனைகளை வெளிப்படையாக கூறுவதற்கு வாய்ப்பளிக்கிறது. உள்ளூர் அமைப்புகள் அங்குள்ள மக்களின் உதவியுடன் அங்குள்ள பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உள்ளாட்சி அரசாங்கங்கள் உதவி புரிகின்றன. ஆட்சியில் உள்ளூர் மக்களின் பங்கேற்பு மக்களாட்சியைப் போன்ற உள்ளூர் அமைப்புக்களை அடிமட்டத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளச் செய்கின்றன. குடிமக்கள் உள்ளூர் நிர்வாக அமைப்புகளுக்கு தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அதிகாரம் அளிக்கும் உரிமையை பெற்றிருக்கின்றனர்.இவ்வாறு சுயாட்சி அளிக்கும் அமைப்புகள் உள்ளாட்சி அரசாங்கள் எனப்படும். அவை அதிகாரம் பன்முகத் தன்மையில் மூலங்களாகின. இந்தியாவில் 1916 மற்றும் 1935 இல் பிரிட்டிஷ் அரசாங்கம் நடைமுறைப்படுத்திய சட்டங்கள் உள்ளாட்சி

அரசாங்கங்களுக்கு அதிக அதிகாரங்களை அளித்துள்ளன. தேசத் தந்தை காந்திஜி அவர்களின் கனவான கிராம ஆட்சி அல்லது கிராமத்தினரின் ஆட்சி நனவாக இந்தியா விடுதலைக்குப் பிந்தைய நாட்களில் பல குழு மற்றும் ஆணையங்களையும் அமைத்து பல சட்டங்களையும் நடை முறைப்படுத்தி உள்ளன.

கிராம பஞ்சாயத்துகளின் ஒருங்கிணைப்பு மற்றும் அவற்றின் பயனுள்ள செயல்பாடுகளுக்கு ஏற்ற அதிகாரத்தை வழங்குமாறு அரசியலமைப்பு ஆட்சிகளுக்கு தெளிவான சட்டம் அளித்துள்ளது. அரசியலமைப்பின் 73 மற்றும் 74 ஆம் சட்ட்த் திருத்துதங்கள் 1993 யில் நடைமுறைக்கு வந்தது பஞ்சாயத்து ராஜ் அமைப்பு வரலாற்றில் ஒரு மைல்கல் என்று கூறலாம்.

சுதந்திரத்திற்கு முன்பே கருநாடகத்தில் பல உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருந்தன. அதந்திற்த்திர் பிறகு இவற்றை நிறுவுவதற்கும் வலிமையாக்கவும் நமது மாநிலம் பல்வேறு குழுக்களை உருவாக்கி அவற்றின் பரிந்துரைகளைப் பெற்று பின்பற்றியுள்ளது.

நமது மாநில அரசு கர்ாடக ஜில்லா பரிஷத் தாலுக் பஞ்சாயத்து சமிதி, மண்டல் பஞ்சாயத்து மற்றும் நியாய பஞ்சாயத்துகள் சட்டத்தை 1983-ல் அறிமுகப்படுத்தி 1985 முதல் இச்சட்டத்தை அமுல்படுத்தியது. இச்சட்டம் மாவட்ட அளவில் மண்டல பஞ்சாயத்துகளும் நேரடி தேர்தல்கள் மூலம் அமைக்க படவேண்டும் என்று ஜில்லா பரிஷத் பரிந்துரைத்தது. 1983ன் சட்டத்தை மேலும் வலிமைப்படுத்துவதற்காக 73வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின்படி 1993 ல் பஞ்சாயத்து ராஜ் சட்டம் கர்நாடகாவில் உருவாக்க வழிவகை செய்தது. கர்நாடக பஞ்சாயத்து ராஜ் சட்டம் 1993ல் கிராமப்புற வளர்ச்சியை எளிதாக்குவதற்கு பல கூறுகளை உள்ளடக்கியுள்லது. கிராம பஞ்சாயத்து, தாலூக்கா பஞ்சாயத்து மற்றும் ஜில்லா பஞ்சாயத்து ஆகியவை பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களாகும். 73 வது அரசியமைப்பு திருத்தச் சட்டம் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு அரசியலமைப்பு அந்தஸ்தை வழங்கியது.

© KTBS NOT TO BE REPUBLISHED

**உள்ளாட்சி அரசாங்கங்களின் நோக்கங்கள் :**

- உள்ளூர் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உள்ளூர் மக்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல்.
- பொதுமக்களுக்கு நிர்வாக அறிவை அளித்தல்.
- அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து ஆட்சியை அதிக ஆற்றலுடன் அமைத்தல்.
- அடித்தளத்திலுள்ள மக்களிடையே தலைமைப் பண்புகளை வளர்க்க பயிற்சியளித்தல்.

**உள்ளாட்சி அரசாங்கங்களின் செயல்கள் :** உள்ளாட்சி அமைப்புகளான மாவட்ட பஞ்சாயத்து, மண்டல பஞ்சாயத்து மற்றும் கிராம பஞ்சாயத்து செயல்கள் வெவ்வேறாக உள்ளன. அவை பல செயல்களை உள்ளடக்கியன அவற்றில் முக்கிய மற்றும் பொதுச் செயல்களாவன:

- பஞ்சாயத்தின் சொத்துக்களைப் பாதுகாத்து பராமரித்தல்.
- உள்ளூர் அமைப்பின் ஆண்டு நிதியறிக்கையினை தயாரித்தல்.
- சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் திட்டங்களை மேற் கொள்ளுதல்.
- சாலை அமைத்தல், மின்சாரம், வீட்டுவசதி, குடிநீர்வழங்குதல்போன்றவளர்ச்சிசெயல்களுக்கான செயல் திட்டங்களை உருவாக்கி அமல் படுத்துதல்.
- தொடக்க, உயர், வயது வந்தோர் மற்றும் முறைசாரா கல்வி செயல்பாடுகளை ஊக்குவித்தல்.
- தமது பகுதிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தை பாதுகாத்தல்
- அனைத்து வகையான மாசடைதல்களையும் கட்டுப் படுத்துவதற்கு சிறந்த சுகாதார வசதிகளை செய்து கொடுத்தல்.
- தேவையான நியாய விலைப் பொருட்களான விநியோகத்திற்கும், சலுகைகளை வழங்குவதற்கும் பொருத்தமான அமைப்பை ஏற்படுத்துதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

- பிறப்பு மற்றும் இறப்பு பதிவு நேர்மையான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- வேளாண்மை சாகுபடி, கால்வடைவளர்ப்பு, காதி மற்றும் தைத்தொழில்களை ஊக்குவித்தல்.
- மண், நீர் மற்றும் காடு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விவசாயிகளுக்கு உதவும் வகையில் விவசாய வுரிவாக்க திட்டங்களை நடத்துதல்.
- பட்டியல் சாதியினர், பழங்குடியினர், பிற்படுத்தபட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினர் ஊனமுற்றோர், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நலத்திட்டங்களை இயற்றி அமல்படுத்த வேண்டும்.
- நூலகம், தெருவிளக்குகள் மற்றும் சந்தை வசதிகளை வழங்குதல்.
- கட்டணம், தண்டத்தொகை மற்றும் வரிகளை வசூலித்தல்.
- அரசாங்கத்தின் நலத் திட்டப் பயன்பாட்டாளர்களை நேர்மையாக அடையாளம் கண்டு தேர்வு செய்தல்.

**வருமான மூலங்கள் :** உள்ளாட்சி அரசாங்கங்கள் பலவேறு திட்டங்களை அமல்படுத்த பொருளாதார நிதி அல்லது முதலீடு அவசியமானது. இந்த அமைப்புகளின் முக்கிய வருமான மூலங்கள் பின்வருமாறு.

NOT TO BE REPUBLISHED @KTBS

- நீர், சுகாதாரம், கல்வி, நூலகம் மற்றும் வாசிப்புக் கூடங்கள் போன்றவற்றிலிருந்து வசூலாகும் தொகை.
- கட்டிடவரி, காலிநிலத்திற்கான வரி, வியாபார நிறுவனங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட வரி, சந்தை, பொழுது போக்கு (கேளிக்கை) மற்றும் விளம்பரங்கள் மூலம் வசூலிக்கப்பட்ட வரிகளின் மொத்தத் தொகை.
- சுற்றுலாத் தலங்களில் வசூலிக்கப்படும் வரி.
- பஞ்சாயத்தின் சொத்துக்களிலிருந்து பெறும் வாடகை மற்றும் குத்தகைப் பணம்.

- மாநில அரசிடமிருந்து பெறும் நிதி உதவி அல்லது உதவித்தொகை.

## உள்ளாட்சி அமைப்புகளின் கூட்டமைப்பு (Composition of Local Self Governin bodies) :

**கிராமசபைகள் :** கிராம சபை என்பது கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படைக் கூட்டமாகும். இது நேரடி மக்களாட்சியை ஒத்திருக்கிறது. கிராம பஞ்சாயத்தின் அனைத்து வாக்காளர்களும் இதன் உறுப்பினர்கள். கிராமத்தில் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் உறுப்பினர்கள் அனைவரும் கிராம கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.


கிராம சபை

கிராமபஞ்சாயத்துத்தலைவர் கிராம சபை கூட்டங்களுக்கு தலைமை தாங்கி சபை நடவடிக்கைகளை நடத்திக் கொடுக்க வேண்டும். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கிராம சபை கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். சபைக்கூட்டங்களில் கிராமத்தின் பிரச்சனைகள், அவற்றிற்கான தீர்வுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட முறைகள் மற்றும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றி விவாதிப்பார்கள். கிராமத்தினர் பரிந்துரை வழங்கலாம். அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்களின் பயனாளிகளை அடையாளம் காணும் பொறுப்பு இச்சபையைச் சாரும்.

**கிராம பஞ்சாயத்து :** கிராம பஞ்சாயத்து என்பது பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் அடித்தளமாக கீழ் மட்டத்திலிருக்கும் அமைப்பாகும். மக்கள் தொகையின் அடிப்படையில் அமைக்கப் படுகிறது. மொத்தம் 5000 முதல் 7000 வரை மக்கட் தொகையுள்ள ஒரு கிராமம் அல்லது இரண்டு மூன்று கிராமங்கள் இணைந்து கிராம

© KTBS NOT TO BE REPUBLISHED

பஞ்சாயத்து அமைக்கப்படுகிறது. வடகன்னடம், தென்கன்னடம் மற்றும் மலை நாட்டுப் பகுதிகளில் 2000 மக்கட்தொகையைப் பெற்றுள்ள கிராமங்களின் கிராம பஞ்சாயத்து அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கிராம பஞ்சாயத்து உறுப்பினர்கள் தங்களது கிராம பஞ்சாயத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள வயதுவந்த வாக்காளர்களால் தேர்தல் மூலம் தேர்வு செய்யப்படுகிறார்கள். ஒவ்வொரு 400 வாக்களர்களுக்கும் ஒரு பிரதிநிதி தேர்வு செய்யப்படுகிறார். இக் கிராம பஞ்சாயத்துகளிலும் பிற்படுத்தப்பட்ட சாதி, பழங்குடி, பிற்படுத்தப்பட்ட இனம் மற்றும் பெண்களுக்கு இட ஒதுக்கீடுகள் உள்ளன. கிராம பஞ்சாயத்து ஆட்சிகாலம் முதலாவது சபைக் கூட்ட நாளிலிருந்து தொடங்கி முழுமையாக ஐந்தாண்டுகள் வரை நீடிக்கிறது.

கர்நாடக பஞ்சாயத்து ராஜ் சட்டம் 1993 ற்கு 2000 ஆண்டில் இரண்டாம் திருத்தத்தின் படி ஒவ்வொரு பஞ்சாயத்து உறுப்பினரும் கட்டாயமாக தனது வீடுகளில் கழிப்பறை வசதியைப் பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஓராண்டிற்குள் கழிப்பறை கட்டப்பட வேண்டும்.

NOT TO BE REPUBLISHED
©KTBS

கிராம பஞ்சாயத்து சபைகள் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கொரு முறை கூட வேண்டும் மற்றும் சபைக் கூட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு பஞ்சாயத்து உறுப்பினர்கள் வருகை தந்திருந்தால் மட்டும் தீர்மானங்களுக்கும் அனுமதி வழங்க வேண்டும். கிராம பஞ்சாயத்தின் அனைத்து உறுப்பினர்கள் கூடி தலைவரையும் துணைத் தலைவரையும் முப்பத்தைந்து மாதகாலத்திற்கு தேர்வு செய்வார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் பஞ்சாயத்து சபைக் கூட்டங்களில் தலைமை தாங்குவார். அவர் வரவில்லையெனில் துணைத்தலைவர் கூட்டத்தின் தலைமை வகித்து சபை நடவடிக்கைகளை நடத்துவார். தலைவர், துணைத்தலைவர் இடங்களுக்கு ஒதுக்கீட்டு விதிகள் பின்பற்றப்படும். கிராம பஞ்சாயத்துகள் ஆற்றலுடன் கூடிய இணைக்குழுக்களை அமைத்துக் கொள்ளலாம்.

கிராம பஞ்சாயத்து செயல்பாட்டிற்காக ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்கு ஒரு பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி (PDO - Panchayath Development Office) மற்றும் கிராம பஞ்சாயத்து செயலாளர் மாநில அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

**கரிநாடகாவின் பஞ்சாயத்து ராஜ் வரைபடம் கர்நாடக அரசு**

↓

கிராம மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்ச கம்

↓

ஜில்லா பஞ்சாயத்து (31)

↓

தாலுகா பஞ்சாயத்து (239)

↓

கிராம பஞ்சாயத்து (5954)

↓

தலைவர்

↓

துணைத் தலைவர்

} கிராம பஞ்சாயத்து உறுப்பினர்களால் தேர்ந்தடுக்கப் பட்டவர்

↓

உறுப்பினர் } வர்க்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்

↓

பஞ்சாயத்து உளர்ச்சி அதிகாரி (PDO)

↓

கிராம பஞ்சாயத்து செயலாளர்

} மாநில அரசால் நியமிக்கப்பட்டவர்

நிலை - I / நிலை -II

©KTBS NOT TO BE REPUBLISHED

கர்நாடகப் பொருளாதார ஆய்வு 2023 - 24 இல் உள்ள எண்ணிக்கை விவரங்களின் அடிப்படையில் மேலேயுள்ள வரைபடத்தில் ஜில்லா பஞ்சாயத்துகள் மற்றும் கிராம பஞ்சாயத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**தாலுக்கா பஞ்சாயத்துகள் (Taluk Panchayat) :** தாலுக்கா பஞ்சாயத்து என்பது பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் நடுத்தர அடுக்கு ஆகும். 1993 இன் பஞ்சாயத்து ராஜ் சட்டம் தாலுகாக்களில் தாலுக்கா பஞ்சாயத்துகளை அமைக்க வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளது. தாலுகா பஞ்சாயத்து தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களை கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் நேரடி தேர்தல்களின் மூலம் தகுதியான வாக்காளர் களால் தேர்வு செய்யப்படுகிறார். தாலுக்கா பஞ்சாயத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அத்தாலுக்காகளின் மக்கட் தொகையைச் சார்ந்துள்ளது. ஒவ்வொரு 10,000 வாக்களர்களுக்கு ஒரு தாலுக்கா பஞ்சாயத்து உறுப்பினர் இருப்பார். இட ஒதுக்கீட்டில்,

பட்டியலினத்தவர், பழங்குடியினர், பிறபடுத்தப் பட்டோர் மற்றும் பெண்களுக்கு ஒதுக்கீடு ஆகியவை பின்பற்றப் படுகிறது. மேலும், அந்தந்த தாலுகாக்களின் எல்லைக் குட்பட்ட கிராம பஞ்சாயத்துகளின் ஐந்தில் ஒரு பகுதியளவு தலைவர்கள் மண்டல பஞ்சாயத்தின் உறுப்பிராக சேவை புரிய வாய்பளிக்கப் படுகிறது. இவர்கள் லாட்டரி மூலம் தேர்வு செய்யப்படுகிறார்கள். இவரது கால இடைவெளி ஒரு ஆண்டிற்குப் பட்டது. இவர்களின் தேர்வு சுழற்சி முறையில் (Rotation Bais) நடைபெறுகிறது. தாலுக்கா பஞ்சாயத்தின் உறுப்பினர்களின் காலவரை ஐந்தாண்டுகள் ஆகும். சூழ்நிலைக் கேற்ப பதவி விலகல் அல்லது அரசாங்கம் அவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு வாய்ப்புள்ளது. சட்டமன்றம், சட்ட அவைக்குழு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளின் தாலுக்கா பஞ்சாயத்தின் சபை கூட்டத்தில் பங்கேற்கலாம்.

NOT TO BE REPUBLISHED @KTBS

தாலுக்கா பஞ்சாயத்து சபைக் கூட்டம் குறைந்த பட்சம் இரண்டு மாதங்களுக்கொரு முறை நடத்தபட வேண்டும். சிறப்பு சூழ்நிலையில் அவசர அல்லது முக்கிய சபை கூட்டங்களை நடத்தலாம். தாலுக்கா பஞ்சாயத்து தலைவர் சபை கூட்டத்தின் தலைமை தாங்குவார் மற்றும் அவர் வரயியலாத சூழ்நிலையில் துணைத்தலைவர் அப்பொறுப்பை வகிப்பார். தாலுக்கா பஞ்சாயத்தின் நிர்வாகத்தை ஆற்றலுடன் நிர்வகிப்பதற்கு இணைக் குழுக்களை அமைக்கலாம். அரசாங்கம் ஆட்சி முறையை எளிதாக செயலாற்றுவதற்கு ஒவ்வொரு தாலுகா பஞ்சாயத்துக்கும் ஒரு நிர்வாக அதிகாரியை (EO-Excutive officer) அரசு நியமிக்கிறது. தாலுக்கா பஞ்சாயத்துகள் உள்ளூர் அமைப்புகளின் செயல்பாடுகளுடன் மேலும் சில செயல்களை நிர்வகிக்க வேண்டும். அவையாவன:

- கிராம பஞ்சாயத்துகளின் ஆண்டுத் திட்டங்களின் உரைகளைத் தொகுத்து மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
- மாநில அரசு அல்லது மாவட்ட பஞ்சாயத்துகள் குறிப்பிடும் அனைத்து நலத்திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும்.

**மாவட்ட பஞ்சாயத்துகள் (ஜில்லா பஞ்சாயத்துகள்) :** பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களில் ஜில்லா பஞ்சாயத்து மிக உயர்மட்ட அமைப்பாகும். மாவட்டாச்சியை கவனித்துக் கொள்வதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட பஞ்சாயத்துகள் நிறுவப் படுகிறது. மாவட்டாட்சியை முன்னர் மாவட்டக் குழுக்கள் அல்லது மன்றங்கள் என்று அழைக்கப்பட்டன. மாவட்ட பஞ்சாயத்து மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர் நேரடியாகவோ மறை முகமாகவோ அம்மாவட்டத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். மக்கட்தொகை அடிப்படையில் மாவட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் வேறுபாடு காணப்படுகிறது. தட்சிண கன்னடா, உத்தர கன்னட மற்றும் சிக்கமகளூரு மாவட்டங்களில் 30,000 மக்கள் தொகைக்கு

©TBS NOT TO BE REPUBLISHED

ஒரு பிரதிநிதியும், குடகு மாவட்டத்தில் ஒவ்வொரு 18,000 மக்கட்தொகைக்கு ஒரு பிரதிநிதியும், பிற மாவட்டங்களில் ஒவ்வொரு 40,000 மக்கட் தொகைக்கு ஒரு பிரதி நிதியும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தேர்வு செய்யப்பட்ட ஜில்லா பஞ்சாயத்து உறுப்பினர்களுடன் அம்மாவட்டத்தின் அனைத்து தாலுக்கா பஞ்சாயத்தின் தலைவர்கள், சட்டமன்ற மற்றும் சட்டசபைக் குழு உறுப்பினர் மற்றும் அம்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், ஆகியோர் (மாவட்ட) பஞ்சயத்தின் உறுப்பினர் ஆவர். ஆவர்கள் சபை, கூட்டங்களில் பங்கேற்கவும் தேர்வு செய்யவும் வாய்ப்பளிக்கவும் உரிமை உண்டு. பட்டியலினத்தார், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு பின்பற்றப் படுகிறது. மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினரின் காலவரை ஐந்தாண்டுகள் ஆகும்.

ஜில்லா பஞ்சாயத்திற்கு முப்பது மாதங்களின் காலவரைக்கு ஒரு தலைவர் மற்றும் ஒரு துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரை ஜில்லாத் தலைவர் என்றழைக்கிறோம். ஜில்லா பஞ்சாயத்துகள் குறைந்த பட்சம் இரண்டு மாதங்களுக் கொரு முறை சபை கூட, வேண்டும். இந்த சபை மாவட்ட பஞ்சாயத்துதலைவர் தலைமையில் நடைபெறும். அவர் வரயிலாத நேரத்தில் துணைத்தலைவர் அப்பொறுப்பு ஏற்று தலைமை தாங்குவார். இயற்கை சீற்றங்கள் நிகழும் போது. பரிகார நிதியாக ஒரு லட்ச ரூபாயை உதவித்தொகையாக ஒதுக்குவதற்கு மாவட்ட பஞ்சாயத்து தலைவருக்கு அதிகாரம் உள்ளது. ஜில்லா பஞ்சாயத்தை திறமையாக ஆட்சி செய்வதற்கு ஐந்து இணைக்குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். ஜில்லா பஞ்சாயத்தின் அன்றாட செயல்பாடுகளை மேற்பார்வையிட மாவட்ட ஆட்சியர் பதவிக்கு சமமான இந்திய நிர்வாக சேவை (IAS-Indian Administrative Service) அதிகாரியை ஜிலிலா பஞ்சாத்தின் தலைமை செயல் நிர்வாக அதிகாரியை (CEO-

© KTBS NOT TO BE REPUBLISHED

Chief Executive Officer) மாநில அரசு நியமிக்கிறது. இந்த அதிகாரிக்கு ஜில்லா பஞ்சாயத்து கூட்டங்களில் பங்கேற்க உரிமை உண்டு. ஆனால் வாக்களிக்கு உரிமை இல்லை. ஜில்லா பஞ்சாயத்து செயல்பாட்டை நிர்வகிக்கும் அதிகாரம் அவருக்கு உள்ளது.

ஜில்லா பஞ்சாயத்து என்றால் மாவட்ட அரசாங்கம் என்று பொருள். மேம்பாட்டு செயல்களையும் மக்கள் நலத் திட்டங்களையும் செயலாற்றும் அனைத்து அதிகாரமும் இதற்கு உள்ளது. மாநில அரசின் அனைத்து மேம்பாட்டு நிகழ்ச்சி களும் மக்கள் நலத் திட்டங்களும் மாவட்ட பஞ்சாயத்தின் மூலமாகத்தான் அமல்படுத்தப் படுகின்றன. இவற்றுடன் மாவட்ட பஞ்சாயத்து கீழ்க்காணும் செயல்பாடுகளையும் நிர்வகிக்கிறது.

- அரசாங்கத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக செயல் படுத்துவதற்கு ஜில்லா பஞ்ச ாயத்து, தாலுக்கா பஞ்சாயத்து மற்றும் கிராம பஞ்ச ாயத்து ஒன்றுக்கொன்று நம்பிக்கை, விசுவாசம் மற்றும் உதவி மனப்பான்மை சூழலை உருவாக்குதல்.
- திட்டங்களும் மேம்பாட்டுப் பணிகளும் வெற்றி பெறுவதற்கும் அனைத்து துறைகளுடன் ஒருங்கிணைதல்.
- மாவட்ட கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் பிற கூட்டுறவு நிறுவனங்களை நிறுவி, அவை செயலாற்றுவதற்கு ஊக்குவித்து ஆதரவு அளிக்க வேண்டும்.
- மாநில அரசின் வழிகாட்டுதலின் படி பணிகளை செயல்படுத்துதல்.

NOT TO BE REPUBLISHED @KTBS

மாநில தேர்தல் ஆணையம் 73 வது திருத்தச் சட்டத்தின் மூலம் அரசியலமைப்பில் இணைக்கப்பட்ட 243K சட்டத்தின் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்குத் தேர்தலை நடத்தவும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்களை நடத்தவும் மாநில அளவில் தனி மாநில தேர்தல் ஆணையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 74வது திருத்தச் சட்டம் மூலம் அரசியலமைப்பு. இவ்வாறு நிறுவப்பட்ட கர்நாடக மாநில தேர்தல் ஆணையம் கர்நாடகாவில் கிராம பஞ்சாயத்துகள், தாலுக்கா பஞ்சாயத்துகள் மற்றும் ஜில்லா பஞ்சாயத்துகள் போன்ற பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு களான பட்டன பஞ்சாயத்துகள், நகராட்சிகள், முனிசிபல் கவுன்சில்கள் மற்றும் பெருநகர மாநகராட்சிகளுக்கும் தேர்தல்களை நடத்துகிறது.

**நகர உள்ளாட்சி அமைப்புகள் :** மாநிலத்தில் பல்வேறு மாநகர மற்றும் நகரங்களை நகர்ப்புறம் என்று குறிப்பிடுகிறார்கள். இந்நகர்ப்புறங்களில் மக்கள், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து. குடியீர், தூய்மைப் படுத்துதல். கேளிக்கை போன்ற நல்ல வசதிகள் இல்லாமல் பல பிரச்சனைகளாக உள்ளன. இந்த நகரவாசிகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் நகர உள்ளூர் அமைப்புகள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. 74 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசியலமைப்பு அந்தஸ்தை வழங்கியது. கர்நாடகாவில் உள்ள நகர பஞ்சாயத்து, நகராட்சி, நகராட்சி நிறுவனங்கள் மற்று நகராட்சி மன்றங்கள் ஆகியவை முக்கிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்.

**நகர உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று வகைகள் :**

1. பெருநகர மாநகராட்சி (மாநகர பாலிக்கே) முக்கிய நகரங்கள்.

NOT TO BE REPUBLISHED @KTBS

2. நகர பஞ்சாயத்து, நகராட்சி, நகர சபை - நகரங்கள் மற்றும் பட்டணங்கள்.

3. பாளைய வாரியங்களின் ஒரு பகுதி - பாதுகாப்பு அமைச்சரகத்தின் கீழ் உள்ள பகுதி.

மக்கட்தொகை வருமானம், சமூக நிலைகளின் அடிப்படையில் மாநில அரசு, ஒரு பகுதியை நகரம் என்றோ பட்டணம் என்றோ அறிவிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. நகர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்கள் (பணிகள்) பல்வேறுள்ளன. அவற்றில் முக்கியமானவை

- வருவாய் - செலவு பட்டியல் தயாரித்து மன்றங்களின் அனுமதியை (ஒப்புதலைப்) பெறுதல்.
- நகராட்சியை முழுமையாகக் கவனித்துக் கொள்ளுதல்.
- சிறந்த நகரத்திட்டத்தை தயாரித்து செயல்முறைப் படுத்துதல்.
- சிறப்பான சாலை, போக்குவரத்து வசதி, நீர் விநியோகம், கல்வி, மின்னாற்றல், சந்தை, சுகாதாரம் மற்றும் பிற வசதிகளை சிறந்த முறையில் வழங்குதல்.
- நகரங்களில் கழிவு நீர், சாக்கடை, வசதி ம்ற்றும் திண்ம குப்பைகளினை அப்புறப்படுத்தும் வசதிகளை செய்து தூய்மையைப் பாதுகாத்தல்.
- கட்டிடங்களை அமைக்க உரிமம் வழங்குதல் மற்றும் நகர சபை கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- பிறப்பு - இறப்புகளைப் பதிவு செய்தல்.
- விளையாட்டு அரங்குகள், கேளிக்கைக் கூட்டங்கள், பூங்காங்களை அமைத்து, அவற்றை நிர்வகித்தல்.
- நகர குடிசைப்பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வசதி ஏற்படுத்துதல் மூலம் அங்குள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

- குழந்தைகள் நலமையங்கள், சிறுவர் சீர்த்திருத்தப் பள்ளிகள், பிச்சைக்காரர்கள் குடியிருப்புகள், ஆதரவற்றோர் விடுதிகள் போன்ற உதவி மையங்களை நிறுவி, நிர்வகித்தல்.
- நீச்சல் குளம், விளையாட்டரங்கம், அருங்காட்சியகம், பேருந்து நிலையம், பொது மக்கள் நூலகம், கால்நடை மருத்துவமனை, திரை அரங்கம், சந்தைப்புறம், இடு காடு போன்ற கட்டிடங்கள் அமைத்தல் மற்றும் நிர்வகித்தல்.
- மழை நீர் அறுவடைத் திட்டத்தை அமைத்து அமல்படுத்துதல்.
- நகரத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் நலிவுற்ற பிரிவினரை மேம்படுத்தும் முறைகளை மேற்கொள்ளுதல்.
- நகரத் தூய்மை, அழகுத் தோற்றம் மற்றும் பசுமையால் கண்ணுக்கு விருந்தளிக்கும் பொருத்தமான திட்டங்களை மேற்கொள்ளுதல்.

**வருவாய் மூலங்கள் :** நகரப்புறங்களின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிகளுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல் முறைப் படுத்துவதற்கு வருவாய் மிகத் தேவையானது. நகர சபையின் வருவாய்களின் முக்கிய மூலங்களாவன: கட்டிட வரிகள், காலியிடங்களின் மீதான வரி, கடைகள் மற்றும் விற்பனை செய்யும் தள்ளு வண்டிகளின் மீது வசூலிக்கப்படும் வரி, நகர சபை புராதன கட்டிடங்கள், சந்தைகளிலுள்ள கடைகளிலிருந்து வசூலாகும் வாடகை மற்றும் கேளிக்கை வரிகள் போன்றவை. மாநில அரசு வழங்கும் மானியத் தொகையினால் நகர அமைப்புகள் நலத் திட்டங்களை மேற்கொள்கின்றன.

© KTBS NOT TO BE REPUBLISHED

## நகர உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு :

**நகராட்சி கழகங்கள் (அ) நகராட்சி பஞ்சாயத்து, நகரசபை மற்றும் நகர்ப்புறசபை நிறுவனங்கள் :** நகர்ப்புறங்களின் மக்கட்தொகையின் அடிப்படையில் பட்டணம் மற்றும் நகர்ப்புறங்கள் என்று வகைப்படுத்தப்பட்டு, 20 முதல் 50 ஆயிரங்கள் வரையுள்ள மக்கட் தொகையைக் கொண்டிருந்தால் அது பட்டணம் என்று கருத்தப்படுகிறது. 50 ஆயிரத்திலிருந்து 3 லட்சங்களுக்குள் மக்கட்தொகையினைக் கொண்டுள்ள பகுதியை நகரம் என்று வகைப்படுத்தலாம். பட்டணத்தில் ஆட்சி செய்யும் சபை பட்டண சபை என்றழைக்கப்படும். நகராட்சி மன்றம் நகரசபை என்று அழைக்கப்படுகிறது. பட்டணம் மற்றும் நகர சபைகளின் உறுப்பினர்கள் நேரடி வாக்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி மன்ற சபையின் உறுப்பினர் அல்லது கௌன்சிலர் (Councillor) என்று அழைக்கப்படுவார். உறுப்பினர்களின் எண்ணிக்கை நகர சபை அல்லது பட்டணத்தின் மக்கட் தொகையைச் சார்ந்திருக்கும். நகர சபைகளின் மேம்பாட்டிற்காக 23 முதல் 27 உறுப்பினர்களும் பட்டணங்களின் நகர சபைகளில் 31 முதல் 37 உறுப்பினர்கள் இருப்பார்கள். இதனுடன் மாநில அரசு ஐந்து பேரை உறுப்பினர்களாக நகர மற்றும் மாநகர சபைகளுக்கு நியமிக்கின்றது. இவ்வுறுப்பினர்கள் நகர சபைகளின் விவாதங்கங்களில் பங்கேற்கும் உரிமையைப் பெற்று இருந்தும் வாக்களிப்பு உரிமை இருப்பதில்லை. நகர உள்ளாட்சி அமைப்புகளிலும் விதிமுறைப்படி, மாநகராட் சிக்கு உட்பட்ட பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தவும், மக்க ளவை மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் இராஜ்ய மற்றும் சட்ட மேலவை உறுப்பினர்கள் கூட்டங்களில் (சபைகளில் கலந்துக் கொண்டு வாக்களிக்கும் உரிமை பெற்றிருப்பர். பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்மற்றும்பெண்களுக்கானஇடஒதுக்கீடு செயல்படுத்தப்படுகிறது. உள்ளூர் அமைப்பின் தலைவர் மற்றும் துணைத்தலைவர்கள் இவ்வமைப்புகளில் முக்கிய இடம்வகிப்பார்கள். இவர்களின்பதவி காலம் ஒருவருடம் ஆகும். இவர்கள் தேர்வு செய்யப் பட்ட உறுப்பினர்களால்

@KTBS NOT TO BE REPUBLISHED

தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தலைவர் சபையின் தலைமை தாங்கி, நடவடிக்கைகள் இனிதாக நடைபெறுமாறு கவனித்துக் கொள்வார்கள். தலைவராயியலாத சூழலில் துணைத்தலைவர் தலைமைப் பொறுப்பை வகிப்பார். நகர உள்ளாட்சி அமைப்புகளின் காலவரை ஐந்தாண்டுகள் ஆகும். சில சிறப்பான சூழல்களில் அதிகாரக் காலவரையை தொடரும்உரிமையைமாநிலஅரசுபெற்றுள்ளது.உள்ளாட்சி அமைப்புகள் திறமையுடன் ஆட்சியை நிர்வகிப்பதற்கு நான்கு இணைக்குழுக்களை உருவாக்கிக் கொள்கின்றன. மாநில அரசால் நியமிக்கப்பட்ட முதன்மை அதிகாரி முக்கிய நிர்வாக அதிகாரியாகி உள்ளூர் அமைப்புகளின் அனைத்து செயல்பாடுகளையும் நிர்வகிக்கின்றார்.

### மாநகராட்சிகள் (**City Corporation (or) Mahanagara Palike**):

*1976*யில் கருநாடக மாநகராட்சிக் கழகச் சட்டத்தின் கீழ் மாநகராட்சிகள் உருவாக்கப்படுகின்றன. இரண்டு இலட் சத்தை விட அதிக மக்கட்தொகை மற்றும் கோடியை விட அதிக வருவாயுள்ள நகரப்பகுதிகளில் மாநகராட்சி கழகங்கள் அமைக்கப்படுகின்றன. நகராட்சி கழக உறுப்பினர்கள் தேர்தல்கள் மூலம் தேர்வு செய்யப்பட்டு நகராட் உறுப்பினர்கள்(Corporator) என்றழைக்கப்படுகிறார்கள். இவ்வுறுப்பினர்களின் எண்ணிக்கை மக்கட் தொகை அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறது நகராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 30 முதல் 100 வரை இருக்க வேண்டும். மாநகராட்சியின் கழகத்தின் அளவை மாநில அரசாகம் தீர்மானிக்கிறது.

NOT TO BE REPUBLISHED © KTBS

> கருநாடகத்தில் மொத்தம் 10 நகராட்சிகள் மற்றும் ஒரு மாநகராட்சி சேர்ந்து. 11 மாநகராட்சிகள் உள்ளன. பெங்களூரு நகராட்சி, மாநகராட்சி கழகம், பெங்களூர் மாநகராட்சி நகராட்சியில் 225 (BBMP) வார்டுகளாக உள்ளன.

நகரம் சிறுசிறு தேர்தல் பிரிவுகளாகப் பிரித்து தொகுதி அல்லது வார்டு என்றழைக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒரு கழக உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார் இவ்வுறுப்பினர்கள் நேரடி

வாக்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கழகத்தில் பட்டியலினத்தவர், பழங்குடிகள், பிற்படுத்தபட்ட இனத்தினர் மற்றும் பெண்களுக்கு ஒதுக்கீடு முறை பின்பற்றப் படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினருடன் மாநில அரசு நகரத்திட்டம், கல்வி, சுகாதாரம், உள்ளாட்சி அமைப்பிலுள்ள நிபுணர்கள் ஐந்து பேர்களை உறுப்பினர்களாக நியமிக்கிறது. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினருக்கு வாக்குரிமை இருப்பதில்லை. ஆனால் சபைக் கூட்டத்தில் கலந்துக் கொண்டு அங்கு நடைபெறும் செயல் பாடுகளில் பங்கேற்கலாம். மாநகரக் கழக எல்லைக்குட்பட்ட நகரத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாக பிரதிநிதித்துவப் படுத்துவர். சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பராளமன்ற உறுப்பினர்கள் பெருநகர கழகம் உள்ள கூட்டத்தில் பங்கேற்கவும் வாக்களிக்கவும் உரிமைகளைப் பெற்றிருப்பார்கள். உரிமைகளைப் பெற்றிருப்பார்கள். மாநகராட்சி கழக பதவிக் காலம் ஐந்தாண்டுகளாகவும், சிறப்பான சூழ்நிலைகளில் மாநில அரசு குறைந்தபட்சம் ஓர் ஆண்டுவரை காலத்தை நீட்டிக்கலாம்.

மாநகர தந்தை (மேயர்) மற்றும் துணை மாநாகரத் தலைவர் துணைமேயரும் தலைவர்கள் ஆவர். இவர்கள் மாநகராட்சி கழக உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இவர்களின் பதவிக் காலம் ஓர் ஆண்டாகும். மாநகர கழக மேயர் சபைகளின் தலைமை தாங்குவார். சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை செயல்முறைப் படுத்துவதற்கான முறையை மேற்கொள்வார். மேயர் மாநகராட்சியின் செயல் நிர்வாகத்தைக் கட்டுப் படுத்துவார். திறமையுள்ள ஆட்சிக்காக இணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

***1976*ன் கருநாக மாநகராட்சி சட்டம் *2011*ல் திருந்தியமைக்கப்பட்டது. இத்திருத்தச் சட்டம் பெங்களூரை உள்ளடக்கிய கருநாடகத்தின் *11* மாநகராட்சி கழகங்களுக்கும் பொருந்துகிறது. சட்டத்தில் மாநகராட்சியின் செயல் பாடுகளில் சமூகமும் பங்கேற்க வாய்ப்பு அளித்துள்ளது.**

@KTBS NOT TO BE REPUBLISHED

மாநகர கழகம் செயல்நிர்வாகத்தை ஆணையர் கவனித்துக் கொள்வார். பொதுவாக இந்திய மேலாண்மை சேவை (IAS-Indian Administrative Service) அதிகாரி இப்பதவிவகிப்பார். இவரை மாநில அரசு நியமிக்கிறது. கழகத்தின் ஆணையர் அனைத்து செயல்நிர்வாகங்களிலும் பங்கேற்று தேவையான தகவல்களை வழங்குவார். மாநகர கழக ஆணையர் மேயருக்கு உதவிபுரிந்து கழகத் தீர்மானங்களை செயல்படுத்துவதில் முழுமையாக ஈடுபடுவார்.

## பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களில் ஏற்ற சொற்களால் நிரப்புக:**

1. நடைமுறையிலுள்ள கருநாடக பஞ்சாயத்து ராஜ் சட்டம் அமல்படுத்தப்பட்ட ஆண்டு ___________ .
2. கிராமத்திலுள்ள அனைத்து வாக்காளர்கள் பங்கேற்கக் கூடிய கிராம சபையை ___________ என்று அழைப்பார்கள்.
3. தாலுக்கா பஞ்சாயத்துகளுக்கு கிராம பஞ்சாயத்து தலைவரை தேர்வு செய்யும் போது ___________ முறை பின்பற்றப்படுகிறது.
4. ஜில்லா பஞ்சாயத்தின் அன்றாட பணியைக் கவனித்துக் கொள்ள நியமிக்கப்படும் அதிகாரியை ___________ என்றழைப்பார்கள்.
5. பெங்களூரை உள்ளடக்கிய கருநாடகத்தின் மொத்த மாநகராட்சி கழகங்களின் எண்ணிக்கை ___________ ஆகும்.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.**

6. உள்ளாட்சி அரசாங்கங்களின் நோக்கங்கள் யாவை?
7. நீங்கள் வசிக்கும் பகுதி கிராமப்புறம் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு எந்த பகுதிக்கு உட்பட்டது.

NOT TO BE REPUBLISHED @KTBS

8. கிராம பஞ்சாயத்து கட்டமைப்பை விவரி?

9. உள்ளூர் ஆட்சி அரசாங்கத்தின் வருவாய் மூலங்கள் யாவை?

10. உள்ளாட்சி அமைப்புகள் இணைக் குழுக்களை அமைப்பதற்கான தேவையைக் குறிப்பிடவும்.

11. உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு வாய்ப்பை பெறும் உறுப்பினர்களின் பிரிவுகளைப் பட்டியலிடுக.

12. ஒரு பகுதியை பட்டணம் மற்றும் நகரம் என்றும் வகைப்படுத்துவதற்குத் தேவையான மக்கட் தொகை அளவு என்ன?

13. கரநாடகத்தில் உள்ள பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் மூன்று படிநிலைகள் யாவை?

## III. செயல்பாடுகள்:

1. உங்கள் உள்ளாட்சி அமைப்பின் தலைவரை பள்ளிக்கு வரவழைத்து உங்கள் பகுதியின் பிரச்சனைகளையும் அவற்றின் நிவாரணத்திற்கு மேற்கொண்டுள்ள திட்டங்களைப் பற்றியும் அவருடன் விவாதிக்கவும்.

2. நீங்கள் உங்கள் உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினரானால், அங்குள்ள பிரச்சனைகளைத் தீர்வு காண மேற்கொள்ளக் கூடிய முறைகள் யாவை?

3. நீங்கள் ஏதேனும் ஒரு கிராம பஞ்சாயத்தின் கிராம சபையில் கலந்துக் கொண்டு ஒரு அறிக்கை தயாரிக்கவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

## IV. திட்டங்கள்

1. பண்டைய இந்தியாவில் செயலாற்றிய உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றி ஆய்வு செய்து தகவல்களைச் சேகரிக்கவும்.
2. நீங்கள் வசிக்கும் பகுதியில் ஆய்வை மேற்கொண்டு அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் வசதிகளின் பட்டியலைத் தயாரித்து அங்குள்ள மக்களுக்கு இந்த வசதிகள் எவ்வாறு நன்மையுடையதாக உள்ளன என்பதைப் பற்றி அறிக்கை தயாரிக்கவும்.
3. உள்ளாட்சி அமைப்பின் ஐந்து அல்லது ஆறு உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு அவர்கள் பிரதிநிதியாக உள்ள பகுதிகளை மேம்படுத்துவதற்கு மேற்கொண்ட முறைகளைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து அறிக்கை தயாரிக்கவும்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

# பாடம் 24 அன்றாட வாழக்கையில் சமூகவியல்

V8WZZ8

**இந்த அத்தியாயத்தை கற்றபின் கீழ்க்காணும் அலகுகளைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்:**

- *அன்றாட வாழக்கையில் சமூகத்தின் தொடர்பு அறிதல்*
- *சமூக வாழக்கையில் தனிநபரின் பங்கு, பற்றி புரிந்து கொள்ளுதல்.*
- *சமூக விவகாரங்களில் அவ்வப்போது நடைபெறும் தொடர்பின் முக்கியத்துவத்தை அறிதல்.*

NOT TO BE REPUBLISHED ©KTBS

**அன்றாட வாழ்க்கை :**

சிலர் பெண்களைப் பற்றி பேசும்போது, பெண்களுக்கு அதிக அறிவாற்றல் கிடையாது என்று அவ்வப்போது வெளிப்படுத்துவார்கள். இக்கூற்று பெண்களைத் தாழ்வு படுத்துவது மற்றும் ஆண்களை விட வலிமை குன்றியவர்களென்று நினைப்பதை வெளிப்படுத்துகிறது. ஆனால், இது பெண்களைப் பற்றி கூறப்பட்ட அறிவு பூர்வமற்ற பொதுவான வழக்கு, அறிவியல் உண்மையல்ல. அறிவாற்றலில் ஆண் பெண் என்ற பாகுபாடில்லை.

மேற்கண்ட எடுத்துக்காட்டின் மூலம் புரிந்துகொள்ளப் படுவது என்னவெனில், பொது அறிவு பல நேரங்களில் நமது அன்றாட வாழக்கைக்கு துணை புரிந்தாலும், சில முக்கியமான வினாக்களுக்கான விடையளிக்க இயலுவதில்லை. அத்தகைய சூழ்நிலையில் நமக்கு சமூகவியல் துணை புரிகிறது. பெண்களைப் பற்றி படித்து, அவர்களும் ஆண்களைப் போன்று ஆற்றலுடையவர்கள், சமமானவர்கள் என்பதை

அறிவியல் முறையில் நிரூபிக்க இயலுகிறது. மேற்கண்ட விளக்கத்தின் மூலம், சமூகவியல் நமக்கு சமூகத்தைப் பற்றியும், நமது அன்றாட வாழ்க்கையைப் பற்றியும் சரியான அறிவை அளிக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம். இந்தவொரு கருத்தை அறிவியல் பூர்வமாக படிப்பதற்கு சமூக வியல் துணை புரிகிறது.

**தனி நபர் உடல்மொழி மற்றும் உரையாடல்**

நாம் அன்றாட வாழ்க்கையில் பலருடன் உறவாடுகிறோம். இந்த சமூக உறவாடுதலை சமூக இடைவினை என்றழைக்கப்படுகிறது. சமூக உறவாடல் என்றால் இரண்டிற்கு மேற்பட்ட நபர்கள் அன்றாட மொழி, சைகை மூலம் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு ஒருவர் மற்றொருவரின் நடவடிக்கை மற்றும் சிந்தனைகளில் விளைவுகளை ஏற்படுத்துவதாகும்.

தொடர்பில்லாமல் நமது அன்றாட வாழக்கையை நடத்த முடியாது. நாம் என்ன மொழி பேசுகிறோம் என்பது நாம் எந்த நாட்டில் வசிக்கிறோம் என்பதைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது. அதற்கேற்றவாறு நாம் நமது மொழியைப் வழக்கப் படுத்திக் கொள்கிறோம். இல்லையெனில், நாம் வாழக்கை நடத்துவது கடினமாகிறது. சில நேரங்களில் நமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு மாறுபட்ட வகையான ஊடகங்களைப் பயன்படுத்துகிறோம். மொழி இல்லையென்றால் உரையாடுவதற்கு ச ாத்தியமில்லை. அத்தகைய சூழல்களில் உடல் மொழி மூலமாகவோ முகபாவனை மூலமோ நமது உணர்வுகளை வெளிப்படுத்துகிறோம்.

©KTBS NOT TO BE REPUBLISHED

## கதாபாத்திர அளவு

நீங்கள் மருத்துவமனைக்குச் சென்றால், மருத்துவர் செவிலியர்களைக் காணலாம். மருத்துவர் நோயாளியைப் பரிசோதித்து, பிறகு தேவையான மருந்து மற்றும் சிகிச்சை யைக் கூறுகிறார். அவரின் பரிந்துரை குறிப்புகளுக்கேற்ப செ விலி மருந்துகளை வழங்கி நோயாளிக்கு சேவை புரிகிறார். அவ்வாறே ஆசிரியர் வகுப்பில் நுழைந்த பிறகு உங்களிடம் சில வினாக்களைக் கேட்கிறார். இதன் மூலம் நீங்கள் படித்து வந்துள்ளீர்களா என்பதைப் பரிசோதிக்கிறார். நீங்களும் உங்களுக்குப் புரியாத கருத்துக்களை அவரிடம் கேட்டு விடைகளைப் பெறுகிறீர்கள்.

ஆனால் மருத்துவமனைக்கு சென்று மருத்துவரை நீங்கள் பள்ளிப்பாடங்களைப் பற்றிய வினாக்களைக் கேட்பதில்லை. அல்லது ஆசிரியரிடம் நோய்க்குத் தொடர்புடைய மருந்துகளை பரிந்துரைக்குமாறு கேட்பதில்லை. நாம் ஏன் இவ்வாறு செய்கிறோம்? மருத்துவரிடம் சுகாதாரப் பரிசோதனை, ஆசிரியரிடம் பாடம் கற்றுக்கொள்ளுதல், செவிலியரிடமிருந்து சேவை ஆகியவற்றை எதிர்பார்க்கிறோம். இங்கு நமக்கு எவ்விதமான குழப்பமும் ஏற்படுவதில்லை. ஒவ்வொரு நபரும் தனக்களித்த கதாபாத்திரத்தை நிர்வகிப்பதை ‘‘கதா பாத்திர அறிவு’’ என்றழைக்கிறோம். நாம் குடும்பத்திலும் அண்ணன்-தம்பி, தந்தை-தாய், தாத்தா-பாட்டி போன்ற பல கதாபாத்திரங்களை வகிக்கிறோம். மனிதன் தனது வயது மற்றும் காலகட்டத்தில் இத்தகைய பல கதாபாத்திரங்களை ஒருவனே நிர்வகிக்கிறான்.

@KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களில் ஏற்ற சொற்களால் நிரப்புக:**

1. நமது உணர்வுகளை __________ மூலம் வெளிப் படுத்துகிறோம்.
2. சமூகவியல் எந்த வொரு கருத்தையும் __________ இல்லாமல் படிப்பதற்கு துணைபுரிகிறது.
3. சமூக இடைவினை உறவாடுதலை __________ என்று அழைக்கிறோம்.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

4. அன்றாட வாழக்கையில் சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கு சமூகவியல் எவ்வாறு உதவுகிறது?
5. மொழியின் முக்கியத்துவத்திற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
6. கதாபாத்திர அறிவு என்றால் என்ன?

**III. கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கைந்து வாக்கியங்களில் விடையளிக்க:**

7. மொழிக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்பை விவரிக்க.
8. கதாபாத்திர அறிவை எடுத்துக் காட்டுகளுடன் விவரிக்க.

**IV. செயல்பாடு:**

1. நீங்கள் இதுவரை சகோதர/சகோதரியா நிர்வகிக்கும் கதாபாத்திரத்தைப் பற்றி கட்டுரை வரைக.

@KTBS NOT TO BE REPUBLISHED

| பாடம் 25 | சமூகத்தின் வகைகள் |
|---|---|

B4N4V3

**இந்த அத்தியாயத்தைக் கற்றபின் நீங்கள் கீழ்க்காணும் அலகுகளைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்.**

- *சமூகத்தின் பல்வேறு வகைகளை அறிதல்.*
- *பல்வேறு சமூக வகைகளின் பண்புகளை அறிதல்.*

நாம் அனைத்து இடங்களிலும் ஒரே வகையான சமூகத்தை காண்பதில்லை. மக்கள் வாழ்க்கை கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் தொழில் போன்றவை இடத்திற்கிடம் வெவ்வேறாக உள்ளன. உதாரணத்திற்கு கிராமப்புறங்களில் உள்ள மக்களின் உடைகள் அன்றாட நடைமுறை வாழ்க்கமுறைகள் பெருநகரங்களின் வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளிலிருந்து வேறாக இருப்பதை நாம் கவனிக்கலாம். கிராமங்களில் காணப்படும் கட்டிடங்கள் நகரங்ளில் காணப்படுவதில்லை. நகரங்களில் காணப்படும் கட்டிடங்கள் கிராமங்களில் இல்லை. அதாவது சமூகம் அனைத்து பகுதிகளிலும் ஒரே முறையில் இருப்பதில்லை. வெவ்வேறு வகையாகக் காணப்படுகின்றன. எனவே நாம் சமூகத்தை அதன் இயல்பின் அடிப்படையில் பல்வேறு வகைகளாகப் பிரிக்கலாம் அவையாவன.

1. வேட்டையாடும் மற்றும் உணவு சேகரிக்கும் சமூகம்.
2. கால்நடை வளர்க்கும் சமூகம்.
3. வேளாண் சமூகம்
4. தொழில் துறை சமூகம்

**1. வேட்டையாடும் மற்றும் உணவு சேகரிக்கும் சமூகம்.**

இது மனித சமூகத்தின் மிகப்பழமையான மற்றும் எளிமையான சமூகம் ஆகும். இச்சமூகத்தில் சிறிதளவு எண்ணிக்கையில் பொதுமக்களைக் கொண்டுள்ள மிகச்சிறிய

©KTBS NOT TO BE REPUBLISHED

சமூகம் ஆகும். நாடோடி வாழ்க்கை முறையுள்ள சமூகமிது. இவர்கள் பயன்படுத்தும் ஆயுதங்கள் கல்லாலான கோடாலி, ஈட்டி, கத்தி போன்றவை. இம்மக்கள் தங்கள் பிழைப்பிற்காக காட்டு விலங்குகளை வேட்டையாடுகிறார்கள். இயற்கையாக விளைகின்ற பழங்கள், விதைகள், கிழங்கு வகைகள், காய்கறிகள் போன்றவற்றைச் சேகரிக்கிறார்கள். செல்வத்தை ஈட்டும் ஆர்வம் இவர்களிடம் இல்லை. பகிர்ந்து வாழ்கின்ற முறையை பின்பற்றுகிறார்கள்.

**இச்சமூகத்தின் பண்புகள் :**

1. இச்சமூகம் மிகவும் சிறியது மற்றும் ஆங்காங்கே சிதறிவாழும் மனித சமூகம் ஆகும். இவர்களின் மொத்த எண்ணிக்கை 40-50ஐ விட அதிகமாக இருப்பதில்லை.
2. இவர்கள் நாடோடிகளாதலால், ஓரிடத்தில் உணவு கிடைக்கவில்லையெனில், அதனைத் தேடிக் கொண்டு மற்றொரு இடத்திற்கு செல்வது வழக்கம்.
3. இங்கு செல்வத்தைச் சேகரித்து வைக்கும் ஆர்வத்தைக் காணமுடியாது. அதைப்பற்றிய சிந்தனை இவர்களிடம் தென் படுவதில்லை. சேகரித்த உணவை பிறருடன் பகிர்ந்து உண்கிறார்கள்.
4. இச்சமூகத்தில் உறவுகள் அடிப்படையில் மொத்த சமூகமும் பின்னிப் பிணைந்துள்ளன. தனி நபராக வாழ்வதில்லை. குடும்பம் மற்றும் உறவுகள் மட்டுமே ஒன்றுக்கொன்று தொடர்புடைய அமைப்புகளாக உள்ளன.
5. இங்கு அரசியல் அமைப்புகள் இல்லாததால் ஆள்பவர் மற்றும் ஆள்பவரின்கீழ் இருப்பவர்கள் என்ற வர்க்கங்களே இல்லை.

**2. கால்நடை வளர்ப்பு சமூகம் :**

தங்கள் வாழ்வாதாரத்திற்காக கால்நடைகளை மந்தைகளாக வளர்க்கும் சமூகம் கால்நடை வளர்க்கும் சமூகம் எனப்படும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

இம்மக்கள் வாழக்கைக்கான தேவைகள் கால்நடைவளர்ப்பு, வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் ஆகியவற்றின் மூலம் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். ஆப்பிரிக்கா மற்றும் மத்திய ஆசியாவின் சில பகுதிகளில் இன்றளவும் கால்நடை வளர்க்கும் சமூகங்கள் உள்ளன.

### இச்சமூகத்தின் பண்புகள்

1. இச்சமூகம் பெரிதளவில் உள்ளது. நூற்றுக்கணக்கில் மற்றும் ஆயிரக்கணக்கில் மக்களைக் கொண்டுள்ளன. எ.கா: பக்தியரி சமூகம் இன்றளவும் 5000 முதல் 1,50,000 மக்கட்தொகையை உள்ளடக்கியுள்ளன.
2. புல்வெளி பகுதிகளிலும், மலை, குன்றுப் பகுதிகளிலும், பாலைவனம் மற்றும் வறண்ட வயல்வெளிப் பிரதே சங்களிலும் பொதுவாக இச்சமூகத்தினரைக் காணலாம். இத்தகைய பகுதிகள் கால்நடை வளர்த்தலுக்கு உகந்ததாகும். எனவே இவர்களின் முக்கியத் தொழில் கால் நடை வளர்த்தல் ஆகும்.
3. இச்சமூகத்தில் அதிக கால்நடைகளுக்குச் சொந்தமானவர் மற்றவர்களை விட செல்வாக்கு உடையவராகயிருப்பார். இவர் செல்வந்தராக மற்றவர்களுக்கு தலைவராக இருப்பார்.

### 3. வேளாண்மை சமூகம் :

உழவுத் தொழிலைச் சார்ந்து வாழ்க்கை நடத்தும் சமூகத்தை வேளாண்மை சமூகம் என்பார்கள். வேளாண்மைக்கு விலங்கு மற்றும் கலப்பையை பயன்படுத்துவார்கள்.

### இச்சமூகத்தின் பண்புகள் :

1. C.E 3000 யில் ஆய்வுடன் ‘‘வேளாண்மை கிளர்ச்சி’’ தொடங்கியது. இதன் மூலம் உணவு உற்பத்தியும் அதிகரித்தது. கலப்பையை இழுப்பதற்கு விலங் காற்றலைப் பயன்படுத்த தொடங்கியதிலிருந்தே உணவு உற்பத்தி மேலும் அதிகரித்தது.

2. வேளாண் சமூகத்தில் விவசாயம் / உழவு முக்கியமான தொழில் ஆகும். எனவே மக்கள் ஒரே இடத்தில் நிலைத்திருந்தார்கள். அதன் மூலமாக கிராமங்கள் உருவாகின.

3. இங்கு அதிக உணவுப் பொருட்கள் உற்பத்தியாவதால், அனைவரும் மணிக்கணக்கில் உழைக்க வேண்டிய தேவையிருக்கவில்லை. எனவே அதிக எண்ணிக்கையில் மக்கள் பிற பணிகளில் ஈடுபட்டனர். பல்வேறு திறன்கள் உருவாகின.

### 4. தொழில்துறை சமூகம்

அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தைப் பயன் படுத்தி பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களைச் சார்ந்து வாழும் சமூகம் தொழில் துறை சமூகம் என்றழைக்கப்பட்டது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

### இச்சமூகத்தின் பண்புகள்

1. புதுப்புதுத் தேடல்கள், சமூக மாற்றங்களை உருவாக்கின. நீராவி இயந்திரம், உள் எரிப்பு இயந்திரம், மின்சார ஆற்றல், அணு ஆற்றல் போன்றவை மிகப் பரந்த வடிவ சமூக மற்றும் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன மற்றும் ஏற்படுத்திக் கொண்டே உள்ளன.

2. தொழில்களை உருவாக்கியுள்ள நகரங்களுக்கு மக்கள் வேலை தேடி இடம் பெயர்ந்து வருகிறார்கள். எனவே மக்கட்டதொகை பெருகிக் கொண்டிருக்கின்றன.

3. தொழில் நடத்துவதற்கு தொழில் பங்கீடு தேவையானது. ஆதாவது திறன்களடிப்படையில் வேலை பிரிக்கப் படுகிறது. தொழில் துறை சமூகதின் அனைத்து பிரிவுகளிலும் தொழில் பங்கீடு காணப்படுகிறது.

4. ஒரு கண்ணோட்டத்தில் இந்த வகைப்பாட்டை மனித சமூதாயத்தின் பரிணாம வளர்ச்சியின் நிலைகளாகவும் கொடுக்க முடியும்.

## பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களில் ஏற்ற சொற்களால் நிரப்புக:**

1. வேட்டையாடும் சமூக உறுப்பினர் வேட்டையாடுவதற்கு __________ ஆயுதங்களைப் பயன் படுத்துவார்கள்.
2. வேளாண்மை சமூகத்தில் உழுவதற்கு __________ பயன் படுத்துவர்.
3. திறன்களடிப்படையில் பணியைப் பங்கிடுவது __________ எனப்படும்.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:**

4. கால்நடை வளர்ப்பு சமூகம் என்றால் என்ன?
5. வேளாண் சமூகம் என்றால் என்ன?
6. தொழில் துறை சமூகம் என்றால் என்ன?
7. சமூகத்தின் வகைகள் யாவை?

**III. கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கைந்து வாக்கியங்கலில் விடையளிக்க:**

8. வேட்டையாடும் மற்றும் உணவு சேகரிக்கும் சமூகத்தின் வாழ்க்கை முறையை விவரிக்க.
9. கால்நடை வளர்க்கும் சமூகத்தின் பண்புகளை விவரிக்க.
10. வேளாண் சமூகத்தின பண்புகளை விவரிக்க.
11. கைத்தொழில் சமூகத்தின் பண்புகளைக் குறிப்பிடுக.

**IV. செயல்பாடுகள்:**

1. நகர வாழ்க்கை மற்றும் கிராம வாழக்கையைப் பற்றி ஆசிரியருடன் விவாதித்து, ஒப்பீடு செய்து வேறுபாடுகளைப் பட்டியல் செய்யவும்.
2. சிறந்த சமூகத்தின் கருத்தைப பற்றி குழுக்களில் விவாதிக்கவும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

# பாடம் 26
# நீர்க் கோளம்

H1E8X5

**இந்த அத்தியாயத்தை கற்றபின் கீழ்க்காணும் அலகுகளைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்:**

- *நீர் நிலைகளின் வகைகளைப் புரிந்து கொள்ளுதல்.*
- *கடலடி நிலத்தோற்றகள் குறிந்து அறிந்துகொள்ளுதல்.*
- *பொருங்கடல் நீரோட்டாங்கள், வகைகள் மற்றும் பாதுகாத்தல் குறிந்து அறிதல்.*
- *இந்திய வரைபடத்தில் பெருங்கடல்கள், வளைகுடா, விரிகுடா, ஜலசந்திகளை குறிப்பிடுதல்.*

*நீர் : கடல்சார் வாழ்க்கை மற்றும் கடற்கரை காலநிலையின் மூலம்.*

©KTBS NOT TO BE REPUBLISHED

**நீர்நிலைகளின் பங்கீடு :** பொதுவாக புவியை நீர்சூழ்க்கோளம் அல்லது நீலக்கோளம் என்று அழைப்பார்கள். புவியின் மேற்பரப்பில் **71%** பகுதி, அதாவது **361** மில்லியன் கி.மீ. பகுதி நீரால் சூழப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். உலகின் மிகப்பெரிய நீர்நிலைகள் என்றால் பசிபிக் பெருங்கடல், அண்டார்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல் மற்றும் வடதுருவப் பெருங்கடல்கள் போன்றனவ.

**பெருங்கடல் (Ocean) :** இவை ஆழமான மற்றும் மிகப் பரந்த நீர் நிலைகளாகும். கண்டங்களின் இடையில் பரவியுள்ளன. எ.கா: இந்தியாவின் தெற்கிலுள்ள இந்தியப் பெருங்கடல்.




NOT TO BE REPUBLISHED @KTBS

**கடல் (Sea) :** இவை பெருங்கடல்களின் பகுதிகளாகும். கண்டங்களின் உட்புறமாக பரவியுள்ளன. பரப்பளவில் கடல்கள் பெருங்கடல்களைவிடச் சிறியது ஆகும். எ.கா: அரபிக் கடல், காஸ்பியன் கடல், செங்கடல்.

**வளைகுடா (Gulf):** இது பெருங்கடல் அல்லது கடல்களின் சிறிய நீண்டபகுதி நிலப்பகுதியின் உட்பகுதியில் ஊடுருவுகிறது. இவை கடல்களை விட சிறியது, அளவு மற்றும் ஆழத்தில் வேறுபாடு உள்ளன. எ.கா: மன்னார் வளைகுடா, பர்ஷியன் வளைகுடா மெக்ஸிகோ வளைகுடா.

**விரிகுடா (Bay) :** விரிகுடா பகுதி நிலபரப்பால் சூழப்பட்டுள்ள சிறிய அரைவட்ட நீர்நிலையாகும். ஒரு விரிகுடாவிற்கும் மற்றொரு விரிகுடாவிற்கும் ஆழம், பரப்பளவு மற்றும் அளவில் வேறுபாடுகளிருக்கின்றன. எ.கா: வங்காள விரிகுடா, பிஸ்கெ விரிகுடா. ஃபண்டி விரிகுடா. ஹட்சன் விரிகுடா.

**ஜலசந்தி (நீர்சந்தி) (Strait) :** இரண்டு பெரிய கடல்களை இணைக்கும் குறுகிய நீர் வழியை (ஜலசந்தி) நீர்சந்தி என்றழைப்பர். எ.கா: பாக்நீர்சந்தி, ஜப்ரால்டர் நீர்சந்தி.

**நிலச்ந்தி (Isthmus) :** குறுகலான ஒரு நிலப்பகுதி இரண்டு மிகப் பெரிய நிலப்பகுதிகளை இணைப்பது நிலசந்தி எனப்படும். இது நீர்சந்தியின் விளக்கத்திற்கு நேர்மாறனது ஆகும். நீலசந்திகள் பெருங்கடல் கால்வாய்களை உருவாக்கும் மிகமுக்கியமான இடங்களாகும். எ.கா: ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா கண்டங்களை நடுவில் உள்ள சூயஸ் கால்வாய், தென் மற்றும் வட அமெரிக்கா கண்டங்களுக்கு இடையில் பனாமா கால்வாய்.

**கடலடி நிலப்பரப்புகள் (Relief of the Ocean Floor) :** கடலுக்கடியில் உள்ள நிலபரப்பில் பல்வேறு வகையான நிலத்தோற்றங்கள் காணப் படுகின்றன. பெருங்கடல்களின் முக்கியத்துவத்தை அறிய வேண்டுமெனில் பெருங்கடலடி நிலத்தோற்றங்களைப் பற்றி பயில வேண்டும். கடலடி நிலத்தோற்றங்களின் இயல்புகள் அடிப்படையில் கடலடியை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன : கண்டத்திட்டு, கண்டச்சரிவு, ஆழ்கடல் சமவெளி, மற்றும் கடல் அகழிகள்.




கடலடி நிலத்தொற்றங்கள்

©KTBS NOT TO BE REPUBLISHED

**1. கண்டத்திட்டு (Continental Shelt) :** கடற்கரையிலிருந்து கடலை நோக்கி காணப்படும் நீரில் மூழ்கியுள்ள கண்டங்களின் விளிம்பு பகுதிகள் கண்டத்திட்டுகள் எனப்படுகின்றன. ஒருபுறம் கடற்கரையையும் மறுபுறம் கண்டச்சரிவையும் கொண்டுள்ளன. கண்டத்திட்டுக்களின் சராசரி ஆழம் 100 ஃபாதம்கள் (1 ஃபாதம் = 6 அடி). இப்பகுதியில் கடலின் ஆழம் படிப்படியாக கடலை நோக்கி அதிகரிக்கிறது. மீன்பிடித்தல், நீர் உயிரின வளர்ப்பு, கடற்பயணம் மற்றும் கனிமங்களைப் பிரித்தெடுத்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

**2. கண்டச்சரிவு (Continental Slope):** இது பெருங்கடலின் இரண்டாவது தளமாகும். இது மிகவும் செங்குத்தானது. இது கண்டத்திட்டையும் ஆழ்கடல் சமவெளிப் பகுதியையும் இணைக்கிறது. இங்கு பெருங்கடல் பள்ளத்தாக்குகள் (Submarine Canyons)காணப்படுகின்றன.

**3. ஆழ்கடல் சமவெளி (Deep Sea Plain) :** கடலடி நிலப்பரப்பில் இப்பகுதிதான் மிகவும் பரந்து காணப்படுகிறது. இதனை ஆழ்கடல் சமவெளி அல்லது ''கடலடிச் சமவெளி'' என்று அழைப்பார்கள். இப்பகுதியில் ஆழ்கடல் மட்டக் குன்றுகள் (Sea mounts) மற்றும் கடல் குன்றுகள் காணப்படுகின்றன.

**4. பெருங்கடல் ஆழம் மற்றும் அகழியினே் பெருங்கடல் பள்ளம் (Ocean Deeps and Trenches)** கடலின் ஆழமான பகுதிகளை அகழிகள் என்பார்கள். இது கடலின் மிகவும் ஆழமான கடலடி பகுதியாகும். பசிபிக் சமுத்திரத்தில் ஃபிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு அருகிலுள்ள மரியானா அகழியில் காணப்படும் ''சேலஞ்சர் பள்ளம்'' (11.033மீ) தான் உலகிலேயே ஆழமான கடல் பகுதியாகும். பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள டோங்கா அகழி, குரில் அகழி முதலியவை கடல் அகழிகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**பெருங்கடலின் வெப்பநிலை மற்றும் கடல்நீரின் உவர்ப்பியம் : (Temperature and Salinity of Ocean Water)**

**வெப்பநிலை :** கடல் அல்லது பெருங்கடல்களின் வெப்பநிலை, அட்சக் கோடு மற்றும் ஆழங்களில் வேறுபடுகின்றன

© KTBS NOT TO BE REPUBLISHED

நிலநடுக்கோட்டுப் பகுதிக்கு அருகிலுள்ள கடல் நீரின் வெப்பநிலை ஆர்க்டிக் மற்றும் அண்டார்டிக் வட்டங்களிலுள்ள கடல் நீரை விட அதிகமாக உள்ளது. இதேபோன்று கடல்நீரின் ஆழமான பகுதிகளில் வெப்பநிலை குறைவாக உள்ளது. இதற்குக் காரணம் சூரியனின் கதிர்கள் நீரில் 200 மீட்டர் ஆழம் வரையில் தான் ஊடுருவிச் செல்கின்றன. இப்பகுதியில் பலவகையான கடல்வாழ் உயிரினங்கள் காணப்படுகின்றன.

**உவர்ப்பியம் :** பெருங்கடல் அல்லது கடல்நீரில் கரைந்துள்ள உப்பின் வீதம் 'உவர்ப்பியம்' எனப்படுகிறது. கடல் நீரில் உப்புக்கள் அதிகளவில் கரைந்துள்ளதால் கடல்நீர் உவர்ப்பாக உள்ளது. பெருங்கடலின் உவர்ப்பியம் 35/1000gms (இதாவது 1000 கிராம் கடல் நீரில் 35 கிராம் உப்பு என்று பொருள்). கடல் நீர் ஆவியாகி, அதிலுள்ள உப்புகள் அங்கேயே தங்கிவிடுவதால் கடல் நீர் உவர்ப்பாக உள்ளது. வெப்பமண்டலப் பகுதியில் உவர்ப்பியம் அதிகமாகவும், துருவப் பகுதிகளில் குறைவாகவும் உள்ளது. நிலநடுக்கோட்டுப் பகுதியில் அதிக நீராவியாதல், அதிக வெப்பம் மற்றும் அதிக மழைப்பொழிவினால் உவர்ப்பியம் சராசரு வீதத்தில் உள்ளது.

NOT TO BE REPUBLISHED @KTBS

**கடல்நீர் ஏன் உவர்ப்பாக உள்ளது ?**

நிலப்பகுதியிலிருந்து பாய்ந்து வரும் ஆறுகள் பல்வேறு வகையான உப்புக்களை நீரில் கரைத்து எடுத்து வந்து கடல் நீரில் படியவைக்கின்றன. பெங்கடல் மற்றும் கடல்நீர் வெப்பத்தால் ஆவியாகி வளிமண்டலத்தை அடைகிறது. ஆனால் நீரிலுள்ள உப்புகள் கடலிலேயே தங்கி விடுகிறது. இச்செயல் நீண்ட காலமாக தொடர்ந்து நடைபெறுவதால் கடல்களில் உப்புகள் சேர்ந்து உவர்ப்பாக உள்ளது.

உலகின் மிக அதிக உவர்ப்பியத்தைப் பெற்றுள்ள சில நீர்ப்பகுதிகள்:

1. சில நீர்ப்பகுதிகள் வான் ஏரி (துருக்கி ) - $330/^{000}$ ppt
2. சாக்கடல் (ஆசியா) - $300/^{000}$ ppt
3. சாம்பார் ஏரி (இந்தியா) - $265/^{000}$ ppt
4. செங்கடல் (ஆசியா மற்றும் ஆப்ரிக்கா) - $240/^{000}$ ppt

(எடுத்துக்காட்டு $330/^{000}$ ppt ppt - Parts Per Thousand)

**கடல் நீரோட்டங்கள் (Ocean Currents) :** பெருங்கடல் நீர் மூன்று முக்கிய ஓட்டங்களைக் கொண்டுள்ளன. அவையான : அலைகள், நீரோட்டங்கள் மற்றும் ஓதங்கள். கடல் நீரோட்டங்களில் இரண்டு வகைகள் உள்ளன.

**வெப்பநீரோட்டங்கள்:** இவை நிலநடுக்கோட்டுப் பகுதியிலிருந்து தொடங்கி துணை துருவப் பகுதிகளை நோக்கிப் பாய்கின்றன.

**குளிர் நீரோட்டங்கள் :** இவை துருவப் பகுதிகளில் தொடங்கி நிலநடுக்கோட்டுப் பகுதியை நோக்கிப் பாய்கின்றன.

பூமியின் அன்றாட சுழற்சி, வெப்பநிலை, காற்றுகள், உவர்ப்பியம், நிலப்பகுதிகளின் வடிவம் போன்றவை கடல் நீரோட்டத் திற்கான காரணிகள் ஆகும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

**பசிபிக் பெருங்கடல் நீரோட்டங்கள்**

**வட பசிபிக் பெருங்கடல் நீரோட்டங்கள்**

| வெப்ப கடல் நிரோட்டங்கள் | குளிர் கடல்நிரோட்டங்கள் |
| --- | --- |
| வடநில நடுக்கோட்டு நீரோட்டம் | ஓயாஷியோ நீரோட்டம் |
| குரோஷியோ நீரோட்டம் | கலிபோர்னியா நீரோட்டம் |

**தென் பசிபிக் பெருங்கடல் நீரோட்டங்கள்**

| **வெப்ப கடல் நீரோட்டங்கள்** | **குளிர் கடல் நீரோட்டங்கள்** |
|---|---|
| தென் நில நடுக்கோட்டு வட்ட நீரோட்டம் | பெரு ஹம்போல்ட் நீரோட்டம் |
| கிழக்கு ஆஸ்திரேலியன் நீரோட்டேம் | மேற்கு காற்று நீரோட்டம் |

**அட்லாண்டிக் பெருங்கடல் நீரோட்டங்கள்**

**வடஅட்லாண்டிக்பெருங்கடல்நீரோட்டங்கள்**

| வெப்ப நீரோட்டங்கள் | குளிர் நீரோட்டங்கள் |
|---|---|
| வடநில நடுக்கோட்டு நீரோட்டம் | லாப்ரடார் நீரோட்டம் |
| கல்ஃப் ஸ்டீரிம் நீரோட்டம், வட அட்லாண்டிக் நீரோட்டம் | நார்வேஜியன் நீரோட்டம் |
| | கியானரி நீரோட்டம் |

**தென்அட்லாண்டிக்பெருங்கடல்நீரோட்டங்கள்**

| வெப்ப நீரோட்டங்கள் | குளிர் நீரோட்டங்கள் |
|---|---|
| தென் நிலநடுக்கோட்டு நீரோட்டம் | பாக்லாந்து நீரோட்டம் |
| ப்ரெஜிலியன் நீரோட்டம் | பெங்குலா நீரோட்டம் |

@KTBS NOT TO BE REPUBLISHED

**இந்தியப் பெருங்கடல் நீரோட்டங்கள்:** வட இந்தியப் பெருங்கடல் நீரோட்டங்கள் பருவங்களுக்கேற்ப திசையை மாற்றுகின்றன. இம்மாற்றங்கள் பருவக்காற்றுகளின் அடிப்படையில் உள்ளன. கோடையில் தென் மேற்கிலிருந்து வட கிழக்குத்திசையை நோக்கியும், வடகிழக்கு பருவக்காற்று குளிர்காலத்தில் வடகிழக்கிலிருந்து தென் மேற்கு திசையை நோக்கிப் பாய்கின்றன.

**தென் இந்தியப் பெருங்கடலின் முக்கிய நீரோட்டங்கள் :** மொஸாம்பிக், மதககாஸ்கர், அகுலாஸ் - இவைவெப்ப நீரோட்டங்கள். மேற்கு ஆஸ்திரேலியன் குளிர் நீரோட்டம்.




உலகின் முக்கிய நீரோட்டங்கள்

**நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்**

முக்கிய மீன்பிடித்தளங்கள்:

1. ஹொன்ஷூ கொக்கைடோ மீன்பிடித்தளங்கள் : குரோஷிவோ வெப்ப நீரோட்டம் மற்றும் ஒயோஷியோ குளிர் நீரோட்டம் இணையும் பகுதி (ஜப்பான்)

2. கிராண்ட் பாங்க் : கல்ப் ஸ்டீரிம் வெப்ப நீரோட்ட்ம் மற்றும் லாப்ராடார் குளிர் நீரோட்டங்கள் இணையும் பகுதி. (நியூ பவுண்ட் -லாண்ட் USA)

3. டாகர் பாங்க் - வட கடல் பகுதி (ஐரோப்பா)

@KTBS NOT TO BE REPUBLISHED

**பேரலைகள் :** கடல் நீர்மட்டமானது குறிப்பிட்ட கால இடைவெளியில் உயர்ந்தும் தாழ்வதை ‘பேரலைகள்’ என்று அழைக்கிறோம். போலைகளுக்கு முக்கிய காரணங்களாவன : சந்திரனின் ஈர்ப்பு விசை, சூரியனின் ஈர்ப்பு விசை, அன்றாட புவி சுழற்சி மற்றும் புவியின் மையவிலகு விசை.

**பேரலைகள்வகைகள்:** ஓதங்கள் இரண்டு வகை அவையாவன: (அ) உயரமான ஓதங்கள். கடல் நீர் ஒரு முறை மேலெழும்புவதால் உயர்லை உண்டாகிறது. இதனை உயர்பேரலை ஓதம் அல்லது வெள்ளப் பெருக்கு பேரலை என்றழைப்பார்கள்.

**கீழ் பேரலை (Low Tide):** ஒரு முறை உயர்ந்த அளவே நீர் மட்டமானது கடலை நோக்கி சரிவதை கீழ் பேரலை (Ebtide) என்றழைப்பார்கள். கடல்களிலும் பெருங்கடல்களிலும் உயர் மற்றும் கீழ் பேரலை உண்டாகின்றன. ஒரு உயர் பேரலைக்கும் ஒரு கீழ் பேரலைக்கும் இடையே உள்ள கால இடைவெளி 6 மணி 13 நிமிடங்கள் ஆகும். இரண்டு தொடர் உயர் பேரலை இடையே உள்ள கால இடைவெளி 12 மணி 26 நிமிடங்கள் ஆகும். 24 மணி 52 நிமிட கால இடைவெளியில் 2 கீழ் மற்றும் 2 மேல் பேரலை உண்டாகின்றன.

சூரியன் மற்றும் சந்திரன் இருக்கும் இடங்களடிப்படையில் அலைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம், அவையாவன.

**உயர் மட்ட அல்லது உயர் பேரலை (Spring Tide) :** புவி, சூரியன் (இளவேனில் ஓதம்) மற்றும் சந்திரன் மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வரும் அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களன்று உயர் பேரலை ஏற்படுகின்றன. இப்பேரலை உண்டாகும்போது சூரியன் மற்றும் சந்திரன் இவையிரண்டின் மொத்த விசையினால் உயர் பேரலை அதிக உயரத்திலும் கீழ் போரலை மிகத் தாழ்விலும் இருக்கின்றன.

**தாழ்மட்ட பேரலை (Neap Tide) :** வளர் பிறை மற்றும் அரை பிறை நாட்களில் தாழ்மட்ட பேரலை ஏற்படுகின்றன. தாழ்மட்ட பேரலை, சூரியனும் புவியும் ஒரே நேர்கோட்டில் வரும் போது உண்டாகிறது மற்றும் சந்திரன் புவிக்குச் செங்குத்தாக இருக்கும். இவ்வகையான பேரலைகளில், உயர் பேரலைகள் அதிகமாகவும் மற்றும் தாழ் பேரலை குறைவாகவும் இருக்காது.




மிக அதிக மற்றும் மிகக் குறைந்த பேரலைகள்

©KTBS NOT TO BE REPUBLISHED

**பயன்கள் :** பேரலை மனிதனுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன் படுகின்றன. அவையாவன : (1) கடற் பயணத்திற்குத் துணைபுரிகின்றன. (2) துறைமுகம் மற்றும் கப்பல் நிறுத்தப்படும் இடங்களை அமைக்க துணை புரிகின்றன. (3) துறை முகங்களின் கரைகளை பேரலை வரும் நீர் தூய்மைப்படுத்துகிறது. (4) உப்பு உற்பத்தி செய்ய துணைபுரிகின்ற மற்றும் மீன் பிடித்தலுக்கும் துணை புரிகின்றன. (5) பேரலை ஆற்றல் மின் உற்பத்தி செய்யப் பயன் படுகிறது.

**பெருங்கடல்களின் பாதுகாப்பு :** சமீபகாலங்களில் பெருங்கடல்களின் பாதுகாப்பு மிக முக்கியமானதாகும். பெருங்கடல்கள் மனிதர்களுக்கு பல்வேறு வகைகளில் துணை புரிவதோடு, அவற்றில் எண்ணற்ற கடல் வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன. பெருங்கடல்களும் மாச டைதலுக்கு உட்பட்டுள்ளன. எனவே, பெருங்கடல்களைப் பாதுகாப்பது மிக அவசியமாகும். பெருங்கடல்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய முறைகள் பின்வருமாறு :

1. எண்ணெய்களை கப்பல்களில் ஏற்றிச் செல்வதற்குப் பதிலாக குழாய்கள் மூலம் அனுப்பலாம்.
2. அணுக்கழிவுகளை பெருங்கடல்களில் ஏறிவதைத் தடுக்க வேண்டும்.
3. கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள எண்ணெய் இரசாயன தொழிற்சாலைகளிலிருந்து கழிவு நீர் கடல் நீரில் கலப்பதைத் தடுக்க தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
4. எந்தவொரு கழிவுப்பொருட்களையும் துறை முகங்களிலோ கப்பல் நிறுத்தப்பட்டிருக்கும் பகுதிகளிலோ எறிவதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

5. கடலோரப் பகுதிகளில் தாதுப்பொருட்களைப் படிய வைத்தல் மற்றும் சுரங்கத் தொழில்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.

6. கடற்கரையிலுள்ள மணல் சுரண்டுதலை கட்டுப்படுத்தி மணலைப் பாதுகாக்க வேண்டும்.

## பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களில் ஏற்ற சொற்களால் நிரப்புக:**

1. கண்டத் திட்டுக்களின் சராசரி ஆழம் ____________ ஆகும்.
2. ஒரு ஃபாதாம் ____________ அடிகளுக்குச் சமம் ஆகும்.
3. உலகின் மிக அதிக ஆழமான பகுதி ____________ ஆகும்.
4. பெருங்கடல்களின் சராசரி உவர்ப்பிய வீதம் ____________
5. அமாவாசை அல்லது பௌர்ணமி நாளில் உண் டாகும் பேரலை ____________

@KTBS NOT TO BE REPUBLISHED

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

6. நீர்க்கோளம் என்றால் என்ன?
7. பெருங்கடலடியிலுள்ள நிலத்தோற்றங்களின் நான்கு பகுதிகளைக் குறிப்பிடுக.
8. பெருங்கடல் நீரோட்டங்களுக்கும் ஓதங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
9. உயர்மட்ட பேரலை மற்றும் தாழ் மட்ட பேரலைகளை வேறுபடுத்துக.
10. பெருங்கடல்களை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?

**III. பொருத்தி வரைக :**

| | |
|---|---|
| i) ஃபாதம் | (அ) ஆழ்கடல் சமவெளி |
| ii) ஓயோஷயோ | (ஆ) அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரை (USA) |
| iii) கல்ப் ஸ்டிரியோ | (இ) குளிர் நீரோட்டம் |
| iv) கடல் மலைக்குன்றுகள் | (ஈ) இந்தியப் பெருங்கடல் நீரோட்டம் |
| v) அகுலாஸ் நீரோட்டம் | (உ) பெருங்கடலின் ஆழம் அளவீடு |

**IV. கீழ்க்காண்பவற்றை வரையறுக்க:**

11. கண்டச்சரிவு
12. உவர்ப்பியம்
13. வெப்ப மற்றும் குளிர் நீரோட்டங்கள்
14. உயர் மற்றும் கீழ் ஓதங்கள்
15. பெங்குலா நீரோட்டம்
16. ஓதங்கள்

**V. நினைவில் கொள்ள வேண்டியவை:**

1. வளைகுடா (கல்ஃப்)
2. உவர்ப்பியம்
3. வெப்ப நீரோட்டங்கள்
4. குரோஷியோ நீரோட்டம்
5. வெள்ளப் பெருக்கு பேரலை
6. பேரலை ஆற்றல்.

**VI. செயல்பாடு :**

1. அட்லாண்டிக் பெருங்கடலின் வெப்ப மற்றும் குளிர் நீரோட்டங்களைப் பட்டியலிடவும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

| பாடம் 27 | உயிர்கோளம் (BIOSPHERE) |
|---|---|

D7G7Q6

**இந்த அத்தியாயத்தைக் கற்றபின் நீங்கள் கீழ்க்காணும் அலகுகளைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்.**

- *உயிர்ச்சூழல் சமநிலை மற்றும் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்ளுதல்.*
- *சூழ்நிலை, சூழ்நிலை மாசடைதலின் வகைகள், விளைவுகள் மற்றும சூழ்நிலை மாசடைதலைக் கட்டுப் படுத்தும் முறைகள் பற்றி விவரித்தல்.*

புவி நமக்கு என்ன அளித்துள்ளது? அதற்கு பதிலாக நாம் என்ன கொடுக்கிறோம்? என்பதைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

@TBS NOT TO BE REPUBLISHED

**பொருள் :** பல்வேறு உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற ஒரே கோளம் நமது புவி ஆகும். உயிர்கோளம் பூமியின் நான்காவது பிரிவு மற்றும் பூமியின் அனைத்து வகையான உயிரினங்களையும் உட் கொண்டுள்ள பகுதியாகும்.

**சூழலியல் (Ecology):** உயிரினங்கள் மற்றும் பௌதீக, வேதியியல் மற்றும் உயிர் சூழல்களின் தொடர்பை விளக்கும் அறிவியலே சூழலியல் எனப்படும். உயிரினங்கள் மற்றும் இயற்கைச் சூழல், பல்வேறு விலங்கினங்கள் நிறைவாகவும் சமச்சீராகவும் காணப்படுகின்றன. இதனை சுற்றுச்சூழல் சமநிலை என்றழைப்பார்கள்.

விலங்கினம் மற்றும் தாவர இனங்கள், சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகளின் தொகுதியை சூழ்நிலை மண்டலம் என்பார்கள். உயிர்ச்சூழலில் அனைத்து உயிரினங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருப்பதைப் பற்றி விளக்குகிறது.

உயிர்கோளத்தில் சூழ்நிலை மண்டலம் அல்லது சூழ்நிலை சமநிலையில்லை எனில், தாவரங்கள் விலங்குகள் மற்றும் நுண்ணியிரிகள் தனியாகவோ சமூகமாகவோ இருப்பைக் கற்பனை செய்தும் பார்க்கமுடியாது. ஒவ்வொரு உயிரினமும் இயற்கையோடு பொருத்தி வாழ்கிறது.

**சுற்றுச்சூழல் (Environment) :** அனைத்து உயிரினங்களும் வாழ்கின்ற சூழலே சுற்றுச் சூழல் எனப்படுகிறது. சூழ்நிலை உயிரனிங்கள் வாழ்வதற்கும் வளர்ச்சியடையவும் வசதியான நிலைமையை உண்டாக்குகிறது. சுற்றுச் சூழல் இரண்டு வகைப்படும். அவையாவன: இயற்கை அல்லது பௌதீகச் சூழல் மற்றும் கலாச்சார அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட சூழல்.

**சுற்றுச்சூழல் மாசடைதல் :** நம்மைச் சுற்றியுள்ள விரும்பத்தகாத மாற்றங்களே ''சுற்றுச்சூழல் மாசடைதல்'' எனப்படுகிறது. இது மனிதர்களையும் மற்றும் அனைத்து உயிரினங்களையும் பாதிப்பிற்கு உள்ளாக்குகிறது. நேரடியாகவும் மறைமுகமாகவும் உயிர் சூழ்நிலை மண்டலக் கூறுகளின் சூழலை மாற்றுகின்றன.

சுற்றுச்சூழல் மாசடைதலால் சூழ்நிலை மண்டலம் பெரும் சிக்கலுக்கு உட்படுகிறது. இதற்குக் காரணமானவை, மக்கள் தொகைப் பெருக்கம், தொழிற்சாலைமயமாதல், நகரமயமாக்குதல், வளங்களைச் சுரண்டுதல், வாகனங்களை அதிக எண்ணிக்கையில் பயன்படுத்துதல் போன்றவை.

இவை தாவர விலங்கு மற்றும் மனித இனங்களின் வாழக்கை முறையில் உண்டாகும் மாற்றங்களில் பாதிப்பு ஏற்படுத்துகின்றன.

மாசடைதலை உண்டாக்கும் பொருட்களை மாசுப்பொருட்கள் என்பார்கள். அவை இயற்க்கையான

NOT TO BE REPUBLISHED ©KTBS

மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட மாசுப் பொருட்கள் என இரு வகைகள் உள்ளன. இயற்கை மாசுப்பொருட்களை விட மனிதனால் உருவாக்கப்பட்ட மாசுப்பொருட்கள் மிக்க அபாய கரமானது மற்றும் கேடு விளைவிக்கக் கூடியதாகும். புகை, விஷ வாயு, தாது, கழிவுநீர், கழிவுப்பொருட்கள் போன்றவை கண்ணுக்குப் புலப்படும் மாசுப்பொருட்களாகும். நீரில் கலந்துள்ள நஞ்சு வேதியியல் பொருட்கள் மற்றும் நுண்ணியிரிகள் கண்ணுக்குப் புலப்படாதவை ஆகும்.

மாசடைதலின் வகைகள் : மாசுப்பொருட்கள் மற்றும் மாசடைதலின் வடிவங்களின் அடிப்படையில் மாசடைதலை காற்று மாசடைதல், நீர் மாசடைதல் மற்றும் மண் மாசடைதல், ஒலிமாசடைதல் என வகைப்படுத்தலாம்.

***1. காற்று மாசடைதல் :*** உலக சுகாதார நிறுவனம் (WHO-World Health Organisation) வின்படி காற்று மாசடைதல் இவ்வாறு வரையறுக்கிறது ''மனிதனின் பல்வேறு செயல்பாடுகளால் அடர்த்தியான பொருட்கள் காற்றில் கலந்து மனிதனின் உடல்நலம், தாவரங்கள் மற்றும் சொத்துக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி கேடு விளைவிப்பதே காற்று மாசடைதல் ஆகும்'' காற்று மாசுப் பொருட்களின் முக்கிய மூலங்கள் : (அ) இயற்கை மூலங்கள் எரிமலைகள், காட்டுத்தீ, வான்வெளியின் தூசுகள் போன்றவை. (ஆ) மனிதனால் உருவாக்கப்பட்ட மூலங்கள் : தொழிற்சாலைகள், வீட்டுப் பயன் பாட்டுப் பொருட்கள், வாகனங்கள், சுரங்கத்தொழில், அணு ஆற்றல் நிலையங்கள், அணு வெடிப்பு போன்றவற்றின் மூலம் பரவும் வாயுக்கள்.

***மிகமுக்கியமான மாசுப்பொருட்கள் :*** கார்பன் டை ஆக்சைடு. கார்பன் மோனாக்சைடு, கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்சைடு, குளோரோ ஃபுளோரோ கார்பன்கள் (CFC) ஹைட்ரோகார்பன் போன்றவற்றால் உண்டாகும் காற்று.

© KTBS NOT TO BE REPUBLISHED

**மாசடைதலால் உண்டாகும் முக்கிய விளைவுகளாவன:** வானிலை மற்றும் காலநிலை மாற்றம், ஓசோன் குறைதல், பசுமைக் குடில் விளைவு, புவிவெப்பமாதல் மனிதனின் உடல் நலம் பாதிப்படைதல், சுவாச மண்டல பாதிப்புகள், தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வாழ்க்கையில் ஏற்படும் பாதிப்பு போன்றவை.

**காற்று மாசு படுதலைக் கட்டுப் படுத்தும் முறைகளாவன:** மாசுப்பொருளான வாயுக்களைக் கட்டுப் படுத்துதல், வாகனப் புகையைக் கட்டுப்படுத்துதல், அதிக மரங்களை வளர்த்தல், மரபு சாரா ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்துதல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சட்டபூர்வமாக கட்டுப்படுத்துதல் எழுத்தறிவு மற்றும் கல்வி போன்றவை.

**2. நீர் மாசடைதல் :** மனிதன் மற்றும் நீர்வாழ் உயிரினங்களின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் நீரின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகளின் மாற்றமே நீர் மாசடைதல் எனப்படுகிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

**நீர் மாசடைதலின் முக்கிய மூலங்கள் :** இயற்கை மூலங்கள் மண் அரிப்பு, நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு, தாவரம் மற்றும் விலங்குகளின் மட்கு மற்றும் சிதைவு போன்றவை.

**மனிதனால் உருவாக்கப்பட்ட மூலங்கள் :** தொழிற்சாலைகளின் கழிவுகள், நகரங்களின் கழிவுகள், வேளாண் கழிவுகள், எண்ணெய்க்கசிவு, அணுக்கழிவுகள், கரைப்படுத்திகளைத் துளையிடுதல் வெப்பமின் நிலையங்களின் கழிவுகள் போன்றவை நீர் மாசடையச் செய்கின்றன. நீர் மாசடைதலின் பல்வேறு வகைகள்: கடல் மற்றும் பெருங்கடல்கள் மாசடைதல், நிலத்தடி நீர் மாசடைதல், ஆற்றுநீர் மாசடைதல், ஏரிமாசடைதல் போன்றவை.

**நீர் மாசடைதலின் விளைவுகள் :** மாசடைந்த நீரின் மூலம் பரவும் நோய்கள், தொற்று நோய்களான காலரா, டைஃபாய்டு, வயிற்றுப்போக்கு, மஞ்சக்காமாலை, போன்றவை ஆகும்

மாசடைந்த நீர் நீர்வாழ் உயிரினங்களின் இறப்பிற்குக் காரணமாகின்றன. மாசடைந்த நீரை (நீர்ப்பாசன முறையாக) வேளாண் பயிர்களுக்குப் பயன்படுத்தினால் பயிர்கள் நாசமடைகின்றன.

**நீர்மாசடைதலைக் கட்டுப்படுத்தும் முறைகள் :** தொழிற்சாலைக் கழிவுகளை அகற்றுதல், நீரின் மூலங்களை தூய்மையாக வைத்தல், கழிவு நீர் பதப்படுத்தும் நிலையங்களமைத்தல், மக்கள் நீர் நிலைகளில் கழிவுகளை எறிவதைக் கட்டுப்படுத்துதல் போன்றவை.

**3. மண் மாசடைதல் :** இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப் பட்ட மூலங்களால் மண்ணின் செழுமை, தரநிலை குறைவதை மண் மாசடைதல் என்று அழைப்பார்கள். இதன் விளைவாக மண் அரிப்பு அதிகரித்தல், தாவரங்களில் ஊட்டச்சத்து குறைதல். மண்ணில் உள்ள மிக நுண்ணிய உயிரிகள் குறைந்து கொண்டு வருதல் போன்றவை. மண் மாசடைதலின் மூலங்கள், தொழிற் சாலை மற்றும் சுரங்கக் கழிவு, வீடு மற்றும் நகரக் கழிவு வேளாண் கழிவு, அணுக்கழிவு போன்றவை ஆகும்.

**மண் மாசடைதலின் விளைவுகள் :** மண்வளம் குறைவதால் செழிப்பான நிலம் வறண்ட நிலமாக மாறுகிறது. மண்ணிலுள்ள நுண்ணியிரிகள் அழிந்து போகின்றன.

**மண் மாசடைதலைக் கட்டுப்படுத்தும் முறைகள்:** வேதியியல் உரங்கள், பூச்சிக்கொல்லிகள், களைக் கொல்லிகள் ஆகிய வற்றைக் கவனமாகவும் கட்டுப்பாட்டுடனும் பயன்படுத்துதல் வேண்டும். தொழிற்சாலை மற்றும் நகரக் கழிவுகளை தகுந்த முறையில் அகற்றுதல், தக்க முறையில் நிலத்தை பயன்படுத்துல் மற்றும் சரியான பயிரிடும் முறைகளைப் பின்பற்றுதல், மண் அரிப்பைக் கட்டுப் படுத்துதல், செடிகொடிகளை வளர்த்தல், மண்ணை தகுந்த முறையில் பயன்படுத்துதல் மற்றும் மண்ணை வளப்படுத்தும் முறையைப் பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

**4. ஒலி மாசடைதல் :** விரும்பத்தகாத விளைவை ஏற்படுத்தும் தேவையற்ற ஒலி வளிமண்டலத்தில் பரவி உடல்நலக்கேடு விளைவிப்பதை ஒலி மாசடைதல் என்றழைப்பார்கள்.

**ஒலிமாசடைதலின் மூலங்கள் : இயற்கை மூலங்கள் -** இடி, சூறாவளிகள், ஆலங்கட்டி மழை, நீர் வீழ்ச்சிகள், கடல் நீரோட்டங்கள் முதலியன.

**மனிதனால் உருவாக்கப்பட்ட மூலங்கள் :** தொழிற்சாலைகளின் இரைச்சல், வாகனங்களின் இரைச்சல், சுரங்கத் தொழில், நகர்புற இரைச்சல் போன்றவை.

**ஒலிமாசடைதலின் விளைவுகள் :** தற்காலிகமாகவோ நிலையாகவோ காது கேளாமை. தலைவலி, தளர்ச்சி, இருதயத் தொடர்பான நோய்கள் உளவியல் ஒழுங்கின்மை, உடல் மாற்றம், ஒரு முகத்தன்மையின்மை முதலியன.

**ஒலிமாசடைதலைக் கட்டுப்படுத்தும் முறைகள் :** வசிப்படங் களிலிருந்து தொலைவில் தொழிலகங்களை அமைத்தல், தொழிற் கூடங்களில் ஒலித்தடை சுவர்களை கட்டுவது. சங்கொலிகள், வாகன ஒலி, ஒலிபெருக்கிகள் மற்றும் அதிக இரைச்சலை ஏற்படுத்தும் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்துதல், விமானநிலையங்களை மக்களின் வசிப்பிடங்களிலிருந்து தொலைவில் அமைத்தல். தொழிற் சாலையின் தொழிலாளர்களுக்கு ஒலி பாதுகாப்பு / கட்டுப் பாட்டுக் கருவிகளை வழங்குதல். ஒலி எழுப்பும் வாகனங்களைப் பரிசோதிக்கும் முறைகளை மேற்கொள்ளுதல்.

**உலக வெப்பமயமாதல் (Global Warming) :** புவியில் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. சமீப ஆண்டுகளில் வளி மண்டலத்தின் வெப்ப நிலையும் சிறிதளவு அதிகரித்துள்ளது. இதனை உலக வெப்பநிலை அதிகரிப்பு அல்லது ‘உலக வெப்பமயமாதல்’ என்று அழைப்பார்கள். இதற்குக் காரணம் பசுமைக் குடில் விளைவு ஆகும். இதனால் வளிமண்டப் பகுதிகளில் மாற்றம், பனியாறுகள் உருகுதல் மற்றும் கடல்

NOT TO BE REPUBLISHED @KTBS

நீர்மட்டம் அதிகரித்தல் போன்றவை. எடுத்துக்காட்டாக இமயமலை மற்றும் அண்டார்டிகா பகுதிகளில் பனித்திரள்கள் உருகிக் கொண்டிருக்கின்றன.

**பசுமைக் குடில் விளைவு (Green House Effect) :** புவியின் மேற்பரப்பு சூரியனிடமிருந்து ஆற்றலை கதிர்வீச்சு மூலம் பெறுகிறது. இவ்வாறு பெற்ற பெருமளவு ஆற்றலை புவி பிரதிபலிக்கிறது. இந்நிகழ்வினால் புவியின் வெப்பநிலை சமநிலையில் உள்ளது. சமிபகாலமாக புதைபடிவ எரிபொருட்களின் பயன்பட்டால் பசுமைக் குடில் வாயுக்கள் வெளியேறுவதாலும் வெப்பம் அதிகரித்து வருகிறது. கார்பன் டை ஆக்சைடு மற்றும் பிற பசுமைக் குடில் வாயுக்கள் புவியில் வெளியேறும்போது வெப்பத்தை வெளியேற்றாமல் ஈர்த்துக் கொள்வதால் வளிமண்டலத்தில் வெப்பநிலை அதிகரிக்கிறது இதனை ''பசுமைக் குடில் விளைவு'' என்று அழைக்கிறார்கள்.

**ஓசோன் அடுக்கு குறைதல் (Ozone Depletion) :** வளி மண்டலத்தின் மிதவெப்பப் பகுதியில் மெல்லிய ஓசோன் அடுக்கு உள்ளது. இது சூரியனின் புறஊதாக் கதிர்களை (UV) உறிஞ்சிக் கொண்டு புவியின் மீதுள்ள அனைத்து உயிரினங்களையும் பாதுகாக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக காற்றுப் பதனிகள் (AC), குளிர் சாதனப்பெட்டிகள், தெளிப்பான்கள் வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மிகுதியான பயன்பாட்டால் குளோரோ ஃபளோரோ கார்கள் (CFC) அதிகளவில் வெளியேறி வளி மண்டலத்தின் ஓசோன் அடுக்கை மெல்லியதாக்கியுள்ளன. தற்பொழுது அண்டார்க்டிகா வளி மண்டலத்தில் ஓசோன் அடுக்கு மெலிந்திருப்பது கண்டுபிடிக்கப்படுள்ளது. இதே முறையில் ஓசோன் மெல்லியதாகி ஓசோன் துளைகளை ஏற்படுத்தியுள்ளது. தற்கால மக்களுக்காகவும் வருங்கால தலைமுறையினருக்காகவும் இதனைக் கட்டுப்படுத்த வேண்டும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

**அமில மழை (Acid Rain):** மழை நீரில் கந்தக அமிலமும் கார்பன் மோனாக்சைடு போன்ற அமிலங்கள் அதிகமாக கரைந்து இருப்பதை 'அமில மழை' என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய மழை நச்சுத் தன்மையுடையது. மேலும் நீர்வாழ் உயிரினங்களின் அழிவிற்குக் காரணமாகிறது. அமில மழையினால் காடுகள், வேளாண்மை பயிர்கள், கட்டங்கள், நினைவுச் சின்னங்கள் போன்றவை நாசமடைகின்றன.



புவியைப் பாதுகாப்போம் தாய்க் கோளைக் காப்பாற்றுவோம்.

அமில மழை 'லேக் கில்லர்' என்றும் குறிப்பிடப்படுகிறது. போலந்து, ஸெக் மக்களாட்சி மற்றும் தென்மேற்கு ஜெர்மனி போன்ற பகுதிகள் அதிகளவு அமில மழைக்கு உட்படுவதால், அப்பகுதிகளை ''கருப்பு முக்கோணம்'' என்று அழைக்கிறார்கள்.

© KTBS NOT TO BE REPUBLISHED

**உயிரினப்பன்மை (Bio-Diversity) :** பல்வேறு வகையான தாவரங்கள் மற்றும் விலங்குகள் வாழும் குறிப்பிட்ட வாழ்விடத்தை 'உயிரினப்பன்மை' என்கிறோம். உயிரினங்களின் எண்ணிக்கை உயிரினப் பன்மைமையை குறிக்கிறது. உயிரினப் பன்மை மிக முக்கியமானது. ஏனெனில், இது சுற்றுச் சூழலின் தரநிலையைப் பாதுகாப்பதுடன் மனிதனின் உய்த்தலுக்கும் தேவைப்படுகிறது.

அரிதான தாவர மற்றும் விலங்கினங்களைப் பாதுகாப்பதற்கு உயிரினப் பன்மையைப் பாதுகாக்க வேண்டும். உயிரினங்களுக்குத் தேவையான நல்ல சூழ்நிலையை வழங்குதல் அவற்றின் பாதுகாப்பிற்கான முக்கிய முறையாகும்.

சூரிய குடும்பத்தில் உயிர்களைக் கொண்ட ஒரே கோளம் பூமிதான் மனிதனின் வெவ்வேறு செயல்பாடுகளால் பூமியின் மீது பலவகையான மாற்றங்கள், இன்னல்கள், கேடுகள் காணப்படுவது புவியின் அழிவிற்கு வழி வகுக்கின்றன.

நமது புவியைப் 'பாதுகாக்கவும்', 'தாய்க் கோளத்தைக்' காப்பாற்றவும், மக்களுக்கு கல்வி அளித்தல், சுற்றுச் சூழலைப் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்படுத்துதல் வளங்களை நன்முறையில் பயன்படுத்துதல், மாசடைதலை கட்டுப் படுத்துவதைக் குறித்த அறிவைப்புகட்டும் கல்வி, விரிவுரை, கருத்தரங்கம், நாடகங்கள், திரைப்படம் ஆகியவை முக்கியமானதாகும். மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி நமது தாய்ப்புவியை பாதுகாப்பது மிக அவசியமானதாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சிகள்

**I. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும் :**

1. சுற்றுச்சூழல் என்றால் என்ன?
2. உயிரியல் சூழ்நிலையியல் - வரையறுக்க.
3. சுற்றுசூழல்மாசடைதிலின்வகைகளைகுறிப்பிடவும்.
4. நீர் மாசடைதலைக் கட்டுப் படுத்த மேற்கொள்ள வேண்டிய முறைகள் யாவை?
5. உயிரினப் பன்மை என்றால் என்ன?

**II. பின்வருபவற்றை வரையறுக்க:**

6. உயிர்க் கோளம்.
7. சூழலியலின் அசம நிலை.
8. பூமியைப் வெப்பமயமாதல்.
9. பசுமைக் குடில் விளைவு.

10. ஓசோன் குறைதல்.

11. அமில மழை.

**III. நினைவில் கொள்ள வேண்டியவை:**

1. மாசடைதல்.

2. சுற்றுச் சூழல் தினவிழா.

3. குளோரோ ஃப்ளோரோ கார்பன் (CFC).

4. பூமியைப் பாதுகாத்தல்

**IV. செயல்பாடு:**

1. உலக வெப்பமய மாதலின் விளைவுகள் மற்றும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பட்டியல் செய்யவும்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

# பாடம் 28 பொருளியலின் அடிப்படைக்கருத்து

C1J1A9

**இந்த அத்தியாயத்தை கற்றபின் கீழ்க்காணும் அலகுகளைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்:**

- *பொருளாதார அடிப்படை கருத்துக்களைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.*
- *கோரிக்கை (தேவை) வழங்குதல், பகிர்தல் உற்பத்தி ஆகிய வற்றிற்கு இடையிலான தொடர்பை அறிதல்.*
- *தேசிய பொருளாதார மேம்பாடு*
- *உழைப்பின் முக்கியத்துவம்.*

©KTBS NOT TO BE REPUBLISHED

பொருளியலை எளிதாகப் புரிந்துகொள்வதற்கு, அதில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் நுட்பமான சொற்களை அறிந்து கொள்ள வேண்டும். இவற்றை நாம் அன்றாடம் பயன்படுத்துகிறோம். எனினும் பொருளியலில் அவற்றிற்குக் குறிப்பட்ட பொருள் மற்றும் பரப்பெல்லை உள்ளது. சில தேர்வு செய்யப்பட்ட கருத்துக்களை சுருக்கமாக அறிய வேண்டிய தேவையுள்ளது.

**தேவை (கோரிக்கை):** கோரிக்கை என்பது தேவைமட்டுமல்லாது, வாங்குகிற மனப்பான்மை மற்றும் பணத்தை செலவழிக்கும் ஆற்றல் இருந்தால் மட்டுமே தேவை எனப்படுகிறது. பொதுவாக விலைகள் அதிகரிக்கும் நேரங்களில் தேவை குறைவாகிறது. விலைகள் குறையும்போது தேவை அதிகரிக்கிறது.

உற்பத்தித்துறையில் தேவைகளின் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தேவை அதிகரித்தால்

உற்பத்தி, வேலைவய்ப்பு, வருவாய் மற்றும் வழங்குதல் ஆகியவை அதிகரிக்கின்றன. மக்களின் வாழக்கைத்தரம் மேம்படுகிறது. நாடும் முன்னேற்றத்தை நோக்கிச்செல்கிறது. கோரிக்கை குறைவாகும்போது பொதுவாக உற்பத்தி, வருவாய் மற்றும் விநியோகம் ஆகியனவும் குறைவாகிறது. வேலைவாய்ப்பின்மை அதிகரிக்கிறது மக்களின் வாழ்க்கைத் தரமும் தாழ்ந்து போகிறது நாட்டின் மேம்பாடும் குறைகிறது. இக்காரணத்தினால் தேவை அல்லது கோரிக்கை நாட்டின மேம்பாட்டிற்கான குறியீடு என்று கருதப்படுகிறது.

**வழங்குதல் :**

வழங்குதல் என்பது கொடுக்கப்பட்ட விலையில் சந்தையில் விற்பனைக்கு எளிதில் கிடைக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவு ஆகும். பொதுவாக விலை அதிகரிக்கும் போது சந்தைக்கு வரும் பொருள் மற்றும் சேவைகளின் அளவும் அதிகரிக்கிறது. உற்பத்தி, வேலை வாய்ப்பு மற்றும் வருவாய்களும் மேம்படுகின்றன. மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்கிறது. நாடும் முன்னேற்றத்தை நோக்கி நகர்கிறது. விலைகள் குறைவாகும்போது விற்பனைக்கு எடுத்து வரப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவும் குறைகின்றன. உற்பத்தி மற்றும் வருவாய் தாழ்ந்து போனால் வேலை வாய்ப்பின்மை அதிகரித்து மக்களின் வாழக்கைத்தரமும் குறைவாகிறது. நாட்டின் வளர்ச்சியும் தாழ்ந்து போகிறது.

சில சூழல்களில் இந்த விதிமுறை செயல்படாதபோதும், விலை எவ்வாறிருந்தாலும் விநியோகம் அதே நிலையில் இருக்கும்.

தேவை மற்றும் வழங்கல் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருந்திருக்கின்றன. ஒன்று மாற்றமடையும் போது

© KTBS NOT TO BE REPUBLISHED

மற்றொன்றில் அதன் எதிர்விளைவை உண்டாக்கி, விலைகள் மூலம் வெளிப்படுகிறது. எடுத்துக் காட்டாக, தேவை குறையும்போது வழங்கலும் குறைகிறது. விலையும் குறைகிறது தேவை அதிகரிக்கையில் விலையும் அதிகரிக்கிறது மொத்ததில் தேவை மற்றும் வழங்கல் சந்தையின் செயல்பாடுகளின் இரண்டு ஆதாரத் தூண்கள் ஆகும்.

**உற்பத்தி :**

பொருளியலில் உற்பத்தி என்ற சொல்லிற்கு பரந்த அர்த்தம் உள்ளது. உற்பத்தியுடன் பணியின் உற்பத்தியும் சேர்கிறது. புறத்தோற்றத்தில் உற்பத்தியால் செல்வத்தைப் பெறலாம் என்று காணப்பட்டாலும், உண்மையில் மனிதனால் எதையும் புதியதாக உருவாக்கயியலாது. இயற்கையாகக் கிடைக்கும் செல்வத்தை பயனுள்ளதாக சேகரிக்கும் பணியை மட்டும் அவனால் செய்ய இயலும் எனவே உற்பத்தி என்றால், சிறந்த பயன்பாட்டு உருவாக்கம் என்று மட்டும் அறிய வேண்டும். இவ்வாறு, உற்பத்தியான பண்டத்திற்கு மதிப்பு இருக்க வேண்டும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

உற்பத்தி செயல், விநியோகம், போக்குவரத்து, வியாபாரம் போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கியது. உற்பத்தியான பொருட்கள்-சேவைகள் நுகர்வோரிடம் சென்றடைந்தால் மட்டுமே உற்பத்தி செய்பாடு முழுமையடைகிறது.

இப்பணி தொடங்கி முடிவுறும் வரை சில பொருள்-செல்வத்தின் உதவி தேவைப்படுகிறது. செல்வம், உழைப்பு, முதலீடு மற்றும் நிறுவனங்களின் நிறைவில்லாமல் உற்பத்தி செய்வது கடினமாகும். பொருளியலாளர்கள் இக்காரணிகளை உற்பத்திக் காரணிகள் என்றழைக்கிறார்கள். இந்நான்கு காரணிகளும் குறிப்பிட்ட வீதத்தில் ஒன்றிணைந்து

செயல்பட்டால் மட்டுமே இச்செயல் சாத்தியமாகிறது. நுகர்வோர்களின் நலனுக்காக கோடிக்கணக்கான மக்கள் பல்வேறு வீதங்களிலும் முறைகளிலும் இடைவிடாது உற்பத்தியில் ஈடுபட்டு உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**பகிர்தல் :** பகிர்தல் என்பது ஒரு முக்கிய பொருளாதார செயல்பாடாகும். உற்பத்திக் காரணிகளின் மூலம் இடைவினை மூலம் உற்பத்தியான பொருட்களை விநியோகிப்பது இதன் செயலாகும். தேசிய வருவாய்களின் பகிர்ந்தளிக்கப்படும் நிலம், தொழிலாளி, முதலீடு மற்றும் நிறுவனங்கள் முறையே வாடகை, கூலி, வட்டி மற்றும் இலாபம் போன்றவை ஆகும். உற்பத்திக்காரணிகளின் பங்கு வீதத்தின் அடிப்படையில் பகிர்தல் நடைபெறுகிறது. தேவை மற்றும் வழங்கல்களுக்கு இடையே சமநிலை பாதுகாக்கப்பட வேண்டும். உற்பத்தி செயல்முறைக்கு இடையுறு விளையாத வகையில் இருக்க வேண்டும். எந்தவொரு உற்பத்திக் காரணிக்கும் சிறப்பு சலுகை அளிக்கக் கூடாது, புறக்கணிக்கக் கூடாது. இது பொருளாதார அமைப்பின் சமநிலை வளர்ச்சிக்குத் தேவையாகும் உற்பத்தி, தேவை, வழங்கல், நுகர்தல், விலைகளைத் தீர்மானித்தல் போன்றவை பகிர்வதை பெருமளவு பாதிக்கின்றன.

**நுகர்வு :**

பொருட்கள் பணிகளின் தேவையை திருப்திகரமாக பயன்படுத்துவதே நுகர்வு. இவ்வாறு நுகரப்படுகின்ற பொருட்கள், பணிகள் நல்லவையாகவோ தீயவையாகவோ இருந்தாலும், மனிதனின் தேவையைத் திருப்தியடையச் செய்யும் வரையிலும் அவை நிரந்தரமாக நுகரப்படுகின்றன. நவீன பொருளியலில் நுகர்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

**நுகர்வு இரண்டு வகைப்படும்:**

1. உற்பத்திக்காக பொருட்கள் - பணிகளைப் பயன்படுத்துதல்.

© KTBS NOT TO BE REPUBLISHED

2. தயாரித்த பொருட்கள் - பணிகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்துதல்.

அதாவது, நுகர்வு என்பது தேவையினை திருப்தி அடையச் செய்தலாகும்.

ஒரு நாட்டின் பெருமை, வாழ்க்கைத்தரம் மற்றும் வேலைவாய்ப்புகளின் வீதம் அந்நாட்டின் நுகர்வின் வீதத்தைச் சார்ந்திருக்கிறது. ஏனெனில், பொருளாதார அமைப்பு மனிதத் தேவையைத் திருப்தியைடையச் செய்வதற்காக உருவாக்கப்பட்டது. மேலும் இது நுகர்விற்குப் பிறகு முடிவடைகிறது. நுகர்வதற்கு உற்பத்தி செய்ய வேண்டும் மற்றும் விநியோகிக்க வேண்டும். தேவைக்காகவே உற்பத்தி செய்யப்படுகிறது. நுகர்வு அதிகரிக்கையில் உற்பத்தி மற்றும் வருவாய் அதிகரித்து, நல்ல விலை மதிப்பைப் பெற்று முழுமையான வேலைவாய்ப்புகளும் வழங்கப் படுகின்றன. நுகர்வு குறையும்போது, உற்பத்தி வருவாய் மற்றும் விலை மதிப்பு குறைந்து வேலை வாய்ப்பின்மை தலை தூக்குகிறது. நுகர்வு மற்றும் உற்பத்திகளினிடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. இவ்விரண்டும் நாட்டின் வருவாயின்மீது பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

**பயன்பாடு :**

பொருளியலில் அதிகளவில் பயன்பாட்டிலிருக்கும் சொற்களில் பயன்பாடு ஒன்றாகும். மனிதனின் தேவையை திருப்தியடையச் செய்யும் ஆற்றலே பயன்பாடு எனப்படும். நேரடியாகவும் மறைமுகமாகவும் மனிதனின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அனைத்து பொருட்கள் -பண்டங்கள் பயன்பாட்டைப் பெற்றுள்ளன. ஆனால், இதனை அளவிடுவதுகடினமாகும். இதுதனிப்பட்டநபர்களிக்கிடையே மாறுபடுகிறது. ஒரே நபரிடம் இது ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு வகையிலும் மாறுபடுகிறது. விருப்பம் மற்றும் பயன்பாட்டு வேறுபாடுகளை ஏற்படுத்தலாம்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பயன்பாடு திருப்தியல்ல ஆனால் திருப்தியை அளிக்கும் ஆற்றலாகும். பயன்பாட்டின் விளைவினால் பயன்பாட்டில் இருக்கும் பண்டம் சேவைகள் நமக்கு திருப்தி அளிக்கின்றன. பயன்பாட்டிற்கும் பயன்படுத்தும் முறைக்கும் தொடர்பில்லை. பொதுவாக இரண்டு சொற்களையும் ஒரே பொருளில் பயன்படுத்தினாலும், அது சரியல்ல. எடுத்துக்காட்டாக, போதைப் பொருட்களால் பயனில்லையெனிலும், பயன்பாட்டில் உள்ளன. பொருளியலாளர்கள் பயன்பாட்டை நான்கு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்.

1. அடிப்படை பயன்பாடு 2. வடிவப் பயன்பாடு

3. காலப் பயன்பாடு 4. இருப்பிடப் பயன்படாடு

***1) அடிப்படைப் பயன்பாடு :*** வடிவில் (உண்மையான வடிவம்) பயன்படுத்தக் கூடிய பொருட்கள் - சேவைகளின் அடிப்படைய பயன்பாடு எனப்படும். எ.கா: நீர், பழம், முட்டை போன்றவை.

***2) வடிவ்பயன்பாடு :*** இயற்கை நமக்கு அளித்த பொருட்களுக்கு ஒரு வடிவத்தைக் கொடுத்து, பயன் பாட்டிற்கு உகந்ததாக செய்வதை வடிவப்பயன்பாடு என்கிறார்கள். எடுத்துக் காட்டாக, கற்களுக்குச் சிற்பியளிக்கும் சிலை வடிவம், மரத்திற்கு மரவேலை செய்பவர் கொடுக்கும் நாற்காலி அல்லது மேசை வடிவம்.

***3) காலப் பயன்பாடு :*** ஏதேனும் ஒரு பொருள் (பண்டம்) ஏராளமாகக் கிடைக்கும் காலத்தில் சேகரித்து, அவை கிடைக்காத காலத்தில் வழங்கினால். பொருட்களின் மதிப்பு அதிக காலம் பயன்பாட்டைப் பெறுகிறது. எடுத்துக்காட்டாக மாங்காயை அதன் காலத்தில் சேகரித்து ஊறுகாயாக மற்றொரு காலத்தில் வழங்குதல்.

©KTBS NOT TO BE REPUBLISHED

**4) இருப்பிடப் பயன்பாடு :** ஓர் இடத்தில் கிடைக்கும் பொருட்களை தொலைவில் உள்ள இடங்களுக்கு எடுத்துச் சென்று நுகர்வோர்களுக்கு கிடைக்கச் செய்வதை இடம் பயன்பாடு என்கிறார்கள். எடுத்துக்காட்டாக, சிம்லாவில் விளையும் ஆப்பிள் குடகின் ஆரஞ்சுப்பழங்கள், போன்வற்றை பெங்களூரில் கிடைக்கச் செய்தல்.

**விலை :**

பணமாக வெளிப்படும் மதிப்பு விலை ஆகும். ஒரு பொருள் அல்லது கு மாறாக கொடுக்க வேண்டிய பணமே விலை மதிப்பு ஆகும். விலைகளைப் பற்றி படிப்பதற்கு பொருளியலில் முக்கிய இடமுள்ளது. பொருட்கள் மற்றும பணிகளுக்கான அதிக தேவையிருக்கும் போது, அவற்றை அதிக எண்ணிக்கையில் மக்களுக்கு விநியோகிப்பது கடினமாகிறது. இங்கு விலைமதிப்பு முக்கிய பங்கு வகிக்கின்றன தேவை மற்றும் ளை சமன்படுத்துவது விலையாகும். இவ்வாறு

சமன்படுத்தப்பட்ட விலைகள் சமயிடைவெளிகளில் இருக்கும். தேவையும் வழங்கலும் கூட நிலையாகயிருக்கும். பொருட்கள் -களின் குறைபாடு அல்லது அதிகரிப்பு இருப்பதில்லை. ஒருவேளை தேவை மற்றும் வழங்கல்களுக்கு இடையே வேறுபாடு ஏற்பட்டால் பொருட்கள் - களின் விலையிலும் பலவேறுபாடுகள் உண்டாகிறது. ஆனால் காலப்போக்கில் மற்றொரு விலை நிர்ணயிக்கப்படுகிறது.

அப்பொழுது தேவை, வழங்கல் மற்றும் விலை சமன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு விலையை தீர்மானிப்பதில் தேவை மற்றும் வழங்கல் முக்கிய பங்கு வகிக்கிறது.

NOT TO BE REPUBLISHED © KTBS

**இலாபம் :**

பொதுவான மொழியில் உற்பத்தி செய்வதற்கு செலவு செய்த பிறகு மீதமுள்ள பணம் இலாபம் எனப்படும். ஆனால் பொருளியலில், உற்பத்தி செயல்முறையில் செய்த பணிக்குப் பதிலாக உற்பத்தியாளர் பெறும் பலனே இலாபம். உற்பத்திக்குத் துணைபுரியும் வாடகை தொழிலாளியின் ஊதியம் மற்றும் வட்டியைக் கொடுத்தபிறகு மீதமாகும் பணம் இலாபமாகும். இவ்வாறு பணம் அதிகரிக்கலாம் அல்லது குறைவாகலாம். சில நேரங்களில் எதுவும் மீதமாகாமல் இருக்கலாம். இங்கு உற்பத்தியாளரே இலாப நட்டங்களை ஈடுகட்ட வேண்டும்.

பொருளியலில் இலாபம் முக்கியமானது. இது பொருளாதார செயல்பாட்டின் முக்கிய மூலமாகும். இலாபம் அதிகரிக்கையில் பொருளாதார செயல்பாடுகளும் அதிகரிக்கின்றன. நாட்டிலும் மேம்பாடு விரைவாக ஏற்படுகிறது. இலாபம் குறைவானால் பொருளாதாரச் செயல்பாடுகளும் குறைவாகிறது. நாட்டின் வளர்ச்சியும் குன்றுகிறது. பொருளாதார நெருக்கடி உண்டாகிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

**கூட்டுறவு :**

பொருளியலில் கூட்டுறவுக்கு சிறப்பான இடம் உள்ளது. இது தொழிற்சாலை அமைப்பு எனினும், இது உண்மையில் வாழ்க்கை முறையாகக் கருதப்படுகிறது. புறக்கணிக்கப்பட்ட, செல்வாக்கற்ற பொது மக்களுக்கு கூட்டுறவு ஒளிவிளக்காகும். அனைவரும் கூடி உழைத்தால் செல்வந்தர் மற்றும் செல்வாக்குள்ளவர்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்ட வசதிகளை பொதுமக்களும் பெறலாம் என்பதை கூட்டுறவு முறை சாதித்துக் காட்டியுள்ளது. இம் முறை யாரையும் சுரண்டுவதில்லை.

கூட்டுறவு முறை, மக்களின் விருப்பத்துடன் ஒன்று கூடி சமத்துவடிப்படையில் தங்களது பொருளாதார நலனிற்காக உழைக்கிற ஒரு தனிச்சிறப்புடைய அமைப்பு ஆகும். சுய

உதவியால் சாதிப்பது இதன் முக்கிய நோக்கமாகும். இங்கு போட்டி இருக்காது. அனைத்து செயல்பாடுகளையும் உறுப்பினரே கவனித்துக் கொண்டு இலாபத்தை பகிர்ந்து, பங்குகளுக்குத் தக்க இலாபம் அளித்து உறுப்பினர் வாங்கும் பொருட்களின் விலையடிப்படையில் தள்ளுபடி அளிக்கிறது. இடைத்தரகர்களுக்கு இங்கு இடமில்லை. சுரண்டுதலுக்கும் வாய்ப்பில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குனர் அமைப்பின் செயல்பாடுகளைக் கவனித்துக் கொள்வார். உறுப்பினர்கள் அனைவரும் முதலாளிகள் மற்றும் பணியாளர்கள்.

''ஒவ்வொரு வருக்காகவும் அனைவரும், அனைவருக்காகவும் ஒவ்வொருவரும்'' என்பது கூட்டுறவின் ஆற்றல் ஆகும். இங்கு ஒவ்வொரு பங்குதாரருக்கும், எத்தனை பங்குகள் வைத்திருந்தாலும் ஒரு வாக்குரிமையை மட்டுமே பெற்றுள்ளார்கள். மேலும் ஒரு நபர் பெறக்கூடிய பங்குகளின் எண்ணிக்கைக்கு வரம்பு உள்ளது. உறுப்பினராவதற்கும், உறுப்பினர் நிலையிலிருந்து விலகவும் சுதந்திரம் உள்ளது.

©KTBS NOT TO BE REPUBLISHED

### தேசிய வருமானம் (வருவாய்)

ஒரு நாட்டில் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் பணமதிப்பு அளவு. ஒரு நாடும் ஒரு தனி நபரைப் போல வருமானம் ஈட்டுகிறது இதனை தேசிய வருமானம் என்பர். தேசிய வருவாய் எனப்படுகிறது. இது அந்த நாட்டின் அனைத்து உற்பத்தி துறைகளிலிருந்து பெறுகிற ஆண்டு வருவாயின் மொத்தம் ஆகும். நாட்டின் வருமானத்தைக் கண்க்கிடுவது கடினமாகும். குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளில் இது ஒரு பெரிய பிரச்சனையாகும்.

தேசிய வருவாய் அளவு உற்பத்தியைப் பொறுத்தமைகிறது. உற்பத்தி அதிகரிக்கையில் நாட்டின் வருவாயும் பெருகுகிறது. (மக்கள் தொகை அடிப்படையில்)

பெருகி வரும் தேசிய வருவாய் நாட்டின் மேம்பாடு மற்றும் மக்களின் வாழக்கைத் தரத்தை காண்பிக்கிறது. இது நாட்டின் பொருளாதார மேம்பாட்டின் குறியீடாகும். அழிந்துவரும் தேசிய வருமானம் நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் மக்களின் கீழ்மட்ட வாழ்க்கை நிலையைக் குறிக்கிறது. இக்காரணத்தால், அனைத்து நாடுகளும் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு தொடர்ந்து முயற்சி செய்கிறது.

**தலா வருவாய் (தனிநபர் வருமானம்)**

ஒரு நாட்டின் வருவாயை அந்நாட்டின் மொத்த மக்கட்தொகையினால் வகுத்தால் கிடைக்கும் வருவாய் தனிநபர் வருவாய் ஆகும். தேசிய வருவாய் பெருகுவதால் தனிநபர் வருவாயும் பெருகுகிறது. மக்களின் வாழக்கைத்தரம் உயர்கிறது. இதன் விளைவாக மக்கள் அமைதியான வாழக்கை நடத்துகிறார்கள்.

தேசிய வருவாய் குறைந்ததால் தனிநபர் வருவாயும் குறைகிறது. மக்கள் வாழ்க்கைத் தரமும் தாழ்கிறது. வறுமை மற்றும் நோய்கள் பெருகி மக்கள் வாழ்க்கை நடத்துவது கடினமாகிறது. பல்வேறு நாட்டு மக்களின் தனிநபர் வருவாயை ஒப்பிட்டால், அந்த நாடுகளின் பொருளாதார நிலைமை மற்றும் வாழ்க்கைத்தரத்தை அறிந்து கொள்ளலாம். இதனால் நமது நிலைமைகளின் தெளிவான படத்தைக் காணலாம்.

**கடின உழைப்பு :**

கடிமையாக உழைக்க வேண்டும், சம்பாதித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பது மனிதனின் இயல்பாகும். உழைப்பு உடல்சார் மற்றும் உளஞ்சார்பாகவும் இருக்கலாம். தோண்டுதல், உழுதல், பளு

@KTBS NOT TO BE REPUBLISHED

தூக்குதல், இயந்திரங்களை இயக்கும் பணி போன்றவை உடலால் உழைப்பதற்கான எடுத்துக்காட்டுகளாகும். ஆசிரியர், விஞ்ஞானி, வழக்கறிஞர், தொழில்நுட்பாளர், போன்றவை உளசார் உழைப்பிற்கு எடுத்துக்காட்டுகளாகும். உடல் உழைப்பிற்கு உடல் ஆற்றல் தேவை. உளஞ்சார் உழைப்பிற்கு அறிவாற்றல் தேவை முன்னேறிய நாடுகளில் கல்விகற்றவர்களின் எண்ணிக்கை பெருகுவதற்கு அவர்கள் உழைக்கிறார்கள்.

மேல், கீழ் என்ற பாகுபாடு இருக்கக் கூடாது. சமூகமும் பாகுபாடு செய்யக்கூடாது. இரண்டு வகையான தொழிலாளர்களுக்கும் சமமான மரியாதை அளிக்கவேண்டும். உடல் உழைப்பு தாழ்வானது, உளஞ்சார் உழைப்பு உயர்ந்தது என்ற உணர்வுடன் பாகுபடுத்தகூடாது.

மகாத்மா காந்தியவர்கள் உழைப்பின் முக்கியத்துவத்தில் பெருமளவு நம்பிக்கை கொண்டுள்ளார். இதனை அவர் செய்தும் காண்பித்துள்ளர். தேசத்தலைவர்களுடன் பேசு வதற்கும் துப்புரவாளர்களிடம் பேசுவதற்கும் அவர் சமமான முக்கியத்துவம் அளித்தார்.

கல்வி கற்றோர் பலர் உளஞ்சார் தொழிலைத் தேர்ந்தெடுத்து பணிகளைத் தேடுவார்கள். அனைவருக்கும் வேலையவாப்பு கிடைப்பதில்லை. உடல்சார் பணிகள் அதிகமுள்ளன. மேல்-கீழ் என்ற பாகுபாடுகளைத் தவிர்த்து தனக்குக் கிடைக்கும் பணியைச் செய்வதற்கு தயாராக வேண்டும். அப்பொழுது தான் தொழிலின் முக்கியத்துவம் புரிகிறது, சமத்துவ உணர்வு ஏற்படுகிறது. நாட்டின் கட்டுமானம் எளிதாகிறது.

NOT TO BE REPUBLISHED @KTBS

## பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களில் ஏற்ற சொற்களால் நிரப்புக:**

1. தேவை பெருகும் போது உற்பத்தி __________
2. பொருட்கள் - சேவைளின் தேவையை நிறவேற்றப் பயன்படுத்துவது __________
3. ஒரு தேசிய வருவாயை நாட்டின் மொத்த மக்கட்தொகையால் வகுத்தால் கிடைப்பது __________
4. பொருட்களை சரக்கு வண்டிகளில் ஏற்றி, இறக்கும் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் பிரிவு __________ எனப்படும்.
5. பள்ளிகளில் மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியரின் பணி __________ எடுத்துக்காட்டாகும்.

**II. வினாக்களுக்கு விடையளிக்க:**

6. பொருளியலில் தேவை என்பதன் பொருள் என்ன?
7. உற்பத்தித் துறையில் தேவையின் விளைவு தாக்கம் என்ன?
8. பகிர்தல் என்றால் என்ன?
9. பகிர்தலைத் திறம்படச் செய்வது எப்படி?
10. தேசிய வருவாய் மற்றும் தனிநபர் வருவாயின் வேறுபாடுகைள வரைக.
11. தொழிலில் உழைப்பின் முக்கியத்துவம் என்ன?

**III. செயல்பாடுகள் :**

1. உங்கள் பள்ளிக்கு அருகிலுள்ள சந்தைக்குச் சென்று விலைமதிப்பில் ஏற்றத்தாழ்வு ஏற்படுக்கையில் தேவையில் எவ்வாறு ஏற்றத்தாழ்வு உண்டகிறது. என்பதைக் கவனிக்கவும்.
2. பள்ளி நூலகத்திலுள்ள செய்தித்தாள்களை படித்து பொருளாதாரத் துறையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை தினமும் கவனிக்க வேண்டும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

# பாடம் 29 பல்வேறு வணிக நிறுவனங்களின் தோற்றம்

**இந்த அத்தியாயத்தை கற்றபின் கீழ்க்காணும் அலகுகளைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்:**

- *வணிக நிறுவனங்களின் வகைகளைப் பற்றி அறிதல்.*
- *கூட்டாண்மை நிறுவனங்களின் அமைப்புகள், நிறைகள் மற்றும் குறைகள் அறிதல்.*
- *கூட்டாண்மை நிறுவனங்களை பதிவு செய்தலின் வழிமுறைகள்.*
- *இந்தியாவின் இந்து கூட்டுக்குடும்ப நிறுவனங்கள் வணிக பற்றி அறிதல்.*

@KTBS NOT TO BE REPUBLISHED

இன்று பல வகையான வணிக நிறுவனங்களை நாம் காண்கிறோம். அவை நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. தனியார் துறை வணிக நிறுவனங்கள் (Private sector Business organisations)
2. பொதுத்துறை வணிக நிறுவனங்கள் (Public sector Business organisations)
3. கூட்டுத்துறை வணிக நிறுவனங்கள் (Joint Sector Business organisations)
4. அரசுடைமை வணிக நிறுவனங்கள் (Public Utilities)

இந்த அத்தியாயத்திலும் தொடரும் அத்தியாயத்திலும் தனியார் துறை நிறுவனங்களின் இரண்டு முக்கிய வகைகளான சிறுதொழில் நிறுவனங்கள் மற்றும் பேரளவுத் தொழில் நிறுவனங்களைப் பற்றி சுருக்கமாக அறிந்து கொள்ளலாம்.

சிறுதொழில் நிறுவனங்களில் முக்கியமானவை :

- தனியுரிமை (தனிநபர்) வணிக நிறுவனங்கள் (Sole Trading Concerns)
- கூட்டாண்மை நிறுவனங்கள் (Partnership Firms)
- இந்து கூட்டுக் குடும்பவணிக நிறுவனங்கள் (Hindu undivided Family Firms)

**1) தனியுரிமை (தனிநபர்) வணிக நிறுவனங்கள் :**

ஒரு தனிநபரால் நடத்தப்பட்டுகிறது. அவனே முதலாளி மேலாளர் இலாபமடைபவன், நட்டயீடு செய்பவன், மூதலீடு செய்பவனாக இருப்பான்.

**இயல்புகள்:** இவை மிகப் பண்டைய காலத்திலிருந்தே நடைமுறையிலிருக்கும் நிறுவனங்கள் ஆகும். இவற்றை எளிதாக அமைக்கலாம். இவற்றின் முதலாளி உரிமையாளர் ஒருவனே ஆவான். இவை உரிமையாளர் இலாபத்திற்காக நடத்தப்படுகின்றன. இவற்றின் உரிமையாளர் தனது சொந்த மூதலீட்டையும் சொந்த திறன்களையும் பயன்படுத்தி வணிகம் செய்கிறார். இவற்றைத் தொடங்குவதற்கும் மூடுவதற்கும் எந்த வித சட்டபூர்வ வறுப்புறத்தல்கள் இல்லை. இவற்றில் உண்டாகும் நட்டங்களுக்கான பொறுப்பை உரிமையாளனே ஏற்றுக் கொள்கிறான். இவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களின் உதவியையும் பெறுகிறார்கள். சில நேரங்களில் தமக்கு துணைபுரிவதற்காக பணியாளர்களை நியமிக்கிறார்கள். பொதுவாக இவை சிறு அளவிலிருக்கும். ஆனால் சமீப நாட்களில் பேரளவிலும் இவ்வணிக நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**தனியுரிமை வணிக நிறுவனங்களின் நிறைகள் :**

1) இவற்றை தொடங்குவதற்கு சட்ட வழிமுறைகள் எதுவும் தேவையில்லை.

©KTBS NOT TO BE REPUBLISHED

2) சொந்த முதலீட்டைக் கொண்டு தொடங்கலாம்.

3) அன்றாட நடவடிக்கைகளை செலாற்றுவது கடினமானத்தல்ல

4) நிறுவனத்தில் பெற்ற அனைத்து இலாபங்களையும் தனி நபரே அனுபவிக்கிறான். வணிக மேலாண்மையை சுயமாகக் கவனித்துக் கொள்கிறான்.

5) இவர் வாடிக்கியாளர்களுடன் நேரடி தொடர்பில் இருப்பார்கள்.

6) பல சமூகப் பணிகளையும் செய்வார்கள்.

7) அவற்றுள், வேலைவாய்ப்பு அளிப்பது.

8) செல்வம் மற்றும் பொருளாதார அதிகார ஆற்றல்களுக்கு பகிர்வதற்கு துணை புரிதல்.

9) வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப பண்டங்களை வழங்குதல்.

10)சரியான நேரத்தில் அரசாங்கத்திற்கு வரி செலுத்துதல்.

**தனியுரிமை வணிக நிறுவனங்களின் குறைகள் :** இந்நிறுவனங்களிலும் சில குறைகள் காணப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை;

1) முதலீடு வரம்பிற்குட்பட்டிருப்பதால் பேரளவில் மேம்படுத்தக் கடினமாகிறது.

2) மேலாண்மை திறன்களின் குறைபாடு (குறிப்பிட்டளவில்) இருக்கும்.

3) ஒருவரை விட இருவர் அல்லது மேற்பட்ட நபர்கள் தீர்மானங்களை மேற்கொள்வது உகந்ததாகும்.

4) அனைத்து நட்டங்களையும் ஒருவனே ஈடுகட்டவேண்டும்.

5) உரிமையாளரின் இறப்பு அல்லது வணிகம் நொடிந்து போனால் நிறுவனங்களை மூட வேண்டிய நிலை உண்டாகிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED

## 2) கூட்டாண்மை நிறுவனங்கள் (Partnership Firms)

தனியுரிமை நிறுவனங்களின் வரையறைகள் கூட்டாண்மை நிறுவனங்களை அமைக்க வழிவகுக்கின்றன. இந்நிறுவனங்களில் இரண்டு அல்லது மேற்பட்டவர்கள் இணைந்து வணிகம் நடத்துவார்கள். கூட்டாண்மை நிறுவனங்களைத் தொடங்குவதற்கும் நடைமுறைப்படுத்தவும் 1932யில் கூட்டாண்மை நிறுவனங்கள் சட்டம் அமலுக்கு வந்தது. இச்சடத்தின் 4 வது பிரிவின் கீழ் அனைவரும் மேற்கொண்ட அல்லது அனைவரின் சார்பாக ஒருவர் செயலாற்றி வணிக இலாபங்களைப் பகிர்ந்துகொள்ள ஒப்புதல் அளித்த நபர்களிடையே உள்ள தொடர்பு கூட்டாண்மை ஆகும். பொருளாதார வணிகமென்றால் அதிகபட்சம் பத்துபேர் கூட்டாளிகளும், பொதுவான கூட்டாண்மை வணிகம் என்றால் அதிகபட்சம் இருப்பது பேர் பங்குதார்கள் இருக்க வேண்டும். இவை கூட்டாண்மை நிறுவனங்கள் என்று பங்கேற்பாளர்களை பங்குதார்கள் என்றும் அழைப்பார்கள்.

**பங்குதாரர்களின் வகைகள் :** கூட்டாளிகளில் பல வகைகள் உள்ளன. பொதுவாகக் காணப்படுபவை:

**1. செயலாற்றும் பங்குதாரர்கள் :** இவர்கள் குறிப்பிட்ட முதலீடு செய்து. இலாபநட்டங்களை விகிதாசாரத்தில் பகிர்ந்து கொள்வார்கள். வணிகச் செயல்பாடுகளில் ஈடுபாடுடன் செயலாற்றுவார்கள்.

**2. செயலாற்ற பங்குதாரர்கள் :** இவர் முதலீடு பங்களிப்பிருக்கும் செயல்பாடுகளில் ஈடுபடுவதில்லை. முதலீட்டு விகிதாசாரத்தால் இலாபத்தை பகிர்ந்து கொள்வார். அதேபோன்று நட்டம் அல்லது அதற்கான பொறுப்புகளை ஏற்றுக் கொள்வார்.

**3. பெயரளவு பங்குதாரர்கள் :** முதலீட்டில் இவர்களின் பங்களிப்பில்லை. அன்றாட செயல்பாடுகளில் பங்கேற்பதில்லை. இலாபத்திலும் இவருக்கு பங்கீடு இருப்பதில்லை. ஆனால் விகிதாசாரத்தின்படி நட்டத்தில் (கடன்கள்) பொறுப்பேற்க வேண்டும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

*4.* இளவயது பங்குதாரர்கள் : பதினெட்டு வயதிற்குட்பட்டவர்கள் கூட்டாளிகளாக முடியாது. ஆனால் அனைத்து கூட்டாளிகளின் ஒப்புதலுடன் இளவயதினர் கூட்டாளிகளாக இணைத்துக் கொள்ளப்படுவார். இவருக்கு இலாபத்தை பகிர்ந்து கொள்ளலாம். நட்டத்திற்கு பொறுப்பேற்க வேண்டியதில்லை. புதிதாக தொடங்கப்படும் நிறுவனங்கள் இளவயது பங்குதாரர்களை சேர்த்துக் கொள்ளலாம்.

இவ்வகைகளைத் தவிர, இரகசிய பங்குதாரர், வரையறுக்கப் பட்ட பங்குதாரர், பகுதி பங்குதாரர், இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் பங்குதாரர் போன்றவர்களும் இருப்பார்கள்.

**கூட்டாண்மைப் பத்திரம் (Partnership Deed)**

பொதுவாக இந்த பத்திரம் எழுதப்பட்டிருக்கும். சில நேரங்களில் வாய்மொழியாகவும் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். எழுத்துப் பத்திரம் முத்திரைத் தாளில் எழுதப்பட்டிருக்கும். இது நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடுகிறது. நிறுவனத்தின் பெயர், முகவரி, வணிகம் நடைபெறும் இடம், வணிகத்தின் இயல்பு, துணைக்கிளைகளிருந்தால் அவற்றின் முகவரி, தொடங்கிய தேதி, ஒவ்வொரு பங்குதாரரின் மூதலீடு பங்களிப்பு, இலாபநட்டங்களின் விகிதாசாரம், பங்குதாரர் ஒவ்வொருவரின் கடமை, பணி பகிர்வு, புதிய பங்குதாரர்களை சேர்க்க பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், பங்குதாரர்களில் ஓய்வு பெற்றிருந்தால் அல்லது இறந்து விட்டால் மறு மதிப்பீடு தீர்மானிக்கும் முறை, பங்குதாரர்களிகளிடையே கருத்து வேறு பாடுகளை தீர்ப்பதற்காக பின் பற்ற வேண்டிய முறைகள் போன்றவை இந்த ஆவணத்தில் உள்ளடங்கியுள்ளன.

**கூட்டாண்மை நிறுவனத்தின் நன்மைகள் :**

***1.* எளிதான அமைப்பு:** இந்நிறுவனம் பதிவு கூட்டாளிகளின் விருப்பம் என்பதால், அதிக சட்ட விதிமுறைகள்

NOT TO BE REPUBLISHED ©KTBS

தேவையில்லை. எனவே இத்தகைய நிறுவனங்களை எளிதாகத் தொடங்கலாம்.

**2. அதிக முதலீடு :** கூட்டாண்மை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பங்குதாரர் நிறுவப்படுவதால், மூதலீடும் அதிகளவில் இருக்கும்.

**3. அதிக நிபுணத்துவம் (திறமை):** இங்கு ஒருவருக்கு மேற்பட்ட பங்குதாரர்களின் பணி பகிர்வு கொள்கையின் மூலம் செயல்படலாம். இதனால் திறமை அதிகரிக்கிறது.

**4. நம்பத்தன்மை :** பங்குதாரர்களின் வரையிலா பொறுப்பிருப்பதால் நிறுவனத்தின் நம்பகத்தன்மை அதிகரிக்கிறது.

**5. வணிக நட்டப் பகிர்வு :** இந்த நிறுவனங்களில் நட்டம் ஏற்பட்டால், அனைத்து பங்குதாரர்களும் இலாப பங்கீடு விகிதா சாரத்தில் நட்டத்தையும் பகிர்ந்து கொள்கிறார்கள். நட்டத்திற்கான பொறுப்பை ஒருவரே ஏற்கவேண்டாம்.

**6. வணிக இரகசியம் :** நிறுவனத்தின் கணக்குப் பதிவுகளை பொதுவெளியில் வெளியிடத் தேவையில்லை. எனவே வணிக இரகசியங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

**7. எளிமையான கலைப்பு :** இந்நிறுவனங்களை எளிதாக கலைத்துவிடலாம். எந்தவொரு பங்குதாரரையும் பிற பங்குதாரர்களுக்கு 14 நாட்கள் முன்னறிவிப்பு செய்தோ அல்லது பிற பங்குதாரர்களின் ஒப்புதலுடனோ கலைத்து விடலாம்.

### கூட்டாண்மை நிறுவனங்களின் குறைகள்

1. சில சூழல்களில் பங்குதாரர்களிடையே ஒற்றுமை இன்மையால் அவர்களிடையே வேறுபாடுகள் உண்டாகின்றன.

2. பங்குதாரர்களின் எண்ணிக்கையில் அதிகபட்ச வரம்பு இருப்பதால் அதிக முதலீடு பகிர்வு இருக்க சாத்தியமாகாது.

© KTBS NOT TO BE REPUBLISHED

3. பொறுப்புக்கு வரையறை இல்லாததால், இது பலர் பங்குதாரர்களாவதை ஊக்குவிப்பதில்லை.

4. சில பங்குதாரர்களின் பொறுபற்ற தன்மையாலும் அறிவின்மையான தீர்மானங்களாலும் நிறுவனங்களில் பின்னடைவு ஏற்படுகிறது.

5. நிலைத்தன்மை குறைபாடு: ஒரு பங்குதாரரின் கூட்டாளி மரணம் அடைந்தாலோ நொடிந்த பங்குதாரர்களோ நிறுவனம் கலைக்கப்பட வேண்டியிருக்கும்.

6. பங்குதாரர் தனது பங்கை வேறாருவருக்கு எளிதாக மாற்ற இயலாது.

7. அரசாங்காத்தின் கட்டுபாடு குறைபாட்டாலும் கணக்குப் பத்திரங்களை வெளியிடுவதில் கட்டுபாடு இல்லத்திருப்பதாலும் பொதுமக்கள் ஆதரவு அளிப்பதில்லை.

8. இரண்டு அல்லது மேற்பட்ட பங்குதாரர்கள் இருப்பதால் வணிக இரகசியத்தை பாதுகாப்பது கடினமாகிறது.

**கூட்டாண்மை நிறுவனங்களைப் பதிவு செய்தல்**
**(Registration of Partnership Firms)**

தனிநபர் உரிமை நிறுவனங்கள் பதிவு செய்யத் தேவை இல்லை. இந்திய கூட்டாண்மை நிறுவனங்களின் 1932 வது சட்டத்தின்படி கூட்டாண்மை நிறுவனங்களின் பதிவு செய்தல் அவசியமாகும். ஆனால் வலுகட்டாயப்படுத்துவதில்லை. புதிவு செய்தல் கூட்டாளிகளின் விருப்பத்திற்குரியது. பதிவு செய்வதற்குக் குறிப்பிட்ட படிவங்களில் சரியான விவரங்களை நிரப்பி, குறிப்பிட்ட கட்டணத்தை அரசால் நியமிக்கப்பட்ட பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் விவரங்களை நுணுக்கமாக பரிசோதித்து அனைத்தும் சரியாக உள்ளது என்று உறுதி செய்து பிறகு

NOT TO BE REPUBLISHED @KTBS

பதிவு ஆவணத்தை நிறுவனத்திற்கு, அதாவது பதிவுச் சான்றிதழை வழங்குவார்.

**நிறுவனங்கள் பதிவு செய்வதால் ஏற்படும் நன்மைகள்:**

- கடன் தொகை நூறு ரூபாய்களுக்கு மிகையாக யிருந்தால், பதிவு செய்யப்பட்ட நிறுவனம் மூன்றாவது நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம். பதிவு செய்யப்படாத நிறுவனம் இவ்வாறு வழக்கு தொடுக்க இயலாது.
- பதிவு செய்யப்பட்ட நிறுவனம் கடன் தொகையை வசூலிப்பதற்காக பிற பங்குதாரர்களுக்கு எதிராக கடனை வசூலிப்பதற்கு வழக்குத் தொடுக்கலாம்.
- பதிவு செய்யப்படாத நிறுவனத்திற்கு எதிராக அல்லது அதன் பங்குதாரர்களுக்கு எதிராக மூன்றாவது நபர் வழக்குதொடுக்கலாம்.
- நிறுவனம் கலைப்புக்காகவும் அல்லது கணக்கு களின் தீர்வுக்காகவும் நிறுவனத்தின் எந்தவொரு பங்குதாரரும் மற்ற பங்குதாரர்கள் அல்லது நிறுவனத் திற்கு எதிராக வழக்கு தொடுக்கலாம்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

**3) இந்து கூட்டுக் குடும்ப வணிக நிறுவனங்கள் :**

இவ்வகையான நிறுவனங்கள் இந்தியாவில் மட்டுமே உள்ளன. இவை ''இந்து சட்ட''த்தின் கீழ் நடைமுறைபடுத்தப் படுகின்றன. இவை இந்து குடும்பத்தின் ஆண்களால் நிறுவப்பட்டவை ஆகும். தொடர்ச்சியாக மூன்று தலைமுறைகளின் ஆண் உறுப்பினர் இந்நிறுவனங்களின் உறுப்பினர்களாவர். கூட்டு குடும்பத்தின் அதிக மூப்புற்ற ஆண் உறுப்பினர் வணிகத்தின் மேலாண்மை வகிப்பார். அவரை 'கர்த்தா' என்றழைப்பார்கள். உரிமை

அவைருக்கும் இருந்தாலும், கர்த்தா தான் வணிகத்தை நிர்வகிப்பார். கர்த்தாவின் பொறுப்பு வரையறையற்றது. பிற உறுப்பினர்களின் பொறுப்பு வணிகத்தில் அவர்களின் முதலீடு வீதத்தின் வரம்பிற்குட்பட்டது.

## பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களில் ஏற்ற சொற்களால் நிரப்புக:**

1. ஒரு தனி நபரால் நடத்தப்படும் நிறுவனம் ________ என்று அழைக்கப்படுகிறது.
2. கூட்டாண்மை நிறுவனங்களை நடத்துவதற்கு ________ ல் கூட்டாண்மை நிறுவனச் சட்டம் அமல்படுத்தப்பட்டது.
3. பொருளாதார வணிகம் செய்யும் கூட்டாண்மை நிறுவனம் அதிகபட்சம் ________ பங்குதாரர்களுக்கு உட்பட்டிருக்கும்.
4. இந்து கூட்டுக் குடும்ப வணிக நிறுவனத்தை மேலாண்மை செய்பவரை ________ என்றழைப்பர்.
5. இந்தியாவில் மட்டுமே நடைமுறையிலிருக்கும் சிறியளவிலான வணிக நிறுவனம் ________

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்க:**

6. சிறிய அளவிளான வணிக நிறுவனங்களில் முக்கியத்துவம்.
7. சிறு தொழில் வணிக நிறுவனங்கள் நுகர்வோருக்கு எவ்வாறு துணை புரிகிறன்றன?
8. கூட்டாண்மை நிறுவனங்கள் என்றால் என்ன?
9. செயலற்ற பங்குதாரர் யார்?

NOT TO BE REPUBLISHED @KTBS

10. கூட்டாண்மை நிறுவனங்களை கலைத்தல் எவ்வாறு எளிமையானது என்பதை வரைக.

## III. கீழ்க்காணும் வினாக்ளுக்குப் பொருத்தமான முறையில் விடையளிக்கவும் :

11. தனியுரிமையாளர் நிறுவனத்தின் நான்கு பயன்களை எழுதுக.
12. தனியுரிமையாளர் நிறுவனத்தின் நான்கு குறைகளைக் குறிப்பிடுக.
13. கூட்டாண்மை நிறுவனங்கள் எவ்வாறு தொடங்கப் படுகின்றன? சுருக்கி வரைக.
14. கூட்டாண்மை நிறுவனங்களின் பல்வேறு வகையான பங்கு தாரர்களைக் குறிப்பிடுக.
15. கூட்டாண்மை நிறுவனங்களின் ஏதேனும் நான்கு நிறைகளைக் குறிப்பிடுக.
16. கூட்டாண்மை நிறுவனங்களின் குறைகளில் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக.
17. கூட்டாண்மை நிறுவனங்களைப் பதிவு செய்வதால் உண்டாகும் நன்மைகள் யாவை?
18. இந்து கூட்டுக் குடும்ப வணிக அமைப்பைப் பற்றி சுருக்கி வரைக.

## IV. செயல்பாடுகள்:

1. சிறப்பான முறையில் விளம்பரம் செய்யப்பட்ட ஏதேனும் இரண்டு விளம்பரங்களைச் சேகரிக்கவும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

| பாடம் 30 | பேரளவு தொழில் வணிக நிறுவனங்கள் |
|---|---|

N3D1Y5

**இந்த அத்தியாயத்தை கற்றபின் கீழ்க்காணும் அலகுகளைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்:**

- *பெரிய அளவிளான வணிக*
- *கூட்டுறவு சங்கங்களின் பண்புகள், நிறுவனங்களைக் குறிப்பிடுதல், வகைகள், பயன்கள் மற்றும் குறைகளைப் புரிந்து கொள்ளுதல்.*
- *கூட்டுப் பங்கு முதலீட்டு நிறுவனங்களின் அமைப்பு, வகைகள், நிறைகள் மற்றும் குறைகளை அறிதல்.*
- *பன்னாட்டு நிறுவனங்களின் இயல்புகள், நன்மைகள் மற்றும் குறைகளைப் பற்றி அறிதல்.*

@KTBS NOT TO BE REPUBLISHED

தேவையான முதலீட்டு பற்றாக்குறை, நிர்வாகத்திறமை குறைபாடு, நிலைத்தன்மையற்ற இயல்பு, எல்லையற்ற பொறுப்புகள் போன்ற இடர்பாடுகள் தனியுரிமை, கூட்டாண்மை, நிறுவனங்கள் மற்றும் இந்துக் கூட்டுக் குடும்ப வணிக நிறுவனங்கள் பாதிப்புகளாகின்றன. இத்தகைய இடர்பாடுகளைக் களைவதற்கு பேரளவுவணிக நிறுவனங்கள் நடைமுறைக்கு வந்தன.

பேரளவு வணிக நிறுவனங்களில் முக்கியமானவை:

1. கூட்டுறவு சங்கங்கள் (Co-operative Societies)
2. கூட்டுப்பங்கு முதலீட்டு நிறுவனங்கள் (Joint Stock Companies)
3. பன்னாட்டு நிறுவனங்கள் (Multi National Corporations)

**1. கூட்டுறவு சங்கங்கள் (Co-operative Societies)**

இவை உலக முழுவதும் காணப்படுகின்றன. இவை தன்னார்வ நிறுவனங்களாக, பொருளாதாரப் பின்னடைவு உறுப்பினர்களின் நன்மைக்காக உருவாகிய அமைப்புகளாகும். உலகில் முதன்முதலாக கூட்டறுவு

சங்கம் 1844 யில் ராபர்ட் ஓவன் என்பவரால் இங்கிலாந்தில் நிறுவப்பட்டது. இது வாடிக்கையாளர் கூட்டுறவு சங்கமாக இருந்தது. பொதுவாக கூட்டுறவு சங்கங்கள் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், பொருளாதார சுரண்டிதலிலிருந்து விடுபடவும், பொருளாதார சமநிலையிலுள்ள நபர்களால் நிறுவப்படுகின்றன. எ.கா: (1) உழவர்கள் வேளாண்மை கடன் கூட்டுறவு சங்கங்களை நிறுவி, அவற்றின் மூலம் குறைந்த வட்டி வீதத்தில் கடனைப் பெற்று வட்டித்தொழிலாளர்களின் பிடியிலிருந்து விடுபடுகிறார்கள். (2) கூட்டுறவு சந்தை ச ங்கங்களை அமைத்து, தங்கள் விளைப் பொருட்களைத் தகுந்த விலையைப் பெறுகிறார்க்ள.

**கூட்டுறவு சங்கங்களின் உருவாக்கம் :**

இந்தியாவில் கூட்டுறவு சங்களின் உருவாக்கம் கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 1912ன் மாநில அரசின் நிர்வாகத்தின் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. கூட்டுறவு சங்கங்களின் அமைப்பு மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும்.

**கூட்டுறவு சங்கங்களின் பொதுவாள இயல்புகள்:**

1) இவை நபர்களின் தன்னார்வ அமைப்புகள்.
2) சாதி, மதம், இனம் மற்றும் பாலின பாகுபடின்றி அனைத்து வயது வந்தவர்களுக்கு (18 வயிதிற்கு மேற்பட்டவர்) உறுப்பினர் உரிமை அளிக்கிறது.
3) உறுப்பினர் எண்ணிக்கைக்கு அதிகபட்ச வரம்பு இல்லை.
4) மக்களாட்சி முறையிலான மேலாண்மை, இருக்கும் அதாவது சங்கத்தின் பொதுக்கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினரும் கலந்துக் கொள்ளலாம் மற்றும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவர்களின் பங்கு முதலீடு அளவினைப் பொருட்படுத்தாமல் ஒரே ஒரு வாக்களிக்கும் உரிமை உண்டு.
5) சங்கத்தின் இலாபத்தை பங்கு முதலீட்டு வீதத் தின் அடிப்படையில் (6.25%) ற்கு குறையாமல் பகிர்ந்தளிக்கப் படும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

6) இலாபத்தில் ஒரு பகுதி பொது நிதிக்கு மாற்றப்படுகிறது.

7) இவற்றின் நிலைமை மற்றும் கட்டுப்பாடு அரசாங்க மேற்பார்வைக்கு உட்பட்டது.

**கூட்டுறவு சங்கங்களின் வகைகள்:**

1. கடன் கூட்டுறவு சங்கங்கள் (Credit Co-operative societies)
2. சந்தை கூட்டுறவு சங்கங்கள் (Co-operative Marketing societies)
3. உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் (Producers Co-operative societies)
4. நுகர்வோர்கள் கூட்டுறவு சங்கங்கள் (Consumers Co-operative societies)
5. உழவர்கள் கூட்டுறவு சங்கங்கள் (Farmers Co-operative societies)
6. வீடுகட்டுமான கூட்டுறவு சங்கங்கள் (House building Co-operative societies)
7. பல்வேறு வகை பணிகளுக்கான கூட்டுறவு சங்கங்கள் (Co-opertive societies for different services)

NOT TO BE REPUBLISHED @KTBS

**கூட்டுறவு சங்கங்களின் பயன்கள் :**

1) இவற்றை அமைப்பது எளிதாகும்.

2) அதிக முதலீடு தேவையில்லை.

3) உறுப்பினர்களுக் கிடையே பாகுபாடுகள் இருப்பதில்லை, அனைவருக்கும் சம உரிமை உண்டு.

4) மக்களாட்சி முறையில் நடைபெறுகிறது.

5) ஒவ்வொருவருக்கும் ஒரே ஒரு வாக்குரிமை அளிக்கப் படுகிறது.

6) உறுப்பினர்களின் பொறுப்பு வரம்பிற்குட்பட்டு இருக்கும்.

7) உறுப்பினர் சேமித்து வைக்கப் பழகுகிறார்கள்.

8) இது முலாளித்துவம் மற்றும் சம உடைமை முறைகளுக்கிடையிலான சிறந்த அமைப்பாக விளங்குகின்றன.
9) ''ஒருவருக்காக அனைவரும் அனைவருக்காக ஒருவர்''

என்பதை கூட்டுறவு சங்கங்களின் குறிக்கோளாகும்.

**கூட்டுறவு சங்கங்களின் குறைகள் :**

1) முதலீட்டிற்கு வரையறை உள்ளதால் பேரளவு தொழில் செய்வது இயலாது.
2) தகுதியான பணியாளர்கள் கிடைப்பது அரிது.
3) மேலாண்மையைத் தவறான முறையில் பயன்படுத்த வாய்ப்புள்ளது.
4) பணத்தைத் தவறான முறையில் பயன்படுத்தவும் வாய்ப்புள்ளது.
5) ஊழல் மற்றும் தனிப்பற்றுச் சார்பிற்கும் வாய்ப்புள்ளது.

**இந்தியாவில் கூட்டுறவு முறை இயக்கம் :** இந்தியாவில் கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் 1904யில் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டன, 1912யில் ஒரு சட்டம் அமலுக்கு வந்து பதிவு செய்வதை வலுகட்டாயமாக்கியது. விடுதலைக்குப் பிறகு ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு சங்கங்கள் முக்கியத்துவம் அடைந்தன. தற்போது நம்நாட்டில் சுமார் எட்டு லட்சம் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. கருநாடக மாநிலத்தின் முதல் கூட்டுறவு சங்கம் தற்போதைய கதக் மாவட்டத்தின் கதக் தாலுகாவில் கணகினஹாள் என்ற இடத்தில் தொடங்கப்பட்டது. பெங்களூரு நகர மைய கூட்டறவு சங்கம் 1905யில் தொடங்கப்பட்டது. தார்வார்டு மாவட்ட்த்தில் கூட்டுறவு சங்கங்கள் நிறுவுவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால் அம்மாவட்டத்தை ''கூட்டுறவு சங்கங்களின் தொட்டில்'' என்றழைக்கிறார்கள்.

NOT TO BE REPUBLISHED @KTBS

**2) கூட்டுப் பங்கு முதலீட்டு நிறுவனங்கள் (Joint Stock Companies)**

இந்நிறுமங்களின் உருவாக்கம், விரிவாக்கம், செயல்படுதல், நற்சான்றிதழ் மற்றும் கலைத்தல் ஆகியவற்றை இந்திய நிறுவனச்சட்டம் 1956 சீரமைத்தது. இதன்கீழ் 'ஒரு நிறுவனம் என்றால் சட்டபூர்வமாக உருவாக்கப்பட்ட, ஒரு நிலையான வழித்தோன்றல் மற்றும் ஒரு பொதுவான முத்திரையுடைய மற்றும் தனி சட்டபூர்வமான அமைப்பாகும்'

ஹென்ஸின் கூற்றுப்படி தனிப்பட்டவர்களால் இலாபத்திற்காக இயங்கும் தன்னார்வ அமைப்பு மற்றும் இதன் மூதலிட்டை மாற்றத்தக்க பங்குகளாக இருக்கும் உடைமையுரிமை உறுப்பின ருரிமையின் விதிகளுக்கு உட்பட்டுள்ளது.

கூட்டுப் பங்கு முதலீட்டு நிறு வனங்களின் வர்த்தகம் அதன் பங்குதாரர்களால் நடத்தப் படுகிறது. பங்குதாரர்கள் தங்கள் பங்கு மூலதனத்திற்கு ஏற்ப பங்குகளை விற்பதிலும் வாங்குவதிலும் பங்கு கொள்கின்றனர், முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தைப் பொறுத்து அவர்களுக்கு லாபத்தின் சதவீதம் கிடைக்கும்.

**3) பன்னாட்டு நிறுவனங்கள் (Multi National Corporations) :**

தென் கொரியா நாடுகளில் மிக அதிகமான பல நாடுகளின் நிறுவனங்களைக் கொண்டுள்ளன. (உதாரணத்திற்கு ஹுண்டாய மற்றும் சாம்சங்) இத்தகைய வணிக நிறுவனங்கள் 1860ற்கு முன்னரே தோற்றுவிக்கப்பட்டன. அதாவது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முக்கியத்துவமடைந்தன. தொடக்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தான் இவற்றிற்குத் தாய்வீடாக இருந்தன. பிறகு ஐரோப்பாவின் சில நாடுகளிலும் ஜப்பான் நாடுகளிலும் தோன்றின. தற்போது முன்னேறிய நாடுகளில் வளர்ச்சியடைந்துள்ளன. எ.கா: தென்கொரியா (இந்திய நிறுவனங்களான டாடா, பிர்லா, இன்ஃபோஸிஸ், விப்ரோ போன்ற இந்திய பன்னாட்டு நிறுமங்கள் உள்ளன)

**பன்னாட்டு நிறுவனங்களின் பொருள் மற்றும விளக்கம் :** இவை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் நிறுவன உரிமையைப் பெற்றிருக்கும் மற்றும் வணிகத்தை மேலாண்மை செய்கின்றன. சர்வதேச தொழிலாளர்

NOT TO BE REPUBLISHED @KTBS

அமைப்புன் (ILO) அறிக்கையினப்டி இவற்றின் மேலாண்மை மையம் ஒரு நாட்டிலிருக்கும் மற்றும் இவை பல நாடுகளில் தங்கள் வணிகத்தை நடத்துகிறார்கள். எ.கா: சோனி (ஜப்பான்), கொக்கோ கோலா (அமெரிக்கா), சாம் சங்க் (தென் கொரியா), ஹிந்துஸ்தான் லீவர் (யு.கே) ஃபிலிபஸ் (ஹாலந்து), க்ளாஸ்கொ (யு.கே) போன்றவை. மைய அலுவலம் இருக்குமிடத்தை தாயகம் என்கிறார்கள். எல்லையிலுள்ள நாடுகளை சார்புநிலை நாடுகள் என்பார்கள்.

**இயல்புகள் :**

1. இவை மாபெரும் நிறுவனங்களாகும். சொத்துகளும் வணிக நடவடிக்கைகளும் பேரளவில் இருக்கும்.
2. இவை குறைந்தபட்சம் ஆறு நாடுகளில் வணிகச் செயல்பாடுகளை நிகழ்த்துகின்றன.
3. இவை தமது வணிக எல்லைக்குட்பட்டு இருக்கும் நாடுகளில் பண்டங்களை உற்பத்தி செய்கின்றன.
4. இவை பல நாடுகளில் உற்பத்தி, விற்பனை மற்றும் பிற வசதிகளைப் பெற்றுள்ளன.
5. தலைமை அலுவலகம் மையப்படுத்தப்பட்ட கட்டுப் பாட்டை பெற்றுள்ளது.
6. இவை உலகச் சந்தையில் முக்கிய பங்கு வகிக்கின்றன.
7. தங்களது எல்லைக்குட்பட்ட நாடுகளுக்கு தொழில்நுட்ப வசதிகளை வழங்குகின்றன.

**பயன்கள் :**

**தாயக நாடு (பிறந்த நாடு)**

1. குறைந்த விலையில் சார்ந்துள்ள நாடுகளிலிருந்து மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. சாரந்துள்ள நாடுகளிலிருந்து தொழில் நுட்பம் மற்றும் நிர்வாகத் திறமைகளைப் பெறலாம்.
3. சார்புநிலை நாடுகளுக்கு மூலப்பொருட்களையும் தயாரித்த பொருட்களையும் ஏற்றுமதி செய்வதால் இலாப வீதம் அதிகரிக்கிறது.

© KTBS NOT TO BE REPUBLISHED

4. சார்பு நிலை நாடுகளால் இலாபத்துடன் உரிமத் தொகை (Royalties) மற்றும் நிர்வாக ஒப்பந்தங்களின் மூலம் பேரளவில் வருவாய் பெற இயல்கிறது.
5. தாயக நாடுகளில் அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன.

**சார்பு நாடுகளால் பயன்கள் :**

1. சார்புநிலை நாடுகளிலும் முதலீட்டு வீதம் அதிகரிக்கிறது.
2. சார்புநிலை நாடுகள் முன்னேறுகின்ற நாடுகள் எனில் அவற்றிற்கு தொழில்நுட்ப வசதிகளை செய்து கொடுக்கின்றன மற்றும் நிர்வாக செயல் முறைகள் மூலம் புரட்சி ஏற்படுத்துகின்றன.
3. சார்பு நிலை நாடுகள் ஏற்றுமதியை அதிகரித்து, இறக்குமதியை குறைக்க துணைபுரிகின்றன.
4. உயர்தர பண்டங்களைத் உற்பத்தி செய்ய சாத்திய மாகிறது.
5. இந்நாடுகளில் வேலைவாய்ப்புகள் பெருகுகின்றன ஆராய்ச்சிகள் மற்றும் மேம்பாடுகளை அதிகரிக்க துணை புரிகின்றன.
6. உள்நாட்டு வளங்களை அதிகளவு பயன்படுத்த துணை புரிகின்றன.

**பன்னாட்டு நிறுவனங்களின் குறைகள் :**

பெருமளவு இலாபத்தை தாயக நாடுகள் பெறுகின்றன. இவை சார்ந்துள்ள நாடுகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. சார்பு நாடுகளில் போட்டி அழிந்து பன்னாட்டு நிறுவனங்களின் தனியுரிமை அதிகரிக்கிறது. இந்நிறுவனங்கள் மனித உரிமைகளை அவமதிக்கும் பல புகார்கள் இவற்றில் உள்ளன. சார்பு நாடுகளில் இயற்கை வளங்களின் குறைபாடு ஏற்படும் சாத்தியக் கூறுகள் உள்ளன. இவை பல சூழல்களில் வரிகளைச் செலுத்துவதைத் தவிர்க்கும் முறைகளைப் பின்பற்றுகின்றன. இவை சார்பு நாடுகளில் பணியாளர்களை சுரண்டுதல் செயல்களை நடத்துகின்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED

சார்பு நாடுகள் அதிக முதலீடு செய்யுமாறு வற்புறுத்துகின்றன. பல நேரங்களில் தொழில் நுட்பங்களை தகுந்த முறையில் வழங்குவதில்லை இவை பல நேரங்களின் சார்பு நாடுகளின் அரசியல் நடவடிக்கைகளில் தலையிடுகின்றன.

இந்தியாவில் சமீபகாலம்வரை, அயல்நாட்டு முதலீட்டிற்கு பல கட்டுபாடுகள் இருந்தன. 1991 யின் பொருளாதார தாராளமயமாக்களால் பல பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது வணிகத்தை விரிவாக்கியுள்ளன மற்றும் பல இந்திய நிறுவனங்களும் வெளிநாட்டில் தங்களது வணிகத்தின் மூலம் பன்னாட்டு நிறுவனங்களாக உள்ளன. எ.கா: விப்ரோ, இன்ஃபோஸிஸ். தற்போது இந்தியாவில் 40 பன்னாட்டு நிறுமங்கள் உள்ளன.

NOT TO BE REPUBLISHED @KTBS

தனியுரிமை வியாபார நிறுவனங்கள், கூட்டாண்மை நிறுவனங்கள், இந்து பிரிவினையற்ற குடும்ப வணிக நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், கூட்டுப்பங்கு முதலீட்டு நிறுமங்கள் மற்றும் பன்னாட்டு நிறுமங்களைப் பற்றி சுருக்கமாக அறிந்து கொண்டோம். மேலும் அரசாங்க உடைமை நிறுவனங்கள், பொதுத்துரை நிறுவனங்கள், பொதுப்பயன் தொழில் நிறுவனங்கள் போன்றவையும் நடைமுறையிலுள்ளன.

- **அரசாங்க உடைமை நிறுவனங்கள் :** இவை அரசாங்கத்தால் பொதுப்பயன்பாட்டிற்காக உடைமையாக்கப் பட்டன. இவை அரசாங்கத்தின் ஒரு துறையாகி, அதற்குத் தொடர்புடைய அமைச்சரின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன. இவற்றை மைய அரசாங்கம், மாநில அரசாங்கம் மற்றும் உள்ளாட்சி அரசாங்களால் தொடங்கப்பட்டு, தங்கள் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தியுள்ளன. எ.கா. சுரங்கம், உலோகம் கப்பல் கட்டுதல், இயந்திரங்கள் போன்றவை.

- **கூட்டு உரிமை நிறுவனவங்கள் :** இவை அரசாங்கம் மற்றும் பொதுமக்களின் கூட்டு உரிமை நிறுவனங்களாகும். எ.கா: இந்தியாவின் குஜராத் மாநில உரங்கள் நிறுவனம், கொச்சின் தூய்மிப்பாலைகள் போன்றவை.

• பொதுப்பயன் தொழில் நிறுவனங்கள் : இவை அரசாங்க பொறுப்பேற்பு தொழில் நிறுவனங்கள் ஆகும். ஆனால், இவை பொதுமக்களுக்கு மிகத் தேவையான பண்டங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றும் அமைப்பாக நிறுவப்பட்டன. ஆனால் இலாபம் அடையும் நோக்கமில்லை. எ.கா: சமையல் வாயு, மின்சாரம் வழங்குதல், தபால், தொலைத்தொடர்பு முதலியன.

பங்குச் சந்தை: கூட்டுப்பங்கு முதலீட்டு நிறுமங்களின் முதலீட்டை சிறு பிரிவகளாக பிரிக்கிறார்கள். இந்த முதலீட்டின் ஒவ்வொரு பிரிவும் பங்கு என்றழைக்கப் படுகிறது. இந்த பங்குகளையும் கடன் பத்திரங்களையும் (Debentures) வாங்கும் மற்றும் விற்கும் வசதிகள் உள்ளன. கூட்டுப்பங்கு முதலீட்டு நிறுமனங்கள் சட்டத்தின கீழ் பங்குதாரர் தங்களது உடைமையிலுள்ள பங்குகளை எப்பொழுது வேண்டுமானாலும் விற்கலாம் மற்றும் யார் வேண்டுமானாலும் வாங்கி பங்குதாரர்களாலாம்.

இந்தியாவில் 1875இல் மும்பையில் முதன்முதலாக பங்குச் சந்தை அமைக்கப்பட்டது. தற்போதும் உலகில் இப்பங்குச் சந்தை மதிப்புமிக்க பங்குச்சந்தைகளில் ஒன்றாகும். மற்ற பங்குச் சந்தைகள் இரண்டாம் நிலை பங்குச்சந்தைகளாகும். பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் பங்குகளை விற்றல் மற்றும் வாங்குதல்களுக்கு வாய்ப்பு அளிக்கின்றன. தற்போது கொல்கத்தா பங்குச்சந்தை பெங்களூரு பங்குச் சந்தை போன்றவை தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் வணிகச் செயல்பாடுகளை நிகழ்த்துகின்றன. இவ்வனைத்து பங்குச் சந்தைகளும் செபி SEBI [Securities Exchange Board of India] என்ற இந்திய பாதுகாப்பு பரிமாற்ற வாரியத்தின் கட்டுபாட்டிற்கு உட்பட்டுள்ளது.

©KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக:**

1. இந்தியாவில் கூட்டுறவு சங்கங்களின் உருவாக்கம் இந்திய கூட்டுறவு சங்கங்களின் சட்டம் ________ கீழ் கட்டுப்படுத்தப்படுகின்றது.

2. உலகின் முதல் கூட்டுறவு சங்கம் __________ நாட்டில் __________ என்பவரால் நிறுவப்பட்டது.

3. கருநாடகத்தின் முதல் கூட்டுறவு சங்கம் __________ என்ற இடத்தில் தொடங்கப்பட்டது.

4. பன்னாட்டு நிறுவனங்கள் முதலில் __________ நாட்டில் தொடங்கப்பட்டது.

5. இந்தியாவைத் தாயகமாக கொண்டுள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்கான எடுத்துக்காட்டுகள் __________ மற்றும் __________.

6. இந்தியாவின் முதன்முதல் பங்குச்சந்தை __________ தொடங்கப்பட்டது.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு சரியான விடைகளை எழுதுக:**

7. கூட்டுறவு சங்கங்களின் சிறப்பியல்புகளை கூறுக.

8. கூட்டுறவு சங்கங்களின் வகைகள் யாவை?

9. கூட்டுறவு சங்கங்களின் முக்கிய பயன்கள் மற்றும் குறைகளைப் பட்டியலிடுக.

10. பன்னாட்டு நிறுவனங்களால் தாயக நட்டிற்கு உண் டாகும் பயன்கள் யாவை?

11. பங்குச் சந்தையின் முக்கிய செயல்கள் யாவை?

**III. செயல்பாடுகள் :**

1. உங்கள் ஆசிரியரின் துணையுடன் உங்கள் பள்ளியில் ஒரு மாணவர் கூட்டுறவு சங்கத்தைத் தொடங்குங்கள்.

©KTBS NOT TO BE REPUBLISHED